E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

டிசம்பர் 2019

விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



மாமன்னர் இராஜராஜ சோழனின் 1034-வது சதய விழா

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி I வணிக மேலாண்மைப் பள்ளி I வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி I சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



“கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்.”

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



KCLAS
KUMARAGURU

குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு
தொழில்நுட்பக் கல்லூரி

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக ‘ஒழுக்கமே வாழ்வு’ எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

KCT
BUSINESS SCHOOL

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

KUMARAGURU
institute of agriculture

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube
Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE

போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான ‘போர்ஜ்’ வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in





தேசிய இலக்கியம் 'திருக்குறள்'

தாய்லாந்து மொழியில் திருக்குறள் நூலினைத் தாய்லாந்தின் தலைநகர் பாங்காக்கில் பிரதமர் மோடி அவர்கள் நவம்பர் 2 அன்று வெளியிட்டார்.

தாய்லாந்து என்ற பெயரிலுள்ள 'தாய்' என்பது நாம் நினைக்கிற தமிழ்நாட்டுத் தாய் என்ற பொருளில் அல்ல. 'தாய்' என்பதற்குச் 'சுதந்திரம்' என்று பொருள். தாய்லாந்து என்றால், சுதந்திர தேசம்.

தாய்லாந்து மொழியில் திருக்குறள் வெளியாவது திருக்குறளுக்குப் பெருமை. தமிழுக்குப் பெருமை. இத்தகைய திருக்குறள்தான் இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கப்பட வேண்டும். நமக்குத் தேசியப் பறவை மயில். தேசிய விலங்கு புலி. தேசிய மலர் தாமரை. அந்த வரிசையில் தேசிய இலக்கியம் திருக்குறள் என அறிவிக்கப்பட்டால், பல் சமயங்களைக் கொண்ட பாரதத்திற்குப் பெருமை சேர்க்கும். இப்போது பாரதப் பிரதமர் திருக்குறளை உலக இலக்கியமாக உயர்த்தி உள்ளார்.

இதனைப் பற்றி அருட்செல்வர் 14 ஆண்டுகளுக்கு முன்பு 2005-இல் எழுதிய கட்டுரையை இம்மாத 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ. ஆர்.

தமிழ்மொழிக்கு எத்தனையோ சிறப்புகள் இருக்கின்றன. அந்தச் சிறப்புகளில் எல்லாம் தலைசிறந்தது செம்மொழித் தகுதிதான். இச்சிறப்பினால் நமது பண்டைய தமிழ்மொழி, உலகத்தில் உள்ள பெருமைமிக்க செம்மொழிகளில் ஒன்றாக அங்கீகாரம் பெறுகிறது.

தமிழ்மொழியில் உருவான திருக்குறள் தமிழர்களுக்கு மட்டும் உரியதல்ல. மனிதகுலம் முழுமைக்கும் உரியது.



டாக்டர் நா. மகாலிங்கம்

திருக்குறள் தமிழில் தான் தோன்றியது என்று ஆய்வாளர்கள்தான் முயன்று கண்டறிய முடியுமே தவிர, அந்தந்த மொழிகளில் அதை வாசிப்பவர்கள் அவ்வளவு எளிதாக அதனை உணர முடியாது.

அதற்கான காரணம், தான்சார்ந்த தமிழ்நாட்டின் அடையாளங்களாக இருக்கிற மலைகளையோ, ஆறுகளையோ, மரம் – செடி – கொடிகளையோ குறட்பாக்களில் அவர் குறிப்பிடவில்லை.

திருக்குறளில் 'தாமரை' எனப் பெயர் சுட்டப்பட்டுள்ளது என்றால், தாமரை மலர் தமிழ்நாட்டிற்கு மட்டும் உரியதல்ல. பாரதம் முழுவதும் பரவி உள்ளது.

"மரம்போல்வர் மக்கட்பண்பு இல்லாதவர்" என்பார் வள்ளுவப் பெருந்தகை. அந்த மரத்தை புளியமரம், வேப்பமரம் என்றால் தமிழ்நாடு என்று புரிந்துவிடும். அதனால் தான் அதனைப்

பொதுவான மரம் என்பதோடு அவர் நிறுத்திக் கொண்டார் போலும்.

தமிழ்நாட்டு ஆறுகளான பொன்னி, வைகை, தாமிரபரணி என எந்தப் பெயரையும் திருக்குறளில் பார்க்க முடியாது. ஆனால், "நீரின்றி அமையாது உலகு" என்பார்.

"மலையினும் மாணப் பெரிது" என்பார் வள்ளுவர். அந்த மலை பொதிகையா, விந்தியமா எனக் குறிப்பிடாமல் விட்டிருப்பார்.

இவற்றை ஊன்றிக் கவனித்த காரணத்தாலோ என்னவோ, தமிழ்நாட்டைப் பற்றி பாரதியார் உயர்வாகப் பாடுகையில் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றே பாடியுள்ளார்.

கி.பி. *1730*–இல் வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தார். அதற்கு முன்னரே கிரேக்க மொழியில் திருக்குறளின் சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டதாக ஜி. லட்சுமணப்பிள்ளை கூறியுள்ளார்.

1747–இல் பிரெஞ்சு மொழியில் திருக்குறள் திரட்டு என்ற பெயரில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

1794–இல் அறிஞர் கிண்டர்செலி குறட்பாக்களை 'அறிவுக் கடல்' என்னும் பெயரால் ஆங்கிலத்தில் தொகுத்ததாகத் தனிநாயக அடிகளார் கூறியுள்ளார். ஆங்கிலத்தில் மட்டும் ஏறத்தாழ நாற்பது மொழிபெயர்ப்புகள் திருக்குறளுக்கு உள்ளன.

1812–இல் தஞ்சை ஞானப்பிரகாசர் தான் முதன் முதலில் தமிழில் திருக்குறளை அச்சு வாகனம் ஏற்றி வெளியிட்டவர்.

1848–இல் பிரெஞ்சு நாட்டு அறிஞர் "ஏரியல்" திருக்குறளை 'மனித இனத்தின் இலக்கியப் பெட்டகம்' எனப் போற்றியுள்ளார். டாக்டர் ஜி.யு. போப் திருவள்ளுவரை 'அனைத்துலக மனிதனைப் பாடிய பாவலர்' என்று புகழ்ந்துள்ளார்.

ஜெர்மானிய அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர், 'உலக இலக்கியத்தில் திருக்குறளைப் போல உயர்ந்த மெய்யறிவு எந்த நூலிலும் போற்றப்படவில்லை' எனப் பாராட்டினார்.

ஜெர்மானிய அறிஞர்களான டாக்டர் கிரால், கோபன் ஹோவர் போன்றவர்கள் குறளின் பொருள் ஆழத்தை வியந்து போற்றியுள்ளனர்.


பகுத்தறிவுவாதி இங்கர்சால், 'திருக்குறள், அறிவை முதன்மையாகப் போற்றுகிற நூல்' எனப் பாராட்டிப் பேசியுள்ளார்.

ரஷ்யப் பேரறிஞர் டால்ஸ்டாய், காந்தியடிகளுக்கு எழுதிய கடிதத்தில் குறளின் மாண்பினைப் போற்றி உரைத்துள்ளார். அவர் வழியாகத்தான் அண்ணல் காந்தியடிகளே திருக்குறளின் பெருமையை உணர்ந்தார்.

அறிஞர் பெர்னாட்ஷா வள்ளுவரின் புலால் மறுத்தல் கொள்கையை வெகுவாகப் போற்றிப் பாராட்டியுள்ளார்.



ஜி.யு.போப்



டால்ஸ்டாய்

இவ்வாறு தேச வேறுபாடு இல்லாமல் உலகச் சான்றோர்களால் போற்றப்பட்டுள்ள நூல் திருக்குறள்.

அத்தகைய மகத்தான மானுடவியல் நூலுக்கு ஒரு சிறப்பான இடத்தை நாம் உருவாக்க வேண்டும். இந்தியாவாகிய நமது பாரத தேசம் பூரண சுதந்திரம் பெற்றதற்கான அடையாளங்கள் சில உள்ளன.

நமது தேசியப் பறவை மயில், தேசிய விலங்கு புலி, தேசிய மலர் தாமரை, தேசிய விளையாட்டு ஹாக்கி, தேசிய மரம் ஆலமரம், தேசிய கீதம் ‘ஜன கண மன’ என உள்ளன.

இதேபோல, தேசிய இலக்கியம் என்பது எது என்று இன்னும் அறிவிக்கப் படவில்லை.



வீரமாமுனிவர்

தேசிய இலக்கியம் என்பது இந்தியக் கலாச்சாரத்திற்கும் இந்திய ஆன்மீகத் திற்கும் ஏற்றதாக விளங்க வேண்டும்.

மகாபாரதம் அல்லது இராமா யணம் நமது தேசிய இலக்கியமாக அறிவிக்கப்படுமானால், அதனை இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும், சீக்கியர்களும், பௌத்தர்களும் ஏற்றுக் கொள்ளத் தயங்கலாம்.

நாம் அங்கீகரித்துள்ள மதச்சார்பற்ற கொள்கைக்கும் அது மாறுபட்டதென விமர்சிக்கப்படலாம்.

இந்தியாவிலுள்ள பிரபலமான எந்த இலக்கியத்தை அறிவித்தாலும் அது ஒரு மொழியினருக்கு மட்டுமே உரியதாக இருப்பதோடு, மற்ற மற்ற மொழியின ரின் வரவேற்புக்கு உரியதாக அமையுமா என்பது சந்தேகமே!

திருக்குறள், இறை நம்பிக்கையைப் பேசுகிற இலக்கியமானாலும் இறை வனை ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்தவனாகக் காட்ட வில்லை.

திருமால், சிவன், இராமர், கிருஷ்ணர் முதலிய ஹிந்துக் கடவுளர் பெயர் எதுவும் திருக்குறளில் இல்லை.

அதே சமயத்தில் கடவுளை ‘உலகியற்றியான்’, ‘எண் குணத்தான்’, ‘வாலறிவன்’, ‘ஆதிபகவன்’, ‘மலர்மிசை ஏகினான்’, ‘தனக்கு உவமை இல்லா தான்’ என்றே திருக்குறள் சித்தரிக்கிறது. இச்சொற்கள் எல்லாமே சமயம் கடந் தவை.


வள்ளுவர் காலத்தில் பரவலாக இருந்த சமண, பௌத்த, சைவ, வைணவ மதங்களை அடையாளப் படுத்தும் சொற்கள் எதுவும் திருக்குறளில் இடம்பெற்றுவிடாமல் இருப்பதில், வள்ளுவர் மிகுந்த கவனம் செலுத்தியிருக்கிறார் என்பது இதனால் புலனாகிறது.

ஆகவேதான், திருக்குறள் நமது சமய நல்லிணக்கத்திற்கும், பாரதத்தின் மதச் சார்பற்ற கொள்கையின் மாண்பினை வெளிப்படுத்துவதற்கும் ஏற்ற நூலாக விளங்குகிறது.

அதனால் தேசிய இலக்கியமாகத் தேர்வு செய்வதற்கு இந்நூல் பொருத்த முடையது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.


வள்ளுவரின் திருக்குறள் பாரத மக்களை மட்டுமல்ல, உலக மக்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட நூல். உலக மக்களை மட்டுமல்ல, உலக உயிரி னங்களைக் கருத்தில் கொண்டு எழுதப் பட்ட நூல்.

‘அறிவினால் ஆகுவது உண்டோ, பிறிதின்நோய் தன்நோய்போல் போற் றாக் கடை’ என்று ஒரு குறள்.




பெர்னாட்ஷா

“பிறரின்” நோய் என்று எழுதாமல், “பிறிதின்” நோய் என்று சுட்டியதன் மூலம் மனிதர்கள் மட்டுமல்ல, “அனைத்து ஜீவராசிகளின் துன்பங்களையும் துடைப் பதுதான் அறிவின் பயன்” என்று வள்ளுவர் உரைத் திருக்கிறார்.



காந்திஜி



பாரதியார்

'கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்' என்பது இன்னொரு குறள். உயிர்க் கொலையை வள்ளுவர் வெறுத்தவர் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மக்கள் மத்தியில் தீமைகளாகப் பரவியுள்ள மது, சூது, பொய், களவு, பரத்தமை முதலிய அனைத்தையும் கண்டனம் செய்தவர் திருவள்ளுவர். இந்த நோக்கில் பார்த்தால், சாத்வீக சமுதாயத்தை உருவாக்க வந்த ஒரு நல்ல இலக்கியம் 'திருக்குறள்.'

இந்தியாவிலுள்ள அனைத்து இனத்தவரும் வரவேற்கும் அம்சங்களைக் கொண்டுள்ள நூலாகத் திருக்குறள் விளங்குவதால், தேசிய இலக்கியமாக இருக்க திருக்குறள் பொருத்தமுள்ள நூலாகும்.

திருக்குறளின் பெருமையைக் கருதியே வடலூரில் வள்ளற்பெருமான் திருக்குறள் வகுப்பு நடத்தியிருக்கிறார் என்ற செய்தி உள்ளது.

இதனை மனதில் கொண்டுதான் மகாகவி பாரதி தமிழ்நாட்டின் பெருமையைப் பேசியபோது, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று சொன்னார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருக்குறளை தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டுமென்று அவர் மறைவு வரை குரல் கொடுத்து வந்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டுமென்று 2003-இல் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2005-ஆம் ஆண்டு மே மாதம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் கோவையில் கூடிய தி.மு.க. மாநாட்டில் திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தருணத்தில் திருக்குறளுக்காக நான் ஆற்றிய சில முயற்சிகளும் உண்டு.

ஆங்கிலப் புலமையையும் தமிழ்ப் புலமையையும் சமமாகக் கொண்ட திரு. எஸ்.எம். டயஸ் அவர்கள் மூலம், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மிகச் சிறப்பாக வெளியிட்டோம்.

அதற்கு முன்பு, டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஆர்.கே. சேத் அவர்களைத் திருக்குறளை ஹிந்தியில் மொழிபெயர்க்குமாறு செய்தோம். அவருடைய ஹிந்தி திருக்குறள் மத்தியப் பிரதேசத் தலைநகர் போபாலிலுள்ள ஆளுநர் மாளிகையில் அவரால் வெளியிடப்பட்டது.

இதேபோல, ஒரியா மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்து ஒரிசா ஆளுநராக இருந்த தொழிற்சங்கத் தலைவர் ஜி. ராமானுஜம் தலைமையில் புவனேஸ்வரத்தில் வெளியிட்டோம்.

ஏற்கனவே திரு. ரமேஷன் நாயர் திருக்குறளை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஏறக்குறைய 43 மொழிகளில் திருக்குறள் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியாகியுள்ளது.

மானுட வாழ்க்கையின் உன்னதங்களை மிக எளிய முறையில் ஒரு வழிகாட்டி போல வழங்கியுள்ள திருக்குறள், தேசிய இலக்கியமாக அறிவிக்கப்படுமானால், பாரதத்திற்கு அது நிச்சயமாகப் பெருமிதத்தைச் சேர்க்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 4

நான் பெற்ற இன்பம் : திருமூலர் ஒரு தவமுனிவர். அவர் பாடிய திருமந்திரம் ஒரு தமிழாகமம். இது சாத்திரமும், தோத்திரமும் ஆகும். இதற்கு அவர் வைத்த பெயர் மந்திரமாலை.

"பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடிநின்று ஓதலு மாமே" (25)

என்பது திருமந்திரம்.

பிறவா யாக்கைப் பெரியோன் சிவபெருமான். அவனை நந்தி என்று அழைப்பர் ஞானிகள். தேவர்கள் அப்பெருமானைத் தூய்மையுடன் சென்று கைகூப்பி மறக்காமல் இந்த மந்திரமாலையைச் சொல்லி வழிபடுகிறார்கள். நீங்களும் இதனை உறுதியாகப் பற்றிக்கொண்டு ஓதுங்கள் என்கிறார் திருமூலர். திருஞானசம்பந்தர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடினார். அப்பதிகத்தை வானமும் நிலனும் கேட்டன என்கிறார் சேக்கிழார்.

"ஞானமெய் நெறிதான் யார்க்கும் நமச்சிவா
யச்சொலாம் என்று
ஆனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க அருள்செய்துஇம்
மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக என்ன"

என்பது பெரியபுராணம். ஞானம் தரும் நற்றமிழ்ப் பாடல்கள் வானவருக்கும் வழிகாட்டும் மேன்மை படைத்தவை. திருஞானசம்பந்தர் பாடலைக் கேட்டது போலத் திருமந்திரத்தையும் வானவர் கேட்டனர்.

இவ்வளவு சிறப்புடைய பாடல்களைத் திருமூலர் பாடியதற்கு என்ன காரணம்? நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதுதான் காரணம். வானத்தைப் பற்றி நிற்கின்ற வேதப் பொருளானவன் இறைவன். அவன் நம் உடம்பில் கோயில் கொண்டிருக்கிறான். இதை உணர்த்துவதுதான் திருமந்திரம். உள்ளத்தில் கண்டால் தான் இறைவனை உலகத்தில் காணலாம்.

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு
நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்பது திருநாவுக்கரசர் பாடிய திருஅங்கமாலை. இதையே பின்னால் வந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

"உள்ளத்தின் உள்ளானடி – அதுநீ
உணர வேண்டுமடி
உள்ளத்திலே காண்பாயெனில் – கோயில்
உள்ளேயும் காண்பாயடி"

என்று பாடினார். ''கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே தெய்வம் வரும்'' என்கிறார் கவியரசர்

தொடர்ச்சி 15–ம் பக்கம்

விநாயகரைப் பற்றி உபன்யாசவாதிகள் கதாகாலட்சேபம் செய்கிறார்கள். இங்கே தரப்பட்டுள்ள புத்திப்பூர்வமான விளக்கத்தை விநாயகருக்கு யாரும் தருவதில்லை. இந்த விளக்கத்தைத் தந்திருப்பவர் பௌராணிகரா என்றால், இல்லவே இல்லை. நவீன மருத்துவம் படித்த நிபுணர். கல்லீரல் பற்றிய கல்வியைக் கற்றுத் தருபவர்.

உணவு உண்ட பிறகு அது செரிமானம் ஆக வேண்டும். அப்போதுதான் ரசமாக, ரத்தமாக, எலும்பாக, மஜ்ஜையாக, சுக்கிலமாக மாறும். இந்த 5-இல் கோளாறு ஏற்பட்டால் நிவர்த்தி செய்தாக வேண்டும்.

பசி வேண்டும். பசித்த பின்பே புசிக்க வேண்டும். புசித்த பின்பு மீண்டும் பசிக்க வேண்டும். பசிக்கவே இல்லை என்றாலும் கோளாறு. பசித்துக் கொண்டே இருந்தாலும் கோளாறுதான். என்ன உண்ணுகிறாயோ அதுவாகவே ஆகிறாய். என்ன எண்ணுகிறாயோ, அப்படியே ஆகிறாய் என்பார்கள்.

சுவாமி விவேகானந்தர் சொன்னார், “A Sound mind exists only in a sound body...”. அறிவு விருத்திக்கு சிந்தனை அவசியம். உடம்புக்கு உணவு அவசியம். உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்பார் திருமூலர்.

செரிமான நிபுணர் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்தின் விநாயகர் விளக்கம், பாரதியாரின் விநாயகர் நான்மணி மாலையைத் தேடினால் அகப்படலாம்.

– இ.ஆர்.

விநாயகருக்கு ஒரு வினோத விளக்கம்



டாக்டர் **வி.ஜி. மோகன்பிரசாத்**

விநாயகரிடம் சென்று நாம் என்ன வேண்டுகிறோம்?

தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுவிட்டால் 100 தேங்காய் உடைக்கிறேன். எனக்கு வேலை கிடைத்துவிட்டால் உனக்குத் தோப்புக்கரணம் போடுகிறேன் என்பது போல ஏதாவது வேண்டிக் கொள்கிறோம். அதற்கு மேல் வேண்டுவதற்கு மூளை நமக்கு வேலை செய்வதில்லை.

விநாயகரிடம் என்ன மாதிரிப் பிரார்த்தனைகளைச் செய்ய வேண்டும் என்பது பற்றி மிக அழகாகக் காட்டப் பட்டுள்ளது நம்மில் பலருக்குத் தெரியாது. விநாயகருடைய பெரிய தலை என்ன சொல்கிறது? பெரிதாகச் சிந்திக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்குத் தான் பெரிய தலை.

விநாயகருக்குக் கூர்மையான கண்கள் எதற்கு? நாம் செய்கின்ற எல்லாக் காரியங்களிலும், விஷயங்களிலும்

நாம் கூர்மையான கவனம் செலுத்தி அவற்றைப் பார்க்க வேண்டும். அதைத் தான் அக்கண்கள் காட்டுகின்றன.

விநாயகருக்கு நீளமான தும்பிக்கை எதற்கு? எல்லா விஷயங்களிலும் உள்ள உண்மையைத் துழாவித் துழாவிக் கண்டறிய வேண்டும் என்பதற்காகத்தான்.



'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்று கூறுகிறார் வள்ளுவர். அதுபோல, அந்தத் தும்பிக்கை எல்லா வற்றிலும் உள்ள உண்மையைக் கண் டறிய வேண்டும் என்று கூறுகின்றதாம்.

அடுத்தது, அந்த முறம் போன்ற பெரிய காதுகள் எதற்கு?, எவ்வளவு விஷயங்களை நாம் கேட்க முடியுமோ, அவ்வளவு விஷயங்களையும் கேட்க வேண்டும்.

விநாயகரின் வாய். எங்கே இருக் கின்றதென்றே தெரியவில்லை. அந்த வாய் மறைந்திருக்கின்றது. வாயை மட்டும் அடக்கி வைத்திருந்தோமென் றால் உலகத்தில் கவலையே கிடையாது. விநாயகருடைய மறைந்திருக்கின்ற வாய் இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

வாயில் உள்ள நாக்கு இரண்டு விஷயங்களில் நம்மைக் கெடுக்கும். ஒன்று, சாப்பிட வைத்துக் கெடுக்கும். அடுத்தது, பேச வைத்து நம்மைக் கெடுக் கும். இன்றைக்கு உடல் பருமன் பிரச் சனை உலகம் முழுவதும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அதற்குக் கார ணம் நாக்கின் சுவை. மற்றவர் களைப் பற்றி அடுத்தடுத்து எதையாவது பேசி மாட்டிக் கொள்ளவும் நாக்குத்தான் காரணம்.

மறைவாக உள்ள வாய்க்குள் நாக்கை வைத்திருப்பது எதற் காக? அமைதியாக இருந்தாலே உலகத் தில் பிரச்சனை இல்லை என்று சொல்வதற்குத்தான்.

விநாயகருடைய அந்த உருவம் பெரிய யானையினுடைய உருவம். அந்த யானைக்கு வாகனம் என்னவென்று பார்த்தால், மூஞ்சூறு. யானை போய் ஒரு மூஞ்சூறுவின் மேல் உட்கார்ந்தால் மூஞ்சூறு சட்னியாகி விடும். யானைக்குக் கீழ் ஒரு மூஞ் சூறுவா, என ஆச்சரியமாக உள்ளது.

அதன் தத்துவம் என்ன? மூஞ் சூறுவை வீட்டில் பார்த்திருப்போம். அங்கும் இங்கும் ஓடிக்கொண்டே இருக் கும். எலி புகுந்த வீடு என்று ஒரு நாட கம் கூட வந்தது. அங்கும் இங்கும் ஓடி, வீட்டை ஒரே களேபரமாக்கிவிடும்.

அந்த மூஞ்சூறு என்பது மனித மனம். அந்த மனித மனம், அலைபாயக் கூடிய தன்மை உடையது. பஞ்சேந்தி ரியங்களால்தான் மனம் இயக்கப்படு கிறது. மனதிற்கு அறிவு கிடையாது.

பஞ்சேந்திரியங்களான பார்வை, கேள்வி, ருசி, ஸ்பரிசம், சுவாசம் என்ற ஐம்புலன்களும் நம்மை எங்கெல்லாம் கூட்டிப் போகுமோ, அங்கெல்லாம் போகக் கூடியதுதான் நமது மனம். ஐந்து இந்திரியங்கள் சொன்னபடியெல் லாம் நமது மனம் கேட்கும். அலை பாய்கின்ற தன்மை உடையது அது. ஓரிடத்தில் உட்கார்ந்து ஒழுங்காக அக் கறை காட்ட மாட்டோம். ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டிருக்கும்

தொடர்ச்சி 13-ம் பக்கம்

கட்டுரை

11

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

ஆய்வுரைத் திலகம் அ.அறிவொளி


அ. அறிவொளி

தமிழகத்தின் சொற்பொழிவுக் கலை செழித்து வளர்ந்த காலகட்டம் திராவிட இயக்கத்தின் எழுச்சியோடு தொடர்புடையது. என்றாலும், பொதுமேடைகள் என்பவை அரசியல் இயக்கங்களால் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய மன்றங்களாலும், ஆலயங்களாலும் பெரிதும் வளர்க்கப் பட்டன. அந்தக் காலகட்டத்தில், குறிப்பாக அறுபது களில் அரும்பத் தொடங்கி எழுபதுகளிலும் எண்பது களிலும் எழுச்சி கொண்ட இலக்கியக் களங்களின் நாயகர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் ஆய்வுரைத் திலகம் அறிவொளி.

நாகை மாவட்டத்திலுள்ள சிக்கல் அவருக்குச் சொந்த ஊர். ஞானப்பிரகாசம் என்னும் தன் இயற்பெயரைத் திராவிட இயக்கங்களின் தாக்கம் காரணமாக 'அறிவொளி' என மாற்றிக் கொண்டவர்.


சோ. சத்தியசீலன்

என் குழந்தைப் பருவம் தொட்டே அவர் பெயரும், அதன்பின் அவரும் எனக்கு அறிமுகம். ஏனெனில் என் பாட்டனார் திரு. கை. கனக சபைப் பிள்ளை தாளாளராக விளங்கிய பூம்புகார் பேரவைக் கல்லூரியில் அவர் பணி புரிந்தவர்.

அப்போது பூம்புகார் கல்லூரியில் இரண்டுபேர் நாடறிந்த பேச்சாளர்களாக விளங்கியவர்கள். ஒருவர் ஆய்வுரைத் திலகம் அ. அறிவொளி. மற்றொருவர் செந்தமிழ் முழக்கம் ஆ.செகந்நாதன். இந்த இருவரைப் பற்றியும் என் பாட்டனார் மிகவும் பெருமித உணர்வு கொண்டிருந்தார் என்பதை அறிவொளி அவர்களே என்னிடம் சொல்லியுள்ளார்.



மற்ற கல்லூரி உரிமையாளர்களிடம் இந்த இருவரையும் காட்டி “எங்களிடம் இரண்டு சிங்கங்கள் இருக்கின்றன பாருங்கள்” என்று பெருமைப்பட்டுக் கொள்வாராம்.

மரபின் மைந்தன் முத்தையா

அவர் அப்போது பூம்புகாரில் கல்லூரிக்கு அருகிலேயே வசித்து வந்தார். அவர் என்னிடம் பின்னாளில் பகிர்ந்து கொண்ட சுவாரசியமான தகவல்கள் ஏராளம். அவற்றில் ஒன்று. என் பாட்டிக்கு ஏழரைச் சனி நடந்த கால கட்டத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் திருக்கடவூரில் எங்கள் வீட்டிற்கு வந்து திரு. அ. அறிவொளி நளவெண்பா வாசிப்பாராம்.

“பூம்புகாரிலிருந்து உங்க பண்ணைக்கு சைக்கிளிலே வருவேன். உங்க பாட்டி கூட எல்லோருமா கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிகிட்டு வந்ததும் நளவெண்பா படிப்பேன். அருமையான சாப்பாடு. அதற்கப்புறம் ஊர் திரும்பிடுவேன்” என்றார்.

அதேபோல அருகிலிருந்த ஊரொன்றில் ஒரு செல்வந்தர் இல்லத் திருமணத்திற்கு என் பாட்டனாருடன் அறிவொளி அவர்கள் சென்றாராம். அவர்கள் சாப்பிட அழைத்ததும் என் பாட்டனார் “எனக்கு வயிறு சரியில்லை; இவர் சாப்பிடுவார்” என அறிவொளி அவர்களை அனுப்பினாராம்.

காரில் திரும்பும்போது, “அந்தச் செல்வந்தர் சொத்து சேர்த்த விதம் சரியில்லை. அவர் வீட்டில் சாப்பிட எனக்கு மனம் வரவில்லை. எனவேதான் உங்களைச் சாப்பிடச் சொன்னேன்” என்று சொல்ல, இவருக்குத் திகைப்பும் சிரிப்பும் ஒருங்கே ஏற்பட்டனவாம்.

என் ஐம்பதாவது நூல் ‘திருக்கடவூர்.’ அதற்கான தகவல்களைப் பல விதங்களில் சேகரித்தேன். ராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் “படையேவிய திருக்கடவூர்” என்று குறிப்பிடப்பட்டிருந்ததை அறிந்தேன். திருக்கடவூரில் இருந்து எந்த நாட்டுக்கு எப்போது படை ஏவப்பட்டது என்கிற விபரம் எந்த விதத்திலும் கிடைக்கவில்லை.

அறிவொளி அவர்களிடம் கேட்ட போதுதான், “திருக்கடவூர் கடலுக்கு அருகே இருப்பதால் ராஜராஜசோழன் பெரிய கடற்படை ஒன்றை அந்த ஊரில் நிறுவியிருக்க வேண்டும் (Regiment)” என்றார். எனக்கும் அது சரியென்றே பட்டது. அந்த அடிப்படையில் அந்த நூலில் ஓர் அத்தியாயமே எழுதினேன்.

தன்னுடைய வாழ்வையே பரிசோதனைக் கூடமாக்கிப் பற்பல முயற்சிகளை மேற்கொண்டவர் அறிவொளி அவர்கள். பூம்புகார் கல்லூரியிலிருந்து சில கருத்து வேறுபாடுகளால் விலகியவர், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கிருந்த அப்போதைய துணைவேந்தர் திரு.சிட்டிபாபு அவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாய் அங்கிருந்தும் விலகினார்.

மாடுகள் வளர்ப்பு, விவசாயம், சித்த மருத்துவம், ஹோமியோபதி, ஜோதிடம் என எத்தனையோ துறைகளில் ஆர்வம் கொண்டு வெறும் ஆர்வம் என்னும் எல்லையோடு நின்றுவிடாமல், அவற்றில் முழு மூச்சாக இறங்கவும் செய்வார் அவர்.

அவருடைய நகைச்சுவை பாணி தனித்தன்மை வாய்ந்தது. யாராலும் அவர் சொல்லும் நகைச்சுவைகளைத் திரும்பச் சொல்லி வெற்றி பெறவும் முடியாது.

“சரியெல்லாம் சரியல்ல” “உண்மையெல்லாம் உண்மையல்ல” என்று தொடங்கி, அவர் அவற்றை விஸ்தாரமாக விளக்கும் போது அவையே சிரிப்பில் அதிரும்.

தன் இயல்பான உத்தியால் கேட்கப்பட்ட கேள்விகளைத் தலைகீழாகத் திருப்பிப் போடுவதில் அவருக்கு நிகர் அவரே. கர்ணன் குற்றவாளி என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நிகழும். நாவுக்கரசர் சோ. சத்தியசீலன் நடுவராக இருப்பார். அருள்நெறி நாவலர் அ.வ.ராசகோபாலன் வழக்குத் தொடுப்பார். அறிவொளி அவர்கள் வழக்கை மறுப்பார்.

பரசுராமனின் தந்தை கொல்லப்பட்ட போது, அவருடைய தாய் கதறியழும் குரல் கேட்டு வந்த பரசுராமன், தன் தாய் 21 முறை மார்பில் அடித்துக் கொண்டதைக் காதில் கேட்டதன் காரணமாக 21 தலைமுறைக்குச் சத்திரியர்களை அழிப்பதாக விரதம் பூண்ட

சம்பவத்தை அ.வ.ராசகோபாலன் உணர்ச்சி பொங்கச் சொல்லி முடிப் பார். அறிவொளி எழுவார்.

"பரசுராமன்லாம் ஒரு புள்ளையா? அம்மா அழுதா ஓடோடி வருவானா; நெஞ்சில எவ்வளவு தடவை அடிச்சு கிட்டான்னு ஒண்ணு, ரெண்டு, மூணுன்னு எண்ணிகிட்டு நிப்பானா" என்றதும் வாதத்தின் போக்கே மாற்றிவிடும்.

துளியும் செயற்கை கலவாமல் இயல்புத் தன்மையும், தர்க்க வாதமும் கலந்த நகைச்சுவை அவருடையது. பல்வேறு நூல்களின் ஆசிரியர். அவர் சிறந்த கவிஞர் என்பதை என் பாட்டனாரின் மணிவிழா மலரில் 'தொண்டு' எனும் தலைப்பில் அவர் எழுதியிருந்த எண்சீர் விருத்தத்தின் வழி அறிந்து கொண்டேன்.

அவர் சாக்த உபாசனையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதனாலேயே காவி அணிந்திருந்தார். அதற்கு முன்பாக நன்கு மழிக்கப்பட்ட முகமும் பாகவதர் சிகையும், வெள்ளை ஜிப்பாவுமாக அசப்பில் எழுத்தாளர் நா.பார்த்தசாரதி போல இருப்பார். நன்றாக ஜோதிடம் பார்ப்பார். யாரேனும் எந்தச் சாமியாரிடமாவது அழைத்தால் போக மாட்டார். அதற்கு அவர் சொல்லும் காரணம், "அவர்கள் நம்மிடம் இருக்கும் சக்தியைக் கவர்ந்து கொள்வார்கள்" என்பதாகும்.

உடல்நலக்குறைவு, விபத்துகளால் நேர்ந்த சுகக்குறைவு, குடும்பத்தில் சில இழப்புகள், முதுமையின் பாதிப்பு முதலியவற்றைச் சிரித்தே கடந்தவர் அவர். மலேசிய மேனாள் அமைச் சர் டத்தோ சரவணன் அவர் கள் அங்குள்ள கம்பன் அறவாரியத்தின் தலைவர். அவர் ஏற்பாடு செய் திருந்த கம்பன் விழாவிற்கு அறிவொளி அவர்களும் வந்திருந் தார்.


இரெ.சண்முக வடிவேல்

பத்துமலை வர விரும்பி அடிவாரத்துடன் நின்றுவிட்டார். அந்த ஆண்டு சடையப்ப வள்ளல் விருது பெற வந்திருந்த ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் திரு. ம. கிருஷ்ணனும் மேலே வரவில்லை. இருவரும் கீழேயே நின்று கொண்டு ஆன்மீகத்தின் உயரங்களை அலசிக் கொண்டிருந்தனர். நாங்கள் கீழே வந்ததும் "என்ன சார்! இவரு தொழிலதிபர்னு நெனச்சேன்; இவ்வளவு ஞானஸ்தரா இருக்காரே" என்று வியந்து சொல்லிக் கொண்டே இருந்தார்.

மறுநாள் கம்பன் விழாவில் ஒரு விவாத அரங்கம். கம்பனில் அதிகம் ஒளிவீசுவது 'கருத்துச் செறிவா? கவிதை அழகா?' என்று தலைப்பு. கருத்துச் செறிவு சார்ந்து வாதிட்ட டாக்டர் சுதா சேஷய்யன்,

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்ற பாடலைச் சொல்லி "இதில் எங்கே கவிதை அழகு இருக்கிறது? கருத்துச் செறிவுதானே இருக்கிறது" என்று வாதிட்டார்.

அடுத்து நான் பேசும்போது "உலகம் யாவையும் கடவுள் உருவாக்கினார் என்று பொருள் கொள்ளும்போது அதில் கவிதை அழகு இல்லை. ஆனால் உலகம் அனைத்திலும் தாம் இருக்குமாறு உலகத்தைப் படைத்தார் என்ற பொருளில் 'தாம் உள ஆக்கலும்' என்ற வரியைப் படித்தால் அதிலுள்ள கவிதை அழகு வெளிப்படும்" என்றதும் அறிவொளி அவர்கள் மேசையைத் தட்டி "இப்படி யாரும் சொன்னதில்லை" என்று ஆரவாரித்தார்.

திருச்சி நகைச்சுவை மன்றம் சார்பில் நாவுக்கரசர் சோ. சத்தியசீலன், ஆய்வுரைத் திலகம் அ. அறிவொளி, பெரும்புலவர் பேராசிரியர் பா.நமசிவாயம், நகைச்சுவை இமயம் இரெ.சண்முக வடிவேல் ஆகியோருக்குப் பாராட்டு விழா பிரம்மாண்டமான முறையில் ஏற்பாடாகியிருந்தது. அறிவொளி அவர்களால் உடல்நலக் குறைவு காரணமாக வர இயலவில்லை.

அதன் பின்னர் அவரைப் பார்க்க வாய்க்கவுமில்லை. நீறும் குங்குமமும் நிறைந்த முகமும், தாடி மீசைக்கு நடுவே சுடர்விடும் சிரிப்பும் நினைவில் எப்போதும் நிலைத்திருக்கும். ●

9–ம் பக்கத் தொடர்ச்சி

போது வேறு ஏதாவதைப் பற்றி மனம் எண்ணிக் கொண்டேயிருக்கும். அதனால்தான் 'மனம் ஒரு குரங்கு' என்று சொல்கிறார்கள்.

அந்த அலைபாயக்கூடிய மனத்தை அடக்கிக் கட்டுப்படுத்த வேண்டும். மனத்தைக் கட்டுப்படுத்தி அடக்கும் அங்குசம் என்ற ஆயுதம் எது தெரியுமா? நமது புத்தி. அந்தப் புத்திகாரகனாக (The Lord of Wisdom) இருப்பவர் விநாயகர். அந்த புத்திதான், அலைபாயும் மனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது.

ஒரு ரத யாத்திரையைப் பற்றி நமது உபநிடதங்கள் கூறுகின்றன. உலகப் பயணம் என்பது ரத யாத்திரையைப் போல. நாம்தான் அந்த ரதத்தின் உரிமையாளர். நாம்தான் அந்த ரதத்தில் பயணம் செய்கிறோம். ரதத்தை இழுக்கக் கூடிய ஐந்து இந்திரியங்களும் ஐந்து குதிரைகளாம். கடிவாளம் இல்லையென்றால், ஐந்து குதிரைகளும் தம் இஷ்டத்திற்கு ஓடும். கடிவாளத்தைப் போட்டுக் குதிரைகளை இழுக்க வேண்டும். இழுத்து, இழுத்துச் சரியாகச் செலுத்த வேண்டும்.

ஐந்து குதிரைகளையும் ஒரு பாதையிலே செலுத்த ஒரு சாரதி வேண்டும். அந்தச் சாரதிதான் மனம். ரதத்தின் உரிமையாளரான நாம்தான் புத்தி. செல்ல வேண்டிய இடத்திற்குரிய வழியைச் சாரதிக்கு நாம்தான் கூற வேண்டும்.

பஞ்சேந்திரியங்களைக் கட்டுப்படுத்துகிற மனத்திற்குத் தெளிவான பாதையைப் புத்திதான் காட்டுகிறது. ரதம் ஒழுங்காக ஓட உறுதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது கடினமான பாதையிலும் ஓட முடியும்.

நமது வாழ்க்கையே ஒரு பயணம் தான். பயணத்திற்கு ஆரோக்கியமான, சீரான உடல் தேவை. நல்ல சிந்தனையோடு இருக்கிற தெளிவான புத்தி அவசியம். அது மனத்தைக் கட்டுப் படுத்தி, பஞ்சேந்திரியங்களைக் கட்டுப் படுத்தினால், சரியான பாதையில் சென்று, நம் இலக்கை நாம் அடையலாம் என்பதுதான் விநாயகர் தத்துவம்.

அதனால், விநாயகர் புத்தி காரகன். அறிவின் சொரூபம். மனத்தைக் கட்டுப் படுத்தி நமது உலகப் பயணத்தை இனிதாக்குவதற்கும், நம் குறிக்கோளை எட்டுவதற்கும் அவர் வழித்துணை புரிகின்றார்.

தலையில் குட்டிக் கொண்டு, இரு கைகளையும் மாற்றிக் காதுகளைப் பிடித்துக் கொண்டு தோப்புக்கரணம் போடுகிறோம். இது விநாயகருக்குரிய விசேஷ வழிபாடு. 108 தோப்புக்கரணம் போடுபவர்களெல்லாம் இருக்கிறார்கள். அந்தத் தோப்புக்கரணம் எவ்வளவு விசேஷமானது என்று நமக்குத் தெரியவில்லை. அதன் சிறப்பை அமெரிக்கர்கள் நமக்குச் சொல்கிறார்கள்.

தோப்புக்கரணம் போடும்போது உடலின் முக்கிய மையங்கள் மிக அழகாகத் தொடர்புபடுகின்றன. இதனால் நம் மூளை, அறிவு விருத்தியடைகின்றது என்று மேல்நாட்டவர்கள் கூறுகிறார்கள்.

நாம் தலையைக் குட்டி விநாயகரை வழிபடுதலை மறந்துவிட்டோம். நமது பாரதப் பாரம்பரியத்தையும், நமது கலாச்சாரத்தையும் நாம் புரிந்து கொண்டாலே போதும். பாரதம் ஓர் அழகான இடமாகத் திகழும். நம் வாழ்க்கைக்குரிய வெற்றிப்பாதை நமக்குக் கிடைக்கும். விநாயகரை வழிபடுவதற்குரிய புரிதல் அவசியம். புரிதலுக்குப் புத்தி அவசியம். விநாயகரேதான் இரண்டையும் நமக்குத் தரக்கூடியவர். ●

சமையலறையில் கிருஷ்ணன்

உடுப்பியில் கிருஷ்ண பகவானையே சமையல் அறையில் கொண்டு சென்று நிவேதனம் செய்வது மரபாக உள்ளது.

கொரநாட்டு அன்னபூரணிக்கு, பக்தர்கள் உணவு அருந்திய பிறகுதான் நிவேதனம் செய்யப்படும்.

– ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

7–ம் பக்கத் தொடர்ச்சி

கண்ணதாசன். உலகங்களைப் படைத்த கடவுளை உன் உள்ளே காணலாம் என்று காட்டியது திரு மந்திரம். இதை இடையறாது உணர உணரப் பேரின்பம் கிடைக்கும் என்பதை,

“நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே” (24)

என்று பாடுகிறார் திருமூலர்.


தேவை அறிந்தவன் : இந்த உடம்பு இறைவ னால் நாம் செய்த வினைகளுக்குத் தக்கவாறு நமக்குத் தரப்பட்டது. இது வினையின் வந்தது வினைக்கு விளைவாவது. இந்த உடம்பில் தேவை யான அளவுக்குச் சூட்டை (நெருப்பை) வைத்தான் இறைவன். இது கூடினால் காய்ச்சல், குறைந்தால் ஜன்னி. இரண்டுமே கேடுதான்.

உலகத்தைப் படைத்த இறைவன் அதைச் சுற்றிக் கடலைப் படைத்தான். அந்தக் கடலுக்குள் அளவான நெருப்பை வைத்தான். இதை ‘வடவா முகாக்கினி’ என்பர். கடல் பெருகாமல் இது பாது காக்கிறது.

இதுபோலத் தமிழ்ச் சாத்திரங்களையும் தேவையான அளவுக்கு இறைவன் கொடுத்தான். திருமூலர் திருமந்திரம் எழுதி முடித்தபோது, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், திருக்கோவையார், காரைக்காலம்மையார் பாடல்கள் ஆகியவை தமிழ் மொழியில் மிகச்சிறந்த நூற்களாக இருந்தன. இவை தேவைக்கேற்ற அளவில் கொடுக்கப் பட்டன.

இதுபோல மூவாயிரம் தமிழான திருமந்திர மாலையும் தேவையான பொருள்கள் அனைத்தை யும் கூறுவதாய் அமைந்துள்ளது. இந்தச் செய்தியை,

“அங்கி மிகாமைவைத் தானுடல் வைத்தான்
எங்கும் மிகாமைவைத் தான்உலகு ஏழையும்
தங்கி மிகாமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கி மிகாமைவைத் தான்பொருள்
தானுமே” (26)



என்று குறிப்பிடுகிறார் திருமூலர். உடம்பினுள் தேவையான அளவு நெருப்பை வைத்தவன், உலகங்களை ஏழாகப் படைத்தவன், தமிழ் நூற்களை அளவோடு தந்தவன் உலகம் உய்வ தற்குத் தேவையான அளவு மெய்ப்பொருள் பற்றிய தத்துவங்களை இம்மந்திரமாலை மூலம் அருளினான் என்பது இப்பாடலின் பொருளாகும்.

வந்த காரணம் : திருமூலர் பல நூறாண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். அருட்சக்தியை வழிபட்டு அவளருளால் பக்திநெறி, யோகநெறி, ஞானநெறி மூன்றையும் நிலைபெறச் செய்தார். அருட் கூத்தினை விளக்கும் தமிழ்வேதம் எனப்படும் திரு மந்திரத்தைப் பாடுவதற்காகவே தோன்றியிருக் கிறார். இதை,

“இருந்தவக் காரணம் கேள்இந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்து அடியேன்
பரிந்துடன் வந்தனன் பக்தியி னாலே“ (14)

என்றும்,

“மாலாங்க னே !இங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாகமொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே” (16)

என்றும் பாடுகிறார்.

மாணாக்கர் : இத்திருமந்திரத்தைத் திரு மூலர் திருவாயால் கேட்டுணரும் பேறுபெற்ற மாணாக்கர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துருக் காலாங்கி, கஞ்ச மலையன் என்ற எழுவருமாவர். இச்செய்தியை,

“மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்

இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே" (8)

என்ற பாடல் உணர்த்துகிறது.

பாடல் தொகை – யாப்பு : காப்புச் செய்யுளைச் சேர்த்துத் திருமந்திரப் பாடல்கள் மொத்தம் 3048 ஆகும். சில மேற்கோள் பாடல்கள், சைவ சித்தாந்த சமாஜப் பதிப்பில் காட்டப்பெற்ற வெளிவராத பாடல்கள், வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் மேற்கோள் காட்டிய புதுப் பாடல்கள் எல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 3100 பாடல்கள் வந்துவிடும். இவற்றுள் திருமந்திரத்தை நன்றாகப் படித்த பக்தர்கள் அதே யாப்பில் பாடிய பாடல்களும் இடைச்செருகலாகச் சேர்ந்துள்ளன.

சைவ சமயத்தில் கூறப்படும் நான்கு நிலைகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவற்றைக் காட்டுவது போலத் திருமந்திரப் பாடல்கள் அடிதோறும் நான்கு சீர்களைக் கொண்ட நாலடிப் பாடல்களாக உள்ளன. ஒற்றெழுத்துக்களை நீக்கி எண்ணினால், ஒவ்வோரடியிலும் பன்னிரண்டு எழுத்துக்கள் உள்ளன. கடைசி அடி நேரசையில் தொடங்கினால் பதினோரெழுத்துக்கள் உள்ளன. வெண்பா யாப்பு முறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதற்குத் திருமந்திர யாப்பு என்று தனிப்பெயரிட்டுப் போற்றினர் சான்றோர்கள்.

திருமூல நாயனார் : திருமந்திரம் தந்தவர், மூலன் உடம்பில் புகுந்த சுந்தரநாதர் என்ற சித்தர். இதனால், இவரைத் திருமூல நாயனார் என்கிறோம். இப்பெயர் அவர் செய்த அரும்பெருஞ் செயலைக் குறிக்கிறது. திரு என்பது அழகு. மூலம் என்பது முதற்காரணம். நாயனார் என்றால், நடத்தும் தலைவர்.

ஆன்மாவின் செயல்களுக்குரிய மூல காரணங்கள், ஆன்மா அடையும் உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை பற்றிய செய்திகள் இவற்றைத் தொகுத்தும், ஒன்பது தந்திரங்களாக வகுத்தும் கூறுவதால் இப்பெயர் மிகப் பொருத்தமான காரணப் பெயராக உள்ளது. திருமந்திரம் என்றால், அழகிய மந்திரம் என்று பொருள். 'மந்' என்றால் மனனம். 'திரம்' என்றால் காப்பது. தன்னைத் தொடர்ந்து நினைப்பவரைக் காப்பது மந்திரமாகும்.

அன்பே கடவுள் : திருக்குறள் அறம், பொருள், இன்பம் மூன்றினையும் முன்வைத்து, வீட்டை மறைபொருளாகக் கூறுகிறது. ஆனால் திருமந்திரம் வீட்டை முதன்மையாக வைத்து அறம், பொருள், இன்பத்தை மறைபொருளாகக் கூறுகிறது. சமய நெறியைப் பரப்பிய சான்றோர்களில் மக்கள் இனம் முழுமைக்குமான பொது நெறியைப் பரப்பியவர்கள் உண்டு. அவர்களில் முதலிடம் பெறுபவர் திருமூலர். அன்பே கடவுள் என்ற பொதுச்சமயத்தை – உலக முழுமைக்கும் ஏற்ற சமயத்தைப் பரப்ப வித்திட்டவர் திருமூலர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" (269)

என்று முழங்கியவர் திருமூலர். அனுபவ ஞானம் இல்லாதவர்கள் அன்பும் சிவமும் இரண்டு என்று கூறுவர். அன்பே சிவம் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்.

அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்துவிட்டால் பின்னர் அவர்களே அன்புருவான சிவமாய் ஆனந்த வெள்ளத்தில் திளைத்திருப்பார்கள். இதுதான் திருமூலர் சொல்லும் வாழ்க்கை உண்மை. சில பேர் கடுமையான தவம் செய்வார்கள். எலும்பை விறகாகப் போட்டு, உடல் தசைகளை அறுத்து நெருப்பில் இட்டுப் பொன்னிறம் தோன்ற வறுத்து வதக்குவார்கள். இவர்கள் இறைவனை அடைய மாட்டார்கள். அன்போடு உருகி அகம் குழைந்தால், மாணிக்கமான சிவபிரானை யான் பெற்றது போல் பெறலாம் என்று கூறுகிறார் திருமூலர்.

"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (272)

என்பது திருமந்திரம். இறைவனோடு என் அன்பு பின்னிக் கிடந்தது. இன்பம் தரும் பெண்ணின் மேல் அன்பு செலுத்துவது இன்பத்தை அதிகமாக்கும். அதுபோல இறைவன் மேல் அன்பு செலுத்தி உணர்வில் ஒடுங்கிப் புல்லிப் புணர்ந்து

சிக்கெனப் பிடித்தால் பேரின்பம் கிட்டும். அது சிற்றின்பம். இது பேரின்பம்.

"புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லார்க்கு
உணர்ச்சி இல்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுஇது வாமே" (283)

என்று பாடி, அன்பினால் அவனை அறிய மாட்டாத மாந்தர்களைக் கண்டு வருந்துகிறார் திருமூலர்.

பல்லியும் பாம்பும் : யோகநெறியைக் காட்டி லும் இறைவனைக் காலையும் மாலையும் அன் போடு வழிபடும் அன்புநெறி சிறந்தது என்கிறார் யோகியான திருமூலர்.

"கல்வி உடையார் கலந்தோடிப் போகின்றார்
பல்லி உடையார்அப் பாம்பரிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்த இறைவனை
அல்லியுள் ஆதித்த காயமும் ஆமே" (292)

என்பது திருமந்திரம்.

இப்பாடலில், பல்லி என்பது 'பலுகு' எனப் படும் உழவுக்கருவி. பயிர்கள் நெருக்கமாக இருந் தால் பலுகுக் கட்டையால் நெருக்கத்தைக் குறைப்பர். இதில் பற்கள் நிறைந்திருக்கும். இது நம்முடைய பல்வேறு எண்ணங்களைக் குறிக்கும். பாம்பு என்பது குண்டலினி சக்தி. பாம்பு அரிந்து உண்பது என்பது, குண்டலினி சக்தியால் செய்யக் கூடாத செயல்களைச் செய்வது. இப்பாட்டில் அல்லி என்பது கதிரவனைக் கண்டதும் உதிக் கின்ற தாமரையைக் குறிக்கும். (அல்லியைத் தாமரை என்று பெரியாழ்வாரும், நம்மாழ்வாரும் பயன்படுத்துகிறார்கள்). இந்த மந்திரப் பொருள் பின்வருமாறு...

யோக நெறியில் செல்லும் கல்வியுடையார், இறைபக்தி இல்லாமையால் தம்முடைய பேராற் றலை உலக நோக்கங்களுக்காகவும், பொருளுக் காகவும் செலவிட்டுக் காலம் கழிந்ததும் மாண்டு போகின்றனர். இவர்கள் பல்வகை எண்ணங் களைக் கட்டுப்படுத்த மாட்டாமல் செய்யக்கூடாத செயல்களைச் செய்து குண்டலினி சக்தியை வீணாக்கி விடுகிறார்கள். இரவும், பகலும் பக்தியோடு இறைவனை வழிபட்டால், காலையில் உதய வேளையில் குளத்தில் மொட்டாகக் குவிந் துள்ள தாமரையின்மேல் சூரிய ஒளி பட்டவுடன் அது மலர்வது போல யோகியின் உடம்பில் அருட் சக்தி பதியும். அந்த உடம்பு ஒளியுடம்பாக மாறும்.


இதன்மூலம் குண்டலினி சக்தியால் மட்டும் இறையனுபவம் கிட்டாது. அருட்சக்தியின் கருணை வேண்டும். அதற்கு வழி அன்பும், தொண்டுமே ஆகும். இதுதான் இறை வழிபாடு. இதைச் செய்தால் ஒளி வடிவத்தை உள்ளே காணலாம். யோகியின் உடம்பு ஒளியுடம்பாகும். அந்த யோகி மரணத்தை வெல்வான் என்று வலியுறுத்துகிறார் திருமூலர்.

ஒன்றவன்தானே : காப்புச் செய்யுளை அடுத் துத் திருமந்திரம் முதல் பாடல் கடவுள் பெருமை யைப் பேசுகிறது. எண்ணங்களைத் தாண்டிய இறைவனை எண்ணலங்காரமாகப் பாடுகிறார் திருமூலர்.

1. இறைவன் ஒப்பற்ற ஒரு பொருளாய், தனக் குவமை இல்லாத தனிப்பெருந் தலைவனாய், மெய்ப்பொருளாய் விளங்குகிறான். ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று திரு மந்திரமும், ''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' என்று திருவாசகமும் அவன் புகழ் பேசுகின்றன.

2. நமக்கு அருள் செய்யும் இறைவன் அந்த அரு ளுக்குச் சக்தி வடிவம் கொடுக்கிறான். அப் பொழுது இன்னருளோடு சேர்ந்து இரண் டாகக் காட்சி அளிக்கிறான். இது அம்மை யப்பன் திருக்கோலம். இதைத் ''தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத் தும்பீ'' என்று மணிவாசகர் பாடுகிறார்.

    அவன் என்று சொல்லுமாறு தூரத்திலிருந்த இறைவன், அவளோடு இரண்டாகக் காட்சி தரும்பொழுது நமக்குப் பக்கத்தில் வந்து இவனாகக் காட்சியளிக்கிறான். இதனைத் திருஞானசம்பந்தர் ''பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே'' என்று குறிப் பிடுகிறார். ஆண்டவன் அருளுக்குப் பரா சக்தி என்று பெயர். அவள் இல்லாவிடில் அவ னைக் காணமுடியாது. ''அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'' என்று அப்பர் பெருமான் பாடுகிறார். ''அவன ருளாலே அவன்தாள் வணங்கி'' என்பது திருவாசகம். இந்து மதம் மட்டுமே



இறைவனை ஆணாகவும், பெண்ணாகவும் பார்த்தது. இதையே ''இரண்டவன் இன்னருள்'' என்கிறார் திருமூலர்.

3. இப்பெருமான் ஆக்கல், காத்தல், அழித்தலாகிய ஒடுக்குதல் என்ற மூன்றுக்கும் காரணமாய் நிற்கிறான். இது அவனுக்கு அலகிலா விளையாட்டு.

''காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடு''

என்று குறிப்பிடுகிறது திருவாசகத் திருவெம்பாவை. இப்பெருமான் இறை உயிர்தளை எனப்படும் பதி, பசு, பாசம் என்ற மூன்றிலும் நிற்கிறான். உண்மை, அறிவு, இன்பம் எனப்படும் சத்து, சித்து, ஆனந்தமாய்த் திகழ்கிறான். பிரமன், திருமால், உருத்திரன் என்று மூலகாரணமாய் நின்ற மூர்த்தி மூன்று வடிவம் கொள்கிறான். அருவம், உருவம், அருவுருவம் எனப் போற்றுமாறு காட்சியளிக்கிறான். இலயம், போகம், அதிகாரம் என்ற மூன்று நிலைகளிலும் அவனே நிற்கிறான்.

4. இனி ரிக், யஜூர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும் உணர்ந்தவனும் அவன், உரைத்தவனும் அவன். வேதப் பொருளானவனும் அவன். இப்பெருமானைப் புகழ்ந்து பாடும் திருஞானசம்பந்தர்,

"பொங்கழல் உருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே"

என்று குறிப்பிடுகிறார். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் நமக்குள் இருந்து நமக்கு உணர்த்துபவனும் அவனே யாவான். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளையும் அரும்பு, மலர், காய், கனி என்று உணர்த்துவதும் அவன் செயலேயாகும்.

5. இறைவன் பொறிவாயில் ஐந்தவித்தான். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தையும் வென்றவன். எனவே, அவன் நமக்கும் இந்த இந்திரியங்களை வெல்லும் ஆற்றலைக் கொடுக்க வல்லவன். இவன் இந்திரியங்களோடு பொருந்தி நின்றே அவற்றால் திரிபின்றி நிற்பவன். மனைவியோடிருந்த கௌதம முனிவரை ''ஐந்தவித்தான்'' என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது இங்கு நோக்கத் தக்கது. (திருக்குறள் 25).

6. நம் உடம்பில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆறு ஆதாரங்களிலும் விரிந்திருப்பவன் இறைவன். ஆறு சமயங்களாக விரிந்து இப்பெருமான் அறுசமய சாத்திரப் பொருளோனாகவும் விளங்குகிறான்.

7. உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களில் கருவாய்க்கும் எருவாய்க்கும் நடுவில் உள்ளது மூலாதாரம். சுவாதிட்டானம் கருவாய்; மணிபூரகம் மண்ணீரல் (கொப்பூழ்); அனாகதம் இதயம்; விசுத்தி தொண்டை; ஆக்ஞை புருவ நடு. இவற்றுக்கு மேலே உள்ளது ஏழாவதான சகஸ்ரதளம். இது நம் உச்சந்தலைக்கு மேல் உள்ள பன்னிரண்டங்குலப் பகுதி. இதன் முடிவிடம் துவாத சாந்தத் தலம். இறைவன் இந்த ஏழாவது இடமாகிய சகஸ்ர தளத்தின் மேல் விளங்குபவன். ஏழு உலகங்களிலும் ஏழு இசைகளிலும் இருப்பவனும் அவனே யாவான்.

8. நிலம், நீர், தீ, காற்று, வானம், கதிரவன், சந்திரன், ஆன்மா எனப்படும் எட்டோடும் பொருந்தி அட்டமூர்த்தியாய்க் காட்சி தருபவனும் இறைவனேயாவான். இவன் மன, வாக்கிற்கு எட்டாத பெருமான். இவனை நாம் உணர்ந்து எட்ட வேண்டாமா என்று கேட்கிறார் திருமூலர். இப்பாடல் வருமாறு,

"ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் முன்றினுள்; நான்கு உணர்ந்தான்;ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழும்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான் உணர்ந்து
எட்டே" (1)

இப்பாடலில் ஏகனாகவும், அனேகனாகவும் இருக்கும் இறைவனை, ஒன்று முதல் எட்டு வரை விரித்துக் காட்டி எட்ட முடியாத இறைவனை இனிய தமிழ்ப் பாமாலையால் எட்டிப் பிடித்துக் கட்டிப் போடுகிறார் திருமூலர்.

●

கட்டுரை

வாரி இறைத்த வார்த்தைகள்


திருவள்ளுவர்


குயிலுக்குக் குரல்வளம்தான் உண்டு; அருவிக்கு ஓசைவளம்தான் உண்டு. ஆனால், மனிதனுக்கு மட்டுந்தான் குரல்வளம், ஓசை வளத்தோடு மொழி வளத்தையும் இறைவன் கொடுத்திருக்கிறான்.

என்றாலும், குயிலும் அருவியும் யாரையும் சகாயப்படுத்துமே தவிர, காயப்படுத்தாது. ஆனால், மனிதன் மட்டுந்தான் தான்பெற்ற மொழி வளத்தால், சமூகத்தையே காயப் படுத்துகிறான்; ரணப்படுத்துகிறான்; சீழ்பிடிக்கவும் வைக்கின்றான்.

படைப்பில் மனிதனுக்கு இரண்டு காதுகளைப் படைத்து, ஒரு வாயையை மட்டும் தந்ததற்குக் காரணம், அவன் இரண்டு மடங்கு கேட்டு, ஒரு மடங்கு பேச வேண்டும் என்பதற்குத்தான்! ஆனால், நிகழ் கால மனிதன் ஒரு மடங்கு கூடக் கேட்காது, பன்மடங்கு பேசுகின்றான்.

இன்றைய மனிதன் தான் ஈட்டிய பணத்தை எண்ணி எண்ணிச் செல வழிக்கின்றான். தான் வாங்கிய வாச னைத் திரவியங்களை எவ்வளவு சிக்கனமாகச் செலவழிக்க முடியுமோ, அவ்வளவு சிக்கனமாகச் செலவழிக் கின்றான். ஆனால், வார்த் தைகளை மட்டும் எண் ணாமல், சிந்திக்காமல் வாரிக் கொட்டுகின்றான். காரணம், வார்த்தைகள் அவன் உழைப்பினால் வந்தவை அல்ல; வாரிக் கொட்டுவதால், அவை வற்றிப் போவதும் இல்லை. எனவே, மனிதன் குழாய் நீரைக் கொப்பளிப்பது போல் வார்த் தைகளைக் கொப்பளிக் கின்றான்.

பேரா. தி. இராசகோபாலன்



இறைவன் எந்த உறுப்பிற்கும் கொடுக்காத பாதுகாப்பை நாவிற்குக் கொடுத்திருக்கிறான். கற்கோட்டை போன்று பற்கோட்டையைக் கொடுத்திருக்கிறான். அந்நாக்குக் கார மான சொற்களைப் பயன்படுத்தாமல், ஈரமான சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்றே உமிழ்நீர் என்ற அகழிக்குள்ளேயும் அதனை ஊற வைத்திருக்கின்றான்.

ஒருவேளை அந்த நாக்குச் சமூகத் தையும் சமுதாயத்தையும் காயப் படுத்தக்கூடிய விபரீதமான சொற் களைப் பேசிவிட்டால், அதனைக் கழுவி ஊற்றுவதற்கும் உமிழ்நீரைப் படைத்திருக்கின்றான். என்றாலும், சில நெறிகெட்ட மனிதர்கள் தறி கெட்டு வார்த்தைகளை வாரி இறைக் கின்றனர்.

திருவள்ளுவர் நாக்கில் நரம்பின்றி வரம்புகடந்து பேசுபவரைக் கண்டிப் பதற்காகவே, “ஒருவன் நல்ல குடும்பத் தில் பிறந்தவனா, இல் லையா என்பதை அவனு டைய வாயிலிருந்து பிறக் கும் சொற்களே தீர்மானிக் கும்” (நிலத்தில் கிடந் தமை கால் காட்டும், காட் டும் குலத்தில் பிறந் தார் வாய்ச்சொல் – குறள் 959) என்பார்.

வார்த்தைகளின் பிரயோகத்தை உணர்த்துவதற்காக வில்லிபுத்தூராழ்வார் மகாபாரதத்தில் ஒரு நாடகக் காட்சியையே நடத்திக் காட்டுகிறார். பதினேழாம் நாள் போரிலே கர்ணனை எதிர்த்துப் போரிடச் சென்ற அருச்சுனன், கர்ணன் முகம் தன்னுடைய அண்ணன் தருமனுடைய முகம்போல் தோன்றியதைப் பார்த்துப், போரிடாமல் திரும்பி வந்துவிடுகிறான். அதனைக் கண்டு சினங்கொண்ட தருமர், "அருச்சனா! நீ பிடித்திருப்பது வில்லா அல்லது விறகுக்கட்டையா?" என அருச்சுனனுடைய காண்டீபத்தைப் பழிக்கிறார். அருச்சுனன் தன்னுடைய வில்லாகிய காண்டீபத்தைப் பழிப்பவரைக் கொலை செய்து விடுவதாக ஏற்கெனவே சபதம் செய்திருக்கிறான்.

எனவே, தன்னுடைய அண்ணன் தருமரைக் கொலை செய்வதற்காக வில்லை வளைக்கின்றான். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த கண்ணன், அவர்களுக்கிடையில் குறுக்கிட்டு, "அருச்சுனா! காண்டீபத்தைப் பழித்தவரைக் கொல்ல வேண்டுமென்றால், வில்லை வளைத்துத்தான் கொல்ல வேண்டும் என்பதில்லை. எப்போதும் தருமரை 'வாங்க! போங்க!' என்று பேசுகின்ற நீ இப்பொழுது தருமரை 'நீ! வா! போ!' என்று இரண்டு வார்த்தை பேசு. அவை அவரைக் கொன்றதற்குச் சமம்" என்றார்.

அருச்சுனன் அதனைக் கேட்டுத் தருமரைப் பார்த்து, "சூதாட்டத்தில் காய் உருட்டியது நீ; எங்கள் அனைவரையும் பணயம் வைத்தது நீ; துகிலுரிதலைப் பார்த்துக் கொண்டிருந்தது நீ" என்று பேசியவுடன் தருமரும் தலை கவிழ்ந்து நின்றார்.

என்றாலும், அடக்கமின்றி தருமரைக் காயப்படுத்திப் பேசிவிட்டோமே என வெட்கப்பட்ட அருச்சுனன், தான்செய்த தவறுக்குத் தற்கொலையே தீர்வு என்று எண்ணி, உடைவாளை உருவித் தன் மார்பில் பாய்ச்ச முயலுகின்றான். அப்போதும் குறுக்கிட்ட கண்ணன், "அருச்சுனா! நீ செய்த தவறுக்கு உன்னைக் கொலை செய்ய முயலுவது நியாயம். ஆனால், அதற்காக நீ நேரடியாகத் தற்கொலை செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. உன்னை நீயே தற்புகழ்ச்சியாக நாலு வார்த்தைகள் கூறிக் கொண்டாலே போதும்! தற்புகழ்ச்சி தற்கொலைக்குச் சமம்" என்றான்.

அதனைச் செவிமடுத்த அருச்சுனன் தன்னைத் தற்கொலை செய்துகொள்ளும் முகத்தான், "நான்தான் சுயம்வரத்தில் பாஞ்சாலியைப் பெற்றேன்; நான்தான் பாசுபதாஸ்த்திரம் பெற்றேன். நான்தான் சிகண்டியை முன்னிருத்தி பீஷ்மர் மேல் அம்பு போட்டேன்" என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு தருமரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினான்.

சொற்கள் பிறரைப் பண்படுத்துவதாக அமைய வேண்டுமே தவிர, புண்படுத்துவதாக அமையக் கூடாது என்பதற்காக எதிரும் புதிருமான காட்சிகளை அடுக்கி வில்லிபுத்தூராழ்வார் ஒரு நாடகத்தையே போர்க்களத்தில் நடத்திக் காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் தீயினாற் சுட்டப் புண் உள்ளே ஆறிவிடும்; ஆனால் நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது என எச்சரித்திருந்த போதும், இன்றும் வாய்க்கொழுப்பினால் நல்லவர்களையும், வல்லவர்களையும் சுட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஆத்திரக்காரன் தன்னுடைய கையிலேயுள்ள கண்ணாடிப் பாத்திரத்தைத் தரையிலே ஓங்கியடித்தால், தெறித்துவிழும் கண்ணாடித் துகள்கள் மற்றவர்களுடைய கால்களைக் கீறுவதற்கு முன்னர், எறிந்தவன் காலையே முதலில் பதம் பார்க்கும்.

சூனியக்காரர்கள் ஏவிய சூனியம் கடைசியில் ஏவியவனையே வந்தடைவதுபோல், அள்ளிக் கொட்டின வார்த்தைகள், வெளிப்படுத்திய வாயையே புண் ஆக்கும். இதனை 'நான்மணிக்கடிகை' எனும் இலக்கியம், "கல்லா ஒருவர்க்குத் தம் வாயிற் சொல், கூற்றம்" எனக் கூறியிருக்கிறது.

நீதி – நேர்மையை எண்ணிப் பாராமல், சூழ்நிலைக்கேற்றவாறு பேசிவிடுவது, ஒருவருக்குத் துடைக்க முடியாத களங்கத்தை ஏற்படுத்திவிடும். பண்டித ஜவகர்லால் நேரு இங்கிலாந்திலுள்ள ஹாரோவிலும், கேம்பிரிட்ஜைச் சார்ந்த கல்லூரியில் படித்தவர். ஆங்கில மொழியில் ஜாம்பவான்கள் எனச் சொல்லப்பட்ட மூவரில், ஒருவர். ஆங்கிலத்தில் அவர் எழுதிச் சென்ற உலக சரித்திரமும் டிஸ்கவரி ஆப் இண்டியாவும், ஆங்கில இலக்கியங்கள் போல் பாராட்டப்படுகின்றன. என்றாலும் பாராளுமன்றத்தில் பேசும்போது "Shall - Will இரண்டிற்கும் வித்தியாசம் கிடையாது; ஒரே பொருளைத் தரும் சொற்களே எனப் பேசியது, யானைக்கும் அடி சறுக்கும் என்பதாகும்.




என்றாலும், அவர் பேசிய அந்தப் பேச்சு, உலக அரங்கின் உச்சத்தில் இருந்த நேரு பெருமானாரை ஒருபடி கீழே இறக்கிக் காட்டியது. அதுபோல, முதல் இந்திய – பாகிஸ்தான் யுத்தம் முடிந்தவுடன், பாகிஸ்தான் அதிபர் பூட்டோ ஐ.நா. சபையில் இந்தியர்களை 'நாய்கள்' எனப் பேசியது கேட்டு, அகிலமே அவரைப் பரிகசித்தது. "பேசாத பேச்சுக்கு நீ எஜமான்; பேசிய பேச்சுக்கு நீ அடிமை" என்பதை அதிபர் பூட்டோ மறந்துவிட்டார்.


அவ்வாறே தமிழ்நாட்டிலும் ஆழ்ந்த அடங்கிய கொள்கைச் சான்றோராகிய பேரறிஞர் அண்ணா வாழ்க்கையிலும் ஓர் அசம்பாவிதம் நடந்தது. யேல் பல்கலைக்கழகம் அழைத்து பாராட்டப்பெற்ற முதல் ஆசியாக்காரர் பேரறிஞர் அண்ணா.

அந்தப் பெருந்தன்மையின் வடிவம், 1962–இல் காஞ்சிபுரத்தில் திரு. நடேச முதலியாரை எதிர்த்து நின்றபோது, அந்த வேட்பாளர் செலுத்திய பண ஆதிக்கத்தைக் கண்டு சினந்து, "நடேச முதலியார் சாணி – நான் சந்தனம்" எனப் பேசிவிட்டார். அப்படிப் பேசியமைக்காக அவரே பலமுறை சகத் தோழர்களிடத்தில் கழிவிரக்கப்பட்டிருக்கிறார். கடந்த கால நிகழ்ச்சிகள் ஏன் சொல்லப்படுகின்றன என்றால், சிகரம் போல் உயர்ந்து நின்றவர்களைக்கூட, அவசரத்தில் வடித்த சொற்கள் பள்ளத் தாக்குகளுக்கு இழுத்துவந்துவிடும் என்பதைச் சொல்வதற்காகத்தான்!

வார்த்தைகளின் வீரியம் தெரியாமல் பேசி, மற்றவர்களைப் புண்படுத்துகின்ற பேச்சு நம்முடைய நாட்டில் மட்டுமன்றி, வளர்ந்த நாடுகளிலும் உண்டு. இங்கிலாந்து பாராளுமன்றத்திலே 'இளைய பிட்' (Young Pitt) எனும் பெயரில் வெகு சாதுர்யமாகப் பேசக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்

ஒருவர் இருந்தார். அவருடைய சாமர்த்தியத்தை எதிர்கொள்ள முடியாத அமைச்சர் ஒருவர், "அன்பான இளைய பிட் அவர்களே! இன்றைக்கு ஆச்சரியப்படத்தக்க அளவுக்குப் பேசுகிறீர்களே! உங்களுக்கு ஓர் உண்மை தெரியுமா? உங்கள் தாத்தா கழுதை வண்டி ஓட்டிக் கொண்டிருந்தார் என்ற செய்தி தெரியுமா?" எனக் கேட்டார்.


நேருஜி


அண்ணா

அதற்குப் பதில் சொல்ல வந்த இளைய பிட், "ஆமாம்! நீங்கள் சொல்வது உண்மைதான்! என் தாத்தா ஓட்டிக் கொண்டிருந்த வண்டி இன்னும் என் வீட்டிலேயே கிடக்கின்றது. கழுதைதான் காணாமற் போய்விட்டது என்று தேடிக்கொண்டிருந்தேன்; இப்போது அதனைக் கண்டுபிடித்துவிட்டேன்" என்றார். வார்த்தைகளை அள்ளி வீசிய அமைச்சர் கொடுத்ததைவிட வாங்கிக் கட்டிக் கொண்டதுதான் அதிகம்.

கரும்பைக் கடித்துக் கணுக்கள் உடையும்படி நெரித்து ஆலையில் துவைத்துச் சாற்றைப் பிழிந்தாலும், அது இனிய ருசியையே தரும். அதுபோல நற்குலத்தில் பிறந்தவர்கள் தம்மைப் பிறர் புண்படும்படித் தாக்கிப் பேசினாலும், பதிலுக்குத் தம் வாயினால் வசைச் சொற்களைப் பேச மாட்டார்கள் (நாலடியார் – 156 பாடல்) என அறிவுறுத்தினார் சமண முனிவர்.

மற்ற மற்ற இலக்கியவாதிகளைக் காட்டிலும் முன்னுறையரையனார் எனும் புலவர் நா காக்க வேண்டியதின் அவசியத்தை வெகு அற்புதமாக எடுத்துரைக்கிறார். "மணலுக்குள் முழுகி மறைந்து கிடக்கும் தவளைகள் தம் குரலை எழுப்பித் தங்களைத் தின்பதற்குப் பாம்பு களைத் தாமே வரவழைக்கும். அதுபோலப் பொல்லாதவற்றைப் பேசி மறைந்து ஒழுகும் பேதை, தான் சொல்லும் சொல்லாலேயே தன்னைத் துயரத்தில் ஆழ்த்திக் கொள்வான்" என முன்றுறையரையனார் பள்ளிக் கூடத்துப் பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொல்லிப் போயிருக்கிறார். அப்பாடல் வருமாறு:

"பொல்லாத சொல்லி மறைந்து ஒழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் – நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும் தன் வாயாற் கெடும்"

(பழமொழி நானூறு).

மாதுளம்பழத்திற்குள் இருக்கின்ற முத்துக்களை வெளியில் எளிதாக விரலால் உதிர்த்துவிட முடியும். ஆனால் உதிர்ந்த முத்துக்களை மீண்டும் அந்தந்த இடத்தில் பொருத்தி வைக்க முடியாது. அவ்வாறே நாவிலிருந்து புறப்பட்ட சொல்லம்புகளை, மீண்டும் வாயாகிய அம்பறாக்கூட்டிற்குள் திணிக்க முடியாது.

பார்வையிழந்த ஒரு மாற்றுத் திறனாளி பையிலிருக்கின்ற நாணயத்தைத் தடவித் தடவிப் பார்த்துச் செலவழிப்பதுபோல், நாக்குப் படைத்தவர்களும் வார்த்தைகளைத் தடவித் தடவிப் பார்த்து வெளியே விட வேண்டும். அன்றெனில், வாய் புண்ணாகிவிடும்; நாக்குத் தெறித்துவிடும்.

●



என்.ஆர். ஜெயசந்திரன்

ஆன்மிகம்

ஏழு சுற்றுப் பிள்ளையாரப்பன் ஆலயம்

பழங்காலத்திலேயே நாகரிகம் மேம்பட்டப் பகுதியாக விளங்கிய தகடூர் நாட்டின் தற்போதைய தருமபுரி நகருக்கு வடகிழக்கில் 25 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் கம்பைநல்லூர். தருமபுரி நகருக்குக் கிழக்கே ஓடும் சனத்குமார் நதி கம்பைநல்லூர் வழியாகச் சென்று தென்பெண்ணையாற்றில் கலக்கிறது.

சங்க காலத்தில் அதியமான் மன்னர்களால் ஆளப்பட்ட அந்த ஊர் தருமபுரி பகுதியின் வணிகத் தலைநகரமாக விளங்கியது. அதியமான் மன்னர்களின் மரபில் வந்த ராஜராஜ அதியமான் ஆட்சியில் அந்த ஊர் மிகப் பெரிய வணிகக் கேந்திரமாகச் செயல்பட்டது.

கம்பைநல்லூர் பெயர்க் காரணம் : சங்க காலத்தில் வள்ளல் அதியமான் ஆண்டபொழுது ஔவையார் வாழ்ந்தார். அதே காலகட்டத்தில் அந்தப் பகுதியில் 'நாகையனர்' என்ற பெண் புலவரும் வாழ்ந்து வந்தார். அவருக்குச் சிறப்பு செய்யும் வகையில் அந்த ஊர் நாகையனப்பள்ளி என்று அழைக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக அந்தப் பெயரே இருந்து வந்தது.



ஏழு சுற்றுப் பிள்ளையாரப்பன் ஆலயம்

விஜயநகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் கம்பண்ண உடையார் என்ற குறுநில மன்னர் அப்பகுதியை ஆண்டு வந்தார். அந்தக் காலத்தில் வாணிபத்தில் சிறந்து விளங்கும் இடத்தை நன்மைகள் கிடைக்கும் இடம் என்ற பொருளில் 'நல்லூர்' என்று அழைப்பர். எனவே, அப்போது ஆட்சி செய்த மன்னரின்

பெயருடன் சேர்த்து 'கம்பைநல்லூர்' எனப் பெயர் பெற்றது.

ஏழுசுற்றுப் பிள்ளையார் ஆலயம் : கம்பைநல்லூருக்குத் தெற்கே ஒடசல் பட்டிக்குச் செல்லும் வழியில் சுமார் 4 கி.மீ. தொலைவில் வெதரம்பட்டி என்ற ஊர் உள்ளது. அந்த ஊரில் தற்பொழுது புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் பத்ரகாளியம்மன் ஆலயத்தின் அருகில் சாலைக்கு மேற்கே திறந்தவெளியில் கற்களால் உருவாக்கப்பட்ட அதிசயமான பிள்ளையார் ஆலயம் உள்ளது. அதனை 'ஏழுசுற்றுப் பிள்ளையார் ஆலயம்' என்று அழைக்கின்றனர்.

ஆலயம் என்று அதை அழைத்தாலும், அங்கு சுவர்களோ, கூரைகளோ, சிலைகளோ, கோபுரமோ கிடையாது. கற்களைச் சதுரமான அமைப்பில் ஏழுசுற்றுகள் வைத்து அமைக்கப்பட்ட அந்த ஆலயம், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையானது. 250 அடி நீளம், 250 அடி அகலம் கொண்ட சதுரமான அமைப்பில் வரிசையாகக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன.



ஏழு சுற்றுகளுக்கு நடுவில் அமைந்துள்ள பிள்ளையாரப்பன்

ஆலயம் அமைந்த காரணம் : ஆதிகாலத்தில் அந்தப் பகுதியில் வாழ்ந்த ஒரு பெரியவர் தனது வேண்டுதல் நிறைவேறியதால், அருகிலுள்ள பல்வேறு இடங்களில் உள்ள ஏழு மலைகளுக்குச் சென்று கற்களைக் கொண்டு வந்து அந்த அதிசய ஆலயத்தை அமைத்ததாகக் கூறுகின்றனர். அந்த அமைப்பைத் தொல்லியல் அறிஞர்கள் புதிர்நிலை அமைப்பு என்று அழைக்கின்றனர். அந்தப் புதிர்நிலையின் நுழைவுவாயில் கிழக்குத் திசையை நோக்கி அமைந்துள்ளது.

புதிர்நிலைப் பாதை : அதன் மையப் பகுதியை நேரடியாகச் சென்று சேர முடியாதபடி குறுக்கு, மறுக்குமாக அமைந்துள்ள பாதையைப் புதிர்பாதை என்பர். அந்தப் புதிர் பாதையில் பயணிப்போர் நேராக அந்த மையப் பகுதியை அடைந்துவிட முடியாது. குறுக்கில் தடுப்புகள் இருக்கும். தடுப்புகளுக்கு அருகில் வழி இருக்கும். அந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். அப்படி அமைந்துள்ள பாதைகளில் உள்ள தடுப்புகளைத் தாண்டிச் செல்லக் கூடாது. அந்தப் புதிர் பாதையில் நடப்பவர் தன் விருப்பம் போல நான்கு திசைகளிலும் குறுக்கும் மறுக்குமாக நடக்கலாம். ஆனால் தடுப்பைத் தாண்டிச் செல்லக் கூடாது.

யோக மார்க்கம் : இந்தப் புதிர் பாதையானது யோக மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு வடிக்கப்பட்ட சதுர வடிவமாகும். இதனால் அந்தப் புதிர்பாதையில் செல்பவர் தன் சிந்தனையை ஒருமுகப்படுத்தி ஒவ்வொரு அடியையும்

எடுத்துவைக்க வேண்டும். தவறினால் பாதை மாறிவிடும். அதனால் அதன் மையப் பகுதியை அடைய முடியாமல் போக நேரிடும். மையத்தை அடைந்து, வந்த வழியே திரும்பி நுழைவு வாயிலுக்கு வந்த பிறகே அந்த யோகப் பயணம் முடிவு பெறுகிறது.

நுழைவுவாயிலும், வெளியேறும் வாயிலும் ஒன்றே. இந்த அமைப்பி னால் உடல் புவிஈர்ப்பு விசையோடு இயைந்து செல்லும். அந்த ஏழு சுற்றுகளும் நம் உடலில் உள்ள ஏழு சக்கரங்களை இயக்கி மூளையைத் தூண்டுகிறது. மூளை தூண்டப்படுவ தால் உடலின் இயக்கம் சீராகிறது.

கரிநாளில் விழா : புதிர்ப்பாதைச் சின்னங்கள் மனித வழிபாட்டின் வள மைச் சின்னங்களாகக் கருதப்படு கின்றன. பழங்கால மக்கள் குழந்தை வரம் வேண்டியும், அவர்களது நலம் வேண்டியும் இந்தப் புதிர்நிலைப் பாதையில் நடை பயின்று மையத்தில் உள்ள சற்றே உயரமானக் க ல்லை வணங்குகின்றனர்.

கம்பைநல்லூர் பகுதி மக்கள் பொங்கல் விழாவில் கரிநாளன்று அங்குப் பொங்கல் வைத்து வழிபடு கின்றனர். மையப் பகுதியில் சிலை ஏதும் இல்லை. அந்த ஏழுசுற்றுப் பிள்ளையாரப்பன் ஆலயத்தின் புதிர்நிலை வழித்தடத்திற்கு மேற்கில் சில சிலைகளைத் தற்பொழுது வைத் துள்ளனர். இந்த அதிசய ஆலயத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு, இதைப் பார் வையிட பலர் அங்கு அடிக்கடி வருகின்றனர்.

வட்டவடிவப் புதிர்நிலை : கம்பைநல்லூரில் உள்ள புதிர்நிலை அமைப்பைப் போலவே கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டைக்கு அருகில் உள்ள குந்துக்கோட்டைப் பகுதியில் உள்ள ‘ஒளிபெண்டா’ என்ற இடத்தில் வட்டவடிவ அமைப்பில் ஏழுசுற்றுகள் கொண்ட புதிர்நிலை அமைந்துள்ளது.

இந்தப் புதிர்நிலையும் இரண் டாயிரம் ஆண்டுகள் பழமையானது. சிக்கலான சுற்றுவழி உள்ள புதிர்நிலை களை அமைப்பதில் தமிழர்கள் நிபுணர்கள் என்பதைப் பல்வேறு இடங்களில் உள்ள புதிர்நிலைகள் நிரூ பிக்கின்றன. மற்ற மாவட்டங்களிலும் அவை இருந்திருக்கலாம் என்றும், காலப்போக்கில் மக்கள் அதன் பெரு மையையும், சிறப்பையும் உணராமல் அழித்துவிட்டிருக்கலாம் என்றும் தொல்லியல் ஆர்வலர்கள் கூறு கின்றனர். ●



பழக்க தோஷம் !

அவரவர்கள் பாட்டுக்கு
கிராமம்விட்டு தூரதேசம்
போய்விட்டார்கள்...
சிடுக்கு வாரியால்
பேத்திமார்களுக்கு
ஈரு சொடுக்கிய ஆயாவின்
பழக்கப்பட்ட கைகள்
சும்மாயிருக்க மாட்டாமல்...
வீட்டில் வளரும்
பூனைக் குட்டிகளுக்கும்
நாய்க் குட்டிகளுக்கும்
ஆட்டுக் குட்டிகளுக்கும்
உண்ணிகள் களைந்தன !

- நா. கிருஷ்ணமூர்த்தி



கட்டுரை

ஜானகி மணாளன்

2019-இன் நோபல் பரிசாளர்கள்!

2019 – இவ்வாண்டுக்கான நோபல் பரிசுகள் அக்டோபர் 21 வாக்கில் அறிவிக்கப்பட்டு விட்டன. 1901–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இப்பரிசுகள் மருத்துவம் அல்லது உயிரியல், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதிப் பணி, பொருளாதாரம் ஆகிய ஆறு துறை களுக்கும் ஆண்டுதோறும் டிசம்பர் 10–ஆம் நாள் வழங்கப்படுகின்றன.


இந்த தினம், இப்பரிசை நிறுவிய ஸ்வீடன் நாட்டின் பொறியியல் மற்றும் வேதி யியல் நிபுணர் ஆல்ஃபிரட் நோபலின் நினைவு நாளாகும். அவரது பிறப்பு 1833 அக்டோபர் 21; மறைவு 1896 டிசம்பர் 10.

இவ்வாண்டு மருத்துவத்திற்கு மூவர், இயற்பியலுக்கு மூவர், வேதி யியலுக்கு மூவர், இலக்கியத்திற்கு இருவர், அமைதிப்பணிக்கு ஒருவர், பொருளாதாரத்திற்கு மூவர் என்று மொத்தம் 15 பேர் இப்பரிசைப் பெறு கின்றனர்.

ஒவ்வொரு துறைக்குமான மொத்தப் பரிசுத் தொகையாகிய 9.14 லட்சம் டாலரை – அதாவது ஏறத்தாழ ரூ. 6.5 கோடியைப் பரிசளிப்புக்குழு நிர்ணயித்துள்ள விகிதாசாரப்படி இந்த 15 பேருக் கும் பகிர்ந்தளிக்கப்படும்.

அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வே யிலும், மற்ற ஐந்து பிரிவுகளுக்குமான பரிசுகள் ஸ்வீடனிலும் ஏற்பாடாகும் சிறப்பு விழாவில் அந் நாட்டு அரசால் வழங்கப்படுகிறது.

மருத்துவம் : இதற்கான நோபல் பரிசு இவ் வாண்டு மூவருக்கு வழங்கப்படுகிறது. இருவர் அமெரிக்கர். வில்லியம் ஜி.கெய்லின் (61) – இவர் மருத்துவ மைய ஆராய்ச்சியாளர். கிரேக் எல்.செமன்சா (63) – இவர் ஜான் ஹாப்கின்ஸ் செல் பொறியியல் மையத்தின் தசை ஆராய்ச்சித் திட்ட இயக்குநர். மூன்றாமவர் பிரிட்டனின் சர். பீட்டர் ஜெ. ரெட்கிளிஃப் (65). இவர் லண்டன், பிரான்சிஸ் கிரிக் மையத்தின் இயக்குநர்.



வில்லியம் ஜி.கெய்லின் · சர்.பீட்டர். ஜெ.ரெட்கிளிஃப் · கிரெக். எல்.செமன்சா

இம்மூவரும் உடலிலுள்ள அணுக்கள் எவ் வாறு ஆக்சிஜன் அளவை உணர்ந்து கொள் கின்றன என்றும், அதற்கு ஏற்ப அவை எவ்விதம் செயல்படுகின்றன என்றும் ஆய்வு செய்து புதிய உண்மைகளைக் கண்டறிந்தனர். அதற்காக இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அக்கண்டுபிடிப்புகள் மூலம் ரத்தசோகை மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட பல நோய்களுக்கான மருந்துகள் உருவாக்குவதற்கான வழிமுறைகள் பிறந்தன.

இயற்பியல் : இப்பரிசும் மூவருக்கு வழங்கப் படுகிறது. இருவர் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந் தவர்கள். மைக்கேல் மயோ (77), டிடேகெலோ (53) இருவரும் ஜெனிவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர். மூன்றாமவர் ஜேம்ஸ் பீபிள்ஸ் (84) – இவர் கனடா – அமெரிக்கா, பிரின்ஸ்டன் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்தவர். இவர் அண்ட வியல் நிபுணர். மற்ற இருவரும் விண்வெளி ஆய்வாளர்கள்.

பெருவெடிப்புக்குப் பிறகு நமது அண்டம் எவ் வாறு உருவானது என்பதற்கான கோட்பாடுகளை உருவாக்கியதற்காக இவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது என்று தேர்வுக்குழு அறிவித் துள்ளது. சூரியக் குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள்கள் குறித்து இம்மூவர் ஆய்வுகளை மேற் கொண்டனர்.



ஜேம்ஸ் பீபிள்ஸ் டிடேகெலோ மைக்கேல் மயோ

வேதியியல் : இப்பரிசும் இவ்வாண்டு மூவ ருக்கு வழங்கப்படுகிறது. அவர்களில் ஒருவர் அமெரிக்கா, டெக்சாஸ் பல்கலைக்கழகப் பேராசி ரியர் ஜான் பி.குட்இனஃப். இவருக்கு 97 வயதா கிறது. நோபல் பரிசு பெறுபவர்களிலேயே மிக அதிக வயதானவர். மற்றொருவர் பிரிட்டனைச் சேர்ந்த எம். ஸ்டான்லி விட்டிங்ஹாம் (77) அமெ ரிக்காவில் நியூயார்க் நகரில் உள்ள பிங்கம்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். ஆக்ஸ்போர்டில் பயின்றவர்.

மூன்றாமவர், ஜப்பான் நாட்டின் டோக்கியோ வின் அஷாய் கசேய் நிறுவனத்தில் பணியாற்றி வரும் அகிரா யோஷினோ (71). மேலும் அந்நாட் டின் நகோயா நகரின் மெய்ஜோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிகிறார்.

இம்மூவரும் தற்போதைய செல்ஃபோன், மடிக்கணினி, மின் வாகனங்கள் முதலியவற்றில் பயன்படுத்தப்படும் லித்தியம் பேட்டரிகளுக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள். 1970–களில் எண்ணெய்த் தட்டுப்பாடு வந்தபோது, லித்தியம் என்ற உலோகத்தில் மறைந்துள்ள சக்தியை வெளிக்கொணரும் வழிமுறையை ஸ்டான்லி விட்டிங்ஹாம் கண்டுபிடித்து, இயற்கையிலேயே எலக்ட்ரான்களை வெளிப்படுத்தும் திறன் கொண்ட லித்தியத்தைப் பயன்படுத்தி முதல் பேட்டரியை உருவாக்கினார்.

அதை அடிப்படையாகக் கொண்டு ஜான் பி.குட்இனஃப் சில மாற்றங்களுடன் மற்றொரு பேட்டரியை வடிவமைத்தார். அது 4 வோல்ட் மின் சாரத்தை வெளியிடும் சக்தி வாய்ந்தது. இவ்விரு கண்டுபிடிப்புகளும் எதிர்கால லித்தியம் பேட்டரி களின் முன்னோடிகளாயின. மேலும் 1985–இல் லித்தியம் அயனிகளைச் சேகரிக்கக்கூடிய கார்பனை அடிப் படையாகக் கொண்ட புதிய பொருளை அகிரா யோஷினோவின் முயற்சி, லித்தியம் பேட்டரியின் வர்த்தக ரீதியிலான உற்பத்திக்கு வழிவகுத்தது. இந்தப் பங்களிப்புக் காக இம்மூவருக்கும் இவ்வாண்டின் வேதியியல் நோபல் பரிசு வழங்கப் படுகிறது.

இலக்கியம் : இலக்கியத்திற்கான நோபல் பரிசுகள் இம்முறை இரண்டு ஆண்டுகளுக்கானவை வழங்கப் பட்டன. 2018–ஆம் ஆண்டுத் தேர்வுக்குழு உறுப்பினர் ஒருவர் பாலியல் வழக்கில் சிக்கிச் சிறையில் அடைக்கப்பட்டதால், பரிசு நிறுத்தி வைக்கப்பட்டது. அது இவ்வாண்டு போலந்து நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் ஒல்கா டோக்கர்ஸக் (57) என்ற பெண்மணிக்கு வழங்கப்படுகிறது.

போலிஷ் எழுத்தாளர்களில் அவர் தலை சிறந்தவராகக் கருதப்படுகிறார். அவரது எழுத்துக் களில் கதாபாத்திரங்களின் தனித்துவக் குணங் கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும். அவரது படைப்புகள் மிகவும் துல்லியமான கவித் துவம் மிக்க வார்த்தைகளைக் கொண்டு எழுதப் பட்டிருக்கும்.

அவர் படைப்புகளில் தலைசிறந்தது 'த புக்ஸ் ஆஃப் ஜேக்கப்' என்ற புத்தகம், அதிகம் அறியப் படாத யூதப் பிரிவாகிய 'ஃபிராங்கிஸம்' பற்றி

விளக்குகிறது. 2014–இல் வெளியான இந்தப் புத்தகம் மூலம் அதன் ஆசிரியர் ஒல்கா டோக்கர்ஸக், ஐரோப்பிய வரலாற்றின் மறந்துபோன ஓர் அத்தியாயத்திற்குப் புத்துயிரூட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது நோபல் பரிசளிப்புக்குழு.

2019–ஆம் ஆண்டுக்கான பரிசை ஜெர்மன் மொழி எழுத்தாளராகிய பீட்டர் ஹேண்ட்கே (76) பெறுகிறார். மனித அனுபவங்களை ஆய்வு செய்து, அதனை அழகியலுடன் வெளிப்படுத்துவதில் வல்லவர். அவற்றில் புதியனவற்றை அறியும் வேட்கையும், அதற்குப் புத்துயிரூட்டம் தரும் புத்தாக்கச் செழுமையும் நிறைந்திருக்கும்.

அமைதிப்பணி : இவ்வாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு எத்தியோப்பியப் பிரதமர் (43) ‘அபி அகமது அலி’க்கு வழங்கப்படுகிறது. அண்டை நாடாகிய ‘எரித்ரியா’ உடன் நீடித்து வந்த பகைமையைப் போக்க அவர் மேற்கொண்ட அமைதி நடவடிக்கைகளுக்காக இப்பரிசு வழங்கப்படுகிறது. அவர் மேற்கொண்ட முன் முயற்சிகளுக்கு எரித்ரியா அதிபர் ஆஃப் வெரர்கியும் ஒத்துழைப்பு அளித்தார். அவர்களிடையே ஏற்பட்ட இந்த அமைதி ஒப்பந்தம், இவ்விரு நாட்டு மக்களின் வளர்ச்சிக்கு உதவும் என்று பரிசளிப்புக் குழு நம்புவதாக நோபல் பரிசுக்குழு குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரம் : இவ்வாண்டுக்கான பொருளாதார நோபல் பரிசு, இந்திய அமெரிக்கப் பொருளாதார நிபுணர் அபிஜித் பானர்ஜி, பிரான்சின் வம்சாவளி அமெரிக்கர் எஸ்தர் டஃப்ளோ மற்றும் அமெரிக்கப் பொருளாதார நிபுணர் மைக்கேல் கிரெமர் ஆகிய மூவருக்கும் வழங்கப்படுகிறது.

இவர்களில் 58 வயதான அபிஜித் பானர்ஜியும், 46 வயதான எஸ்தர் டஃப்ளோவும் கணவன் –



அபிஜித் பானர்ஜி எஸ்தர் டஃப்ளோ



ஜான் பி. குட் இனாஃப் எம்.ஸ்டான்லி விட்டிங்ஹாம் அகிரா யோஷினோ

மனைவி ஆவர். எஸ்தர் மிகக் குறைந்த வயதில் இப்பரிசைப் பெறும் இரண்டாவது பெண். மேலும், இப்பரிசைப் பெறும் இரண்டாவது பெண். இருவரும் அமெரிக்கா, மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இப்பரிசைப் பெறும் மூன்றாவது நபராகிய மைக்கேல் கிரெமர் (54) ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இம்மூவரும் செய்து வெளியிட்ட ஆய்வுகள்படி, பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டிப் பின்பற்றி வரும் நாடுகள் வறுமை ஒழிப்பில் வெற்றி பெற்று வருகின்றன. வறுமை ஒழிப்புச் சார்ந்த பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டமைக்காக இம்மூவருக்கும் இப்பரிசு வழங்கப்படுகிறது என்று பரிசளிப்புக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் இவர்களின் பொருளாதார ஆய்வு முறை மூலம் 50 லட்சம் சிறார்கள் பள்ளிக் கல்வி பெற்றுள்ளனர். மேலும் இவர்களது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மானியத் திட்டம் தொடர்பான ஆய்வுகளும் பல நாடுகளுக்குப் பயனளித்துள்ளன.

அபிஜித் பானர்ஜி நம் நாட்டின் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர். கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் படிப்பை முடித்து, தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அப்பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அமெரிக்கா ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். வளர்ச்சிப் பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ள அவர், தற்போது மசாசூசெட்ஸ் ஆய்வுக் கல்வி நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2003–இல் ‘அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு நடவடிக்கை மையத்’தை உருவாக்கினார். இவரது மனைவி எஸ்தர் அந்த அமைப்பில் பங்காற்றி வருகிறார். மேலும் அபிஜித் ஐ.நா. பொதுச் செயலருக்கான உயர்நிலை ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். •



டாக்டர் க. பழனித்துரை

கட்டுரை

நமக்குத் தேவை காந்தி

எதை எதிர்பார்த்துச் சுதந்திரம் வாங்கினோம்? அதை நாம் அடைந்தோமா? இன்று நாம் எங்கு வந்து நிற்கிறோம்? என்பதை நினைத்துப் பார்த்தால் ஒன்று நமக்குத் தெளிவாகத் தெரியும். நாம் மிகப்பெரிய மாற்றங்களைப் புறத்தில் அடைந்துள்ளோம். வாழ்க்கைக்கான வசதிகளை நாம் அடைந்துள்ளோம். அந்த வசதிகளும்கூட அனைவருக்குமானதல்ல. கல்வியில் வளர்ந்தோம், விஞ்ஞானத்தில் வளர்ந்தோம், தொழில்நுட்பத்தில் வளர்ந்தோம். இந்த வளர்ச்சி அனைத்தும் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் போய்ச் சேரவில்லை.

அது மட்டுமல்ல, இந்தக் கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி அனைத்தும் லாபம் சம்பாதிக்கவும், பொருள் ஈட்டுவதற்கும், சுரண்டுவதற்கும் பயன்பட்டனவேயன்றி, மக்களைப் பண்புடையவராக மாற்ற உதவிடவில்லை என்பதை நாம் மறக்க இயலாது. இவை அனைத்தும் சமூகம் சார்ந்ததாகவும் இல்லை. மாறாக சந்தைக்கானதாகவே இருந்து பொருள் உற்பத்திக்கும் வியாபாரத்துக்குமானதாகவே இருந்துள்ளது என்பதைத்தான் தொடர்ந்து நாம் பார்த்து வருகின்றோம்.

இந்திய மக்களை இந்த 73 வருட மக்களாட்சியில் அரசாங்கத்தின் வழியாகவே பார்த்துச் செயல்பட்டு வந்துள்ளோம். இதன் விளைவு பெரும்பான்மை மக்கள் வாக்காளரானோம், பயனாளியானோம், மனுதாரராக, மாறினோம், நுகர்வோராக வெறிபிடித்து அலைகின்றோம். ஆனால் பொறுப்புள்ள குடிமக்களாக நாம் மாறவும் இல்லை, மாற்றப்படவும் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.


அரசாங்கம் என்பது மக்களுக்கு அஞ்சி மக்களுக்குச் சேவை செய்யும் சேவகன் என்பதிலிருந்து மக்களைத் தங்களுக்குக் கட்டுப்பட்டவராக அரசாங்கத்திற்கு அஞ்சுபவராகச் செயல்படும் நிலைக்கு வந்திருப்பது மக்களாட்சியில் ஒரு துரதிஷ்டமே.

இன்று நாம் ஒரு மதிக்கத்தக்க மரியாதையுடைய மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.



அதற்குக் காரணம் எல்லாத் தரப்பிலும் கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ நம் அரசாங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டோம்.

இந்தத் தாழ்நிலைக்கு நாம் வந்ததற்குக் காரணம் என்ன என்பதைச் சற்று யோசித்துப் பார்த்தால், ஓர் உண்மை புரியும். காந்திய வழியை நிராகரித்ததால், நாம் இந்தத் தாழ்நிலைக்கு வந்துள்ளோம். நமக்கு ஒரு சிந்தனைப் போக்கு உண்டு. எதை எல்லாம் நம்மால் கடைப்பிடிக்க முடியவில்லையோ, அவற்றையெல்லாம் நாம் தெய்வமாக மாற்றி வழிபட்டு மறந்துவிடும் ஒரு வழக்கம் நமக்கு உண்டு. அந்த நிலைக்கு மகாத்மா காந்தியையும் கொண்டு வந்துவிட்டோம். காந்தி உலகத்தால் பாராட்டப்பட்ட மாமனிதர். உலக விஞ்ஞானிகள் போற்றிக்கொண்டாடிய ஞானி மற்றும் செயல்பாட்டாளர்.



மகாத்மா காந்தி

அமெரிக்க சுதந்திரப் போராட்டத்திற்கு தாமஸ் பெயின் அழைக்கப்பட்டதுபோல், இந்தியாவுக்குச் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அழைக்கப்பட்டவர். தென்னாப்பிரிக்காவில் 21 ஆண்டுக் காலம் தன்னைத் தன் கர்ம யோகத்தின் மூலம் உயர்த்திக் கொண்டு இந்தியா வந்தபோது, இந்திய மக்களுக்குப் பேரொளி வழிகாட்ட வந்ததுபோல் மக்களிடம் ஓர் உணர்வை உருவாக்கிக் கொண்டு வந்து இறங்கினார்.

வந்து இறங்கியவர் இந்தியாவைச் சுற்றி இந்திய மக்களை 2000 முக்கிய இடங்களில் சந்தித்துச் சொற்பொழிவு நிகழ்த்தவில்லை, மாறாக **அவர்களுடன் கலந்துரையாடினார். மக்களிடம் கல்வி கற்க ஆரம்பித்தார்.**

இந்தியா என்பது உலகிற்கு ஒரு புரியாத புதிர். நமக்கும் கூட. ஆனால் காந்தி இந்தியாவைச் சுற்றினார். இந்தியாவின் ஆன்மா எங்கே இருக்கிறது? இந்தியாவின் உயிர்ப்பு எங்குள்ளது? இந்திய மண்ணின் சாரம் எது? இந்தியாவின் முகம் எது? இந்தியாவிற்கு அடையாளம் எது? என்பதைக் கண்டுபிடிக்க இவை அனைத்தையும் இந்தியாவில் சாதாரணமான கிராமப்புற ஏழை மக்களிடமிருந்து தெரிந்து கொண்டார்.

இந்திய மண்ணின் அடிநாதம் அகிம்சை என்பதைக் கண்டு அதற்குச் செயல்வடிவம் தந்தார். இந்திய மக்களிடமிருந்த பயத்தைப் போக்கி,



அவர்களின் ஆத்ம சக்தியைக் கூட்டிச் செயல்பட வைத்து இந்தியா சுதந்திரம் அடைய வழிகாட்டி னார்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து தொடர்ந்து இருபது ஆண்டுகளில் 45 நாடுகள் சுதந்திரம் அடைந்துவிட்டன. உலக நாடுகளுக் கெல்லாம் அகிம்சை வழியில் போராடி வழிகாட்டி யது மட்டுமல்ல, மனிதகுல மேம்பாட்டிற்கு மாற்றுப் பாதையும் கண்டுபிடித்து வழிகாட்டினார்.

மேற்கத்திய முறை வளர்ச்சி என்பது ஒரு சுரண்டல் முறை வளர்ச்சி. அது சுரண்டி வாழும் வாழ்வை முன்னிலைப்படுத்தும் என்பதனைக் கோடிட்டுக் காட்டிப் புதிய பாதையை வளர்ச் சிக்கும் மேம்பாட்டுக்கும் காட்டியவர் மகாத்மா காந்தி. வளர்ச்சிக்குப் புதிய பாதைக் காட்டியது மட்டுமல்ல, ஆளுகைக்கும் புதிய பாதையைக் 'கிராம சுயராஜ்யம்' என்பதை வடிவமைத்துக் கொடுத்தார். கிராம ராஜ்யத்தில் இருக்கும் மக் களாட்சி உண்மையையும் அன்பையும் அடிப்படை யாகக் கொண்ட ராமராஜ்யம். இந்த ஆளுகையில் ஆதிக்கம் கிடையாது. அன்பும், கருணையும், அரவணைப்பும், சேவையும், தியாகமும் கொண்ட ஓர் ஆளுகைக் கட்டமைப்பு.

இந்த ராஜ்யத்தை முன்னெடுக்க நிர்மாண ஊழியர்கள் தயார் செய்யப்பட்டார்கள். இவர்கள் தலைவர்கள் அல்ல, ஊழியர்கள். இவர்கள் மக் களுக்காக மக்களோடு தியாகம் செய்து தொண்டு செய்வார்கள். அப்படிச் செய்து ஒரு தூய்மை அரசாங்கத்தை உருவாக்குவார்கள். இது ஒரு கனவு. அந்தக் கனவை நனவாக்க சுதந்திரம் பெறுவதற்கு முன்பே கட்டமைப்பை உருவாக்கப் பணிகளைத் தொடங்கினார். அந்தப் பணியில் பெருமளவு ஏழை மக்களை ஈடுபடுத்த ஆயத்தப் படுத்தினார். கடின உழைப்புக்கு மக்களை ஒழுக்க நியதியுடன் செயல்படத் தயார் செய்தார்.

சுதந்திரம் அடைந்தவுடன் காந்தி, காந்தியச் சிந்தனையாளர்கள், காந்திய ஊழியர்கள் புறந் தள்ளப்பட்டு, இந்தியாவில் ஒரு நிலைத்த வலுவான அரசுக் கட்டமைப்பை உருவாக்கி, முதலாளித்துவ மற்றும் சோசலிசப் பொருளாதாரம் இணைந்த கலவைப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கி, காந்தியப் பொருளாதாரத்தைப் பின் தள்ளி இந்திய அரசு செயல்பட ஆரம்பித்தது. அடிப்படையில் மேற்கத்தியத் தொழில்புரட்சியின் விளைவு பின்புலத்தில் வைத்து பொருளாதாரம் கட்டமைக்கப்பட்டது. மேற்கத்திய முறை பாராளு மன்ற முறை பின்பற்றப்பட்டது.

அதேபோல் பெரிய அரசுக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்தது. எவை யெல்லாம் இந்தியாவிற்கு ஏற்றத்தக்கதல்ல என்று காந்தி கருதினாரோ, அவை அனைத்தும் இந் தியா சுதந்திரம் அடைந்த பிறகும் தொடர்ந்தன.

வெள்ளையர்கள் வெளியேறினார்கள். வெள்ளையர்கள் இருந்த இடத்தில் நம் இந்தியர் கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார்கள். இந்தியக் கிராமங்களை மேம்படுத்த 2000–க்கு மேற்பட்ட திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினார்கள். இருந்தும் கிராமப்புறம் மேம்பட்டதாகக் கூற முடிய வில்லை. கிராமங்களில் வாழ்ந்த மக்கள் நகரத் திற்கு வாழ்வாதாரத்திற்குப் புலம்பெயர ஆரம்பித் தார்கள்.

சுதந்திரம் அடைந்த 30 – 35 ஆண்டுகளில் அரசாங்கத்தால் பெரிய அடிப்படை மாறுதல் களைக் கிராமங்களில் கொண்டுவர முடிய வில்லை. மக்கள் அரசாங்கம் மக்களுக்குப் பக்கத் தில் கொண்டுவர முனைந்து வலுவிழந்த பொரு ளாதாரத்தை வலுப்படுத்தப் புதிய சந்தைப் பொரு ளாதாரத்தைக் கொண்டு வந்தனர்.

இது மேற்கத்தியத் தொழில்மயப் பொருளா தாரத்தால் விழைந்த கேடுகளைக் காட்டிலும் சமூகத்தில் பெருங்கேடு விளைவிக்கக்கூடிய தன்மை கொண்டது என்பதைத் தெரிந்தும் நடை முறைப்படுத்தினார்கள். இந்தச் சந்தைப் பொரு ளாதாரம் மக்களை ஒரு புதிய மனநிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. இந்தப் புதிய பொரு ளாதாரத்தின் அடிப்படையே நுகர்வைக் கூட்டுவது தான். புலன்களைக் கட்டவிழ்த்துவிட்டு அனைத் தையும் நுகர்வுப் பொருளாகப் பார்க்க வைத்து, நுகர்வைத் தூண்டிச் செயல்படுவதுதான் இந்தப் புதிய பொருளாதாரத்தின் அடிப்படை.

அதன் விளைவு, அனைத்தும் சந்தைப் பொரு ளாக்கப்பட்டுவிட்டன. கல்வியானாலும் சரி, மருத் துவமானாலும் சரி, ஆன்மீகமானாலும் சரி, அரசியலானாலும் சரி, ஆளுகையானாலும் சரி அனைத்தும் சந்தைப்படுத்தப் பட்டுவிட்டன.

இதன் விளைவு, மக்களுக்குப் பணத்தின் மீதும், மதுவின் மீதும், பொருள்களின் மீதும், ஆடைகளின் மீதும், அழகுசாதனங்கள் மீதும், பொன்மீதும், பதவிகள் மீதும், நிலத்தின் மீதும், பெண்களின் மீதும், ஒரு தீவிரவாதியின் நுகர்வு வெறிபிடித்துப் பேயாட்டம் ஆட வைத்துவிட்டது. இதன்விளைவாகப் பெருமளவு மக்கள் அமைதி

யற்றவர்களாக, ஒழுக்க நியதிகளை இழந்தவர்களாக ஓர் அலங்கோல வாழ்க்கையை வாழ்கின்றனர்.



வளர்ச்சி என்ற பெயரில் இயற்கையைச் சூறையாடிவிட்டு, வளங்களை ஒழித்துப் பணக்காரக் குடும்பங்களை உருவாக்கிவிட்டுப் பாமர மக்களை அடிப்படைத் தேவைகளுக்கு அலையவிட்டு வைத்திருக்கிறோம்.

எந்த வாய்ப்பும் இன்றிக் கிராமத்தைவிட்டு வெளியேறும் மக்களைத் தக்கவைக்க வந்தது தான் 100 நாள் வேலை. இந்தத் திட்டத்தை எவ்வளவு நாள் அமல்படுத்த முடியும் என்பதுதான் அடிப்படைக் கேள்வி. இந்தச் சூழலை மாற்றியமைக்க வேண்டாமா? என்பதுதான் கேள்வி.

இயற்கை வளங்கள் மீது தொடுத்த போர் நிறுத்தப்பட வேண்டும். சமுதாயங்களுக்குள் நடக்கும் போர் நிறுத்தப்படல் வேண்டும். நுகர்வு வெறியில் நம் உயரிய வாழ்வின் விழுமியங்களின்மேல் தொடுத்த போர் நிறுத்தப்படல் வேண்டும். இதை யார் நிறுத்துவது என்பதுதான் கேள்வி.

நெகிழியை ஒழிக்க வேண்டும் என்றால், நெகிழியைத் தயார் செய்யாமல் அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைக்கின்றோம். தங்கம் விலை ஏறிவிட்டது. அரசு ஏன் தங்க விலையை குறைக்கக் கூடாது என்று அரசிடம் பொறுப்பைக் கட்டி விடுகின்றோம். தெருக்கள் ஏன் சுத்தமாகவில்லை என்றால், உள்ளாட்சி மன்றம் ஆள் வைத்துச் சுத்தம் செய்யவில்லை என்று அரசைச் சாடுகிறோம். அரசாங்கம் செயல்பட வேண்டும் அதில் மாற்றம் இல்லை. ஆனால் நமக்கு இதில் என்ன பங்கு என்று சிந்தித்தோமா?

காந்தி சொல்வதுபோல் என்ன மாற்றத்தை உலகில் மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறாயோ, அந்த மாற்றத்தை உன்னில் தொடங்கு என்பதற்கு ஏற்ப நம்மை நாம் ஏன் மாற்றிக்கொள்ளக் கூடாது? அதற்குத் தேவை புலனடக்கம். இதைத்தான் காந்தி மானுடம் மேன்மையுறப் புலனடக்கம் தேவை என்றார். புலனடக்கம் வந்துவிட்டால் தேவைகள் குறைந்துவிடும். மனிதம் மிளிர்ந்துவிடும்.

நாம் குடிப்பதை நிறுத்திவிட்டால், சாராயக்கடைகளை மூடுவதைவிட வேறு என்ன செய்ய முடியும்? குப்பையை நாம் வீதியில் கொட்டாமல் மேலாண்மை செய்துவிட்டால் வீதி சுத்தமாகத்தானே இருக்கும். தேவைக்கு அதிகமான பொருள்களை வாங்குவதில்லை என்று முடிவு எடுத்துவிட்டால், நாம் ஏன் கடன் தொல்லையில் மாட்டிக் கொள்கிறோம்.

சிக்கனமாக வாழக் கற்றுக் கொண்டால் நமக்குச் சேமிக்கும் சூழல் வந்துவிடும்தானே. வீட்டில் தண்ணீரைச் சுத்தப்படுத்திக் கொதிக்க வைத்துப் பயன்படுத்தினால் தண்ணீர் கம்பெனிகள் எப்படி வளர முடியும். ஆரோக்யமான வாழ்க்கை வாழக் கற்றுக்கொண்டு விட்டால், மருத்துவர்கள் நம் பணத்தை எப்படிப் பிடுங்க முடியும். உடலுக்குத் தேவையான உணவு உண்ண ஆரம்பித்துவிட்டால், நாக்கிற்கு உணவு தரும் கம்பெனிகள் சென்றுவிடும்தானே?

நாம் வாழும் இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டால், கொசு மருந்து உற்பத்தி செய்யும் கம்பெனிகளுக்கு வேலை ஏது? தினம்தோறும் தியானம் செய்து தன் தவறுகளைத் திருத்திக் கொண்டே வந்தால் நாமும் குட்டி மகாத்மாதானே? இதைத்தானே காந்தி நமக்குக் கற்றுத் தந்தார்.

நாம் மாற முயற்சிப்போம். முதலில் குடிமக்களாக, பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள நாம் முயற்சித்தால், அரசியல்வாதிகள் நமக்குப் பணிவார்கள். அரசு நமக்குப் பணிபுரியும். அது நமக்கு ஏவலாளாக மாறும். நம்மை மாற்றிக் கொள்ளும் உபாயத்தைக் கற்றுத் தந்தவர் மகாத்மா.

ஆகவேதான் அவர் வாழ்க்கையை நமக்குச் செய்தியாகத் தந்தார். அவரால் உயர முடிந்தது. உயர்ந்து நமக்கு வழிகாட்டினார். அவர் பிறந்த 150–ஆவது ஆண்டைக் கொண்டாடி மகிழ்ந்து மறப்பதைவிட, பொறுப்புள்ள குடிமக்களாக மாற முயற்சிப்பதுதான் நாம் அவர் ஆன்மா சாந்தியடையச் செய்யும் அஞ்சலியாகும். ●

ஆன்மிகம்

விஞ்ஞானம் வளர்த்த திருக்கோயில்கள்

சிதம்பரம் ரவிச்சந்திரன்

விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் சேர்ந்து வளரும் இடம் திருக்கோயில்கள் ஆகும். விஞ் ஞானத்தின் வழியாக மெய்ஞ்ஞானம் பழங்காலம் முதலே திருக்கோயில்களில் வளர்க்கப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களைச் சார்ந்தே பண்டைய சமூகங்கள் அமைந்திருந்தன. கோயில்கள் கல்வி கற்பித்த பள்ளிக்கூடங்களாக, பிணிகளை நீக்கும் மருத்துவச்சாலைகளாக, தானியக் கருவூலங் களாக, காப்பகங்களாக விளங்கின.



கோயில் வழிபாடுகள் மக்களின் வாழ்விய லோடு நெருங்கிய தொடர்பு கொண்டவையாக இருந்தன. இத்தகைய வழிபாடுகளின் மூலம் ஆன்மீகம் மட்டும் வளர்க்கப்படவில்லை; அறிவி யலும் சேர்த்தே வளர்க்கப்பட்டது. உடல், மனம், சமூகம் சார்ந்த பல்வேறு நிலைகளில் அறிவியல் வளர்க்கப்பட்டது.

இந்தக் காலத்திலும் கோயில்கள் பிணி போக்கும் இடங்களாக விளங்குகின்றன. நிம்மதி இழந்து வாடும் மனிதர்களுக்கு அமைதி தரும் ஆலயங்களாகக் கோயில்கள் இன்றும் விளங்கு கின்றன. பாரம்பரியமான பழக்கவழக்கங்களும், சடங்கு சம்பிரதாயங்களும் தொல்லியல் மூலமும், அறிவியல் மூலமும் இன்று நமக்குக் கோயில்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது.

மரங்கள் அடர்ந்த காடுகளிலும், ஓங்கி உயர்ந்த மலைகளிலும், சலசலவென்று ஓடும் நதி களின் கரைகளிலும், அலைகள் ஓடி விளையாடும் கடலோரங்களிலும் கோயில்கள் கட்டப்பட்டன. இயற்கையும், சூழலும் செழித்தோங்கும் இடங் களில் இவை அமைக்கப்பட்டன. இயற்கை வளங் கள் கோயில்களால் மேம்படுத்தப்பட்டன. நதிக் கரைகள் செம்மைப்படுத்தப்பட்டன. குளங்களை

வெட்டிக் கிடைக்கும் மழைக் காலத்துத் தண்ணீரைத் தேக்கி, மண்ணை ஈரமாக்கி, மரங்களை நட்டுப் பராமரித்த இடங்களாகக் கோயில்கள் விளங்கின.

ஆல், அரசு, கடம்பு, புன்னை, வாழை, மூங்கில், பலா, வேம்பு, கொன்றை, தென்னை, வன்னி, தில்லை, பூவரசு, வில்வம், மா, சந்தனம், நெல்லி, குருந்தம், அத்தி, இலுப்பை, நாவல் மரங்கள் சார்ந்த இடங்களில் கோயில்களை எழுப்பினர். காலப்போக்கில் இந்த மரங்களே அந்தந்தப் பகுதிகளில் இருந்த கோயில்களின் திருத்தல மரங்களாகவும் போற்றப்பட்டன.

தில்லைவனம், கடம்பவனம், மாங்காடு, பலாக்காடு, நெல்லித்தோப்பு, ஆலங்காடு என ஊர்களும் மரங்களால் பெயர் பெற்றன. இந்த மரங்களையே தெய்வமாகவும் கருதி மக்கள் வழிபட்டனர். இன்றும் இந்த வழக்கம் நம் மக்களிடையே இருந்துவருகிறது.

கோயில்கள் எழுப்பப்படுவதற்கு முன்பு இந்த மரங்களே கோயில்களாகக் கருதப்பட்டன. இது தொன்மையான வழிபாட்டு முறை ஆகும். மண்ணால் கோயில்களை எழுப்பினர். இது 'மந்தலி' என்று அழைக்கப்பட்டது. பிறகு சுட்ட கற்களால் கோயில்களை எழுப்பினர். பிறகு கருங்கற்களால் எழுப்பினர். இவை 'கற்றளிகள்' என்று அழைக்கப்பட்டன. கற்றளிகள் மூலம் கருவறையை அமைத்துக் கருவறைக்கு அருகில் மகாமண்டபம், அர்த்த மண்டபம் ஆகியவற்றை எழுப்பினர்.

கோயில்களைச் சுற்றிப் பரிவார ஆலயங்கள் எழுப்பப்பட்டன. கருவறையைச் சுற்றிலும் சுற்றுகள் அமைக்கப்பட்டன. ஆலயப் பராமரிப்பிற்காக வளமான மதில்கள் எழுப்பப்பட்டன. கோயிலைச் சுற்றிலும் மரங்கள் அடர்ந்த தோப்புகளும், பூந்தோட்டங்களும் அமைக்கப்பட்டன. சோலைகள் நிறுவப்பட்டன. கோயில்களின் கட்டுமானம் தொடங்கும் போதே நீர் வசதிக்காக நீர்நிலைகள் ஏற்படுத்தப்பட்டன. நீர் சேகரிப்பு முறைகள் பின்பற்றப்பட்டன. இவற்றைக் காக்க மதில்கள் எழுப்பப்பட்டன.

இன்றும் திருக்கோயில்களில் திருத்தல மரங்கள் உள்ளன. மரங்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்ட முன்னோர்களின் பாரம்பரியத்தின் எச்சமாக இன்றும் இவை திருக்கோயில்களில் திருத்தலமரங்களாக விளங்குகின்றன. இவை திருக்கோயில்களை அடையாளப்படுத்துகின்றன.

தில்லைவனம் என்று சிதம்பரமும், கடம்பவனம் என்று மதுரையும், வீழிவனம் என்று திருவீழிமிழலையும், லவனம் என்று ஆலங்காடும், நெல்லிவனம் என்று திருநெல்லிக்காவலும், வாழைவனம் என்று திருப்பைஞ்ஞீலியும், மகிழவனம் என்று திருநீடூரும், முல்லைவனம் என்று திருமுல்லைவாசலும், ஆமணக்குவனம் என்று கொட்டையூரும் இன்றும் விளங்கி வருகின்றன. இவை தலமரங்களால் அடையாளப்படுத்தப்படும் சில திருத்தலங்கள் மட்டுமே ஆகும். இதுபோலத் தமிழகத்தில் ஏராளமான தலங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.


மரங்கள், செடிகள், கொடிகள் அனைத்தும் மண்ணைச் செழிக்க வைக்கின்றன. வளப்படுத்துகின்றன. மழையைப் பூமிக்குக் கொண்டு வருகின்றன. சூழலைப் பாதுகாக்கின்றன. காற்றையும், அண்டத்தையும் காக்கின்றன.

இயற்கையின் ஐம்பெரும் சக்திகளாக விளங்கும் மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் இவற்றுக்கும் நம் முன்னோர்கள் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில், திருஆனைக்கா, காளகத்தி, திருவண்ணாமலை, தில்லை என்று ஐம்பெரும் ஆலயங்களை எழுப்பித் தங்களின் விஞ்ஞான அறிவை வெளிப்படுத்தி உள்ளனர்.

குளங்களும், ஏரிகளும் வெட்டப்பட்டுத் திருத்தலங்களோடு அவையும் புனிதமாகப் போற்றப்பட்டு வந்துள்ளமை நீர் மேலாண்மைக்குச் சான்றாக விளங்குகின்றன. நீர் இயற்கையின் அமுதம் என்பதை மக்களுக்கு உணர்த்தவே நீரின் புனிதத் தன்மையைப் போற்றும் வகையில் குளங்களிலும், ஏரிகளிலும், ஆறுகளிலும் வருடத்துக்கு ஒரு முறையாவது கோயில்களில் இருக்கும் கடவுளர் அங்கு எழுந்தருளுமாறு செய்யப்பட்டனர்.

மரங்களின் பண்புக்கேற்பத் தேர்கள் அமைக்கப்பட்டு வருடத்துக்கு ஒருமுறை தேர்த் திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கற்களின் பண்புகளை அறிந்து அவற்றில் கலைகளை உருவாக்கிக் கதைகளைப் பேச வைத்தனர்.

இதனால்தான் இன்றும் நம் திருக்கோயில்களில் உள்ள கல் சிற்பங்கள் தங்கள் எழிலாலும், அற்புதமான வடிவமைப்பாலும் கதைகளைப் பேசுகின்றன. இசையையும் கூட எழுப்புகின்றன. கல் நாதசுரம், மத்தளம் முதலிய கருவிகளும் நம் முன்னோர்களின் பாறைகள் பற்றிய அறிவைத்



தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

கோயில்களில் உள்ள குளங்களில் இருக்கும் நீர், புனித நீராகக் கருதப்பட்டுத் தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. இறைவன் நீராடுதலும் நடைபெற்றது. தெப்பத் திருவிழாக்களும் நீரின் மேன்மைக்குச் சான்று கூறும் விழாக்கள் ஆகும். புண்ணியத் தீர்த்த நீராடுதல் என்பது இதிகாச காலம் முதலே இருந்து வருகிறது.

தீர்த்த நீராடுதலின் ஒரு பாகமாகவே மார்கழி மாதங்களில் பாவைநோன்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் கன்னிப்பெண்கள் உடல் ஆரோக்கியத்தையும், மன நலத்தையும் பெற்றனர். பால், நெய் முதலியவற்றை உண்ணாமல் நித நோன்பு சைவத் திருத்தலங்களிலும், வைணவத் திருத்தலங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

கோயிகளில் விழாக்கள் நடக்கும்போது ஒவ்வொரு நாளும் இறைவடிவங்கள் விலங்குகளின் வடிவத்தில் அமைக்கப்பட்ட பல உலோகங்களால் ஆன வாகனங்களில் எழுந்தருளினார்கள். நம் சுற்றுப்புறத்தில் வாழும் அத்தனை உயிரினங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும் என்ற சூழல் கருத்தின் அடிப்படையிலேயே இந்தப் பாரம்பரியமான வழக்கம் அமைந்திருக்கிறது.

இவ்வாறு சிம்மம், ஆமை, குதிரை, காளை, மயில், மூஞ்சூர், நாகம், சேவல், கருடன் என்று பல விலங்குகளும், பறவைகளும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வு மக்களிடையே பக்தியோடு சேர்த்து வளர்க்கப்பட்டது.

கோயில் வழிபாட்டுப் பூசைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் அனைத்துமே மருத்துவக் குணம் உடையவையாக விளங்குகின்றன. வெற்றிலை, தேங்காய், வாழைப்பழம், மலர்கள், அருகம்புல், துளசி, மஞ்சள் முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். நம் வீட்டுத்தோட்டத்திலேயே இவற்றையும் நாம் வளர்த்துச் சூழலைக் காப்பதோடு, நோய்நொடிகள் இல்லாத நலவாழ்வையும் பெறவேண்டும் என்ற உணர்வு இதன்மூலம் மக்களிடம் ஏற்படுத்தப்பட்டது.

இறைவனுக்குப் படைக்கும் படையல்களும் இதுபோலப் பல மருத்துவக் குணங்கள் உடைய, இயற்கையில் கிடைக்கும் பொருள்களாலேயே ஆக்கப்பட்டுப் பிரசாதமாக மக்களிடம் பகிர்ந்து அளிக்கப்பட்டன. நவராத்திரி காலங்களில் சுண்டல், கோடையில் ராமநவமியின் போது அளிக்கப்படும் பானகம், நீர்மோர் முதலியவை இதற்கு உதாரணங்கள் ஆகும்.

இறைவடிவங்களுக்கு அபிடேகம் செய்வதற்கும் இது போலவே இயற்கையில் நமக்கும், சூழலுக்கும் நன்மை செய்யும் பொருள்களே பயன்படுத்தப்பட்டன. எள்ளின் நெய்யைக் கொண்டு விளக்குகள் ஏற்றப்படும்போது சுற்றிலும் காற்றில் இருக்கும் நச்சுத்தன்மை அகற்றப்பட்டுத் தூய்மையான ஆக்சிஜன் கிடைப்பதோடு, எள்ளில் அதிகப்படியாக இருக்கும் இரும்புசத்து நம் உடலுக்குக் கிடைக்கவும் வழி ஏற்படுகிறது. இரும்புசத்து குறிப் பாகத் தேவைப்படும் மகளிரிடம் இதனால் தான் விளக்குப் போடும் பாரம்பரியம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

நாள் முழுதும் சுவாசித்தல் மூலம் கார்பன்–டை–ஆக்சைடு அதிகமாக வெளியேறி இருக்கும் மரங்களுக்கு அடியிலும், துளசிச்செடிக்கு முன்பும் மாலை நேரங்களில் மண்ணால் ஆன அகல் விளக்குகளில் எள் நெய்யைப் பயன்படுத்தித் திரி போட்டு விளக்கேற்றிவைக்கும் பழக்கம் ஏற்பட்டது. இதனால் வீட்டைச் சுற்றிலும் அதிகமாகக் காணப்படும் கார்பன்– டை–ஆகசைடின் அளவு குறைந்து ஆக்சிஜனின் அளவு அதிகரிக்க வழி ஏற்படுகிறது.

இவ்வாறு பல விதங்களிலும் மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞானத்தின் மூலம் வளர்த்த நம் முன்னோர்கள் மிகச் சிறந்த போற்றுதலுக்குரிய அறிவியல் அறிஞர்களே ஆவர்.

இத்தகைய பெருமைகளை உடைய திருக்கோயில்களை நாம் போற்றிப் பாதுகாப்பதோடு, நம் முன்னோர்கள் அதன்மூலம் போற்றி வந்த இயற்கையையும் புனிதம் மாறாமல் காப்போம்.

●

நம் நாட்டை 2020–ஆம் ஆண்டிற்குள் வல்லரசு நாடாக்க வேண்டும் என்றும், எதிர்காலத் தலைவர்களாக உருவாகும் மாணவச் செல்வங்கள் பல துறைகளிலும் சிறந்தவர்களாக வளர வேண்டும் என்றும் விருப்பப்பட்டு, அதற்காக மாணவர்களைத் தொடர்ந்து சந்தித்து வந்தவர் மேனாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்கள்.

எதிர்பாராத வகையில் ஏற்பட்ட அவரது மறைவிற்குப் பின்னர் அவர் செய்து வந்த பணிகள் அப்படியே நின்று விட்டனவோ எனத் தோன்றியது. ஆனால், அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறது 'நல்லோர் வட்டம்' என்ற அமைப்பு. சென்னையிலிருந்து தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் செயல்பட்டு வருகிறது இந்த அமைப்பு.

இந்த அமைப்பின் செயல்பாடுகளை இதன் கோவைப் பகுதியின் பொறுப்பாளர்களாகச் செயல்பட்டு வரும் திரு. கௌதம், திரு. ப. ஸ்ரீதர் ஆகியோர் 'ஓம் சக்தி' வாசகர்களுக்காக விளக்கமாக எடுத்துரைத்தனர். அவர்கள் அளித்த பேட்டி...

கலாம் கனவை நனவாக்கும் 'நல்லோர் வட்டம்'

கேள்வி : 'நல்லோர் வட்டம்' அமைப்பு மற்றும் அதன் நோக்கம் பற்றிக் கூறுங்கள்...

பதில் : 'நல்லோர் வட்டம்' சென்னையில் 19 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட அமைப்பு. இதன் நோக்கம், மக்கள் அனைவரையும் குடும்பத்திற்குப் பணி செய்வது போல, சமுதாயத்திற்கும் ஏதேனும் பணி செய்ய வைக்க வேண்டும் என்பது. சமூகப் பணியை, வாழ்நாள் பணியாக மக்கள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகிறது.

ஒரு மணி நேரமோ, பத்து நிமிடங்களோ, ஒரு நாளோ, அதற்கான வித்தியாசமான களங்களைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுவது தொடக்கக் காலத்தில் நல்லோர் வட்டத்தின் பணியாக இருந்தது. சென்னை கோடம்பாக்கத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மேதகு அப்துல் கலாம் அவர்கள் 'விஷன் 2020' பற்றிச் சொன்ன பிறகு அதையே பின்பற்றி, 2004–இல் கோடம்பாக்கத்தில் 'விஷன் 2020' என்று தொடங்கிக் களப்பணிகள் செய்து வந்தோம்.

கேள்வி : இந்த அமைப்பைத் தொடங்கியவர் யார்? இதன் செயல்பாடுகள் எப்படி?

பதில் : இதனைத் தொடங்கியவர் திரு. பால சுப்பிரமணியம் என்பவர். முதலில் ஒரு ஹோட்டலில் பணி செய்து வந்த அவர், தற்போது முழு நேரமாக இப்பணியைச் செய்து வருகிறார். நல்லோர் வட்டம் பற்றி அறிந்த மேதகு கலாம் அவர்கள், 2009–இல் பாராட்டுத் தெரிவித்தார். அவர் இது பற்றி அமெரிக்காவிலும் சொற்பொழிவாற்றியுள்ளார். அதன்பின் இன்னும் பல பணிகளைச் சேர்த்துச் செய்யத் தொடங்கினோம்.



மாதா மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஒரு சந்திப்பு நிகழ்ச்சி இருக்கும். இதில் பல்வேறு சமுதாய அமைப்புகள் கலந்து கொள்கின்றன. நாளும் 5 ஆயிரம் பேருக்கு அன்ன தானம் செய்கிறோம். எங்கேனும் இரத்ததானம் செய்கிறார்கள் என்றால், அவர்களுக்கு உணவு அனுப்புகிறோம். சமூக அக்கறையாளர்களின் தொடர்புகள்தான் பல வகைகளிலும் உதவிகள் செய்கின்றன.

சமுதாயத்தின் தேவைகளைச் சரியான முறையில் செய்வதற்குச் சில பேர்களால் எல்லாவற்றையும் செய்ய இயலாது. மக்களே பொறுப்பெடுத்துக் கொண்டு செய்தால்தான் அனைத்துப் பணிகளையும் செய்ய முடியும்.

'இந்தியா விஷன் 2020' என்ற அடையாளத்துடன் சமுதாயத்திலுள்ள நல்ல தலைவர்களைக் கண்டறிந்து அவர்களை ஒருங்கிணைப்பது, நகரங்களில், கிராமங்களில், பள்ளிகளில் சமுதாயப் பணிகள் செய்பவர்களைக் கண்டறிந்து, அவர்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டி, எப்படி இன்னும் சிறப்பாகச் செயல்படுவது, அதற்கான வழிமுறைகள் என்ன? என்பவற்றை அலசி ஆராய்ந்து செயல்படுத்தப்படுகிறது.

ஒருவர் எந்தத் துறையில் சிறப்பாகச் செயல்படுவார் என்பதைக் கண்டறிந்து, அத்துறையில் தொடர்புடையவர்களை, சிறப்பாகச் செயல்படுபவர்களை இணைத்துச் செயல்படுத்துவது முதலிய வழிமுறைகளில் செயல்பட்டு வருகிறது.

கேள்வி : உறுப்பினர்களை எப்படிச் சேர்க்கிறீர்கள்?

பதில் : பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று மாணவர்களைச் சந்தித்து அவர்களை இந்த அமைப்பில் சேர்க்கிறோம். கடந்த ஆண்டு அப்துல் கலாம் ஐயாவின் பிறந்த நாளை முன்னிட்டு 3000 பேர்களைச் சந்தித்தோம். இப்போது சென்னை, திருச்சி, கோவையைச் சேர்த்து சுமார் 5 ஆயிரம் பேர் சமுதாய அக்கறையாளர்கள், பள்ளி – கல்லூரி மாணவர்கள், கிராமங்களில் உள்ளோர் ஆகியோரைச் சந்திக்கிறோம்.



பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு, 'விஷன் 2020 என் பொறுப்பு' என்னும் படிவத்தைத் தருகிறோம். அதை அவர்களே பூர்த்தி செய்து கொள்ளலாம். அதில் அவர்கள் என்ன பணி செய்ய விரும்புகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளலாம்.

கேள்வி : பள்ளிகள் என்றால் எந்தப் பள்ளிகளை அணுகுகிறீர்கள்?

பதில் : அரசாங்கப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில்தான் இப்போதைக்கு நாங்கள் கவனம் செலுத்துகிறோம். ஓரிரு தனியார் பள்ளிகளுக்கும் சென்றுள்ளோம்.

கேள்வி : தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளைப் பார்த்துவிட்டீர்களா?

பதில் : தமிழகத்தில் இதுவரை சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், சேலம், கடலூர், திருவண்ணாமலை ஆகிய 8 மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் பலவற்றைப் பார்த்துள்ளோம். இதில் நாங்கள் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் 'மாணிக்க மாணவர்கள்' எனப்படுகிறார்கள்.

கேள்வி : எந்த வகுப்பு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள்?

பதில் : ஆறாம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறோம்.

கேள்வி : ஆறாம் வகுப்பு மாணவர்கள் எந்த அளவிற்கு உங்கள் நோக்கங்களைப் புரிந்து கொள்கிறார்கள்?


பதில் : புரிந்து கொள்வதற்காக இல்லை. அவர்களிடம் தெரிந்து கொள்வதற்காகச் செல்கிறோம். 3 – 4 விஷயங்களைக் கேள்விகளாகக் கேட்கிறோம். எடுத்துக்காட்டாக,

'நீங்கள் எப்படி நன்றாகப் படிக்கிறீர்கள்?' என்ற கேள்விக்கு ஒரு குழந்தை, 'என் அம்மா படும் கஷ்டத்தை நினைத்து நான் நன்றாகப் படிக்கிறேன்' என்றது.

அடுத்து 'நீங்கள் எப்படி லீடர் ஆனீர்கள்?' என்று கேட்டதற்கு, 'நான் ஒழுக்கமாக இருக்கிறேன். அதனால் லீடர் ஆனேன்' என்ற பதில் வந்தது.

'உங்களுக்கு ஏதேனும் தனித்திறமை இருக்கிறதா?' என்றால், மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் அபாரமான ஒரு தனித்திறமை இருக்கிறது.

இவை போன்று, எப்படிப் படிக்கிறார்கள், வகுப்புத் தலைவராகிறார்கள், ஒழுக்கமாக இருக்கிறார்கள் என்பவை போக, சமூகத்தில் உங்களுக்கு



என்ன அக்கறை இருக்கிறது என்பதைக் கேட்கிறோம். அப்போது, அவர்கள் செய்தவற்றையெல்லாம் சொல்கிறார்கள்.

கேள்வி : மாணவர்களைத் தேர்ந்தெடுத்து எப்படிச் செயல்பட வைக்கிறீர்கள்?

பதில் : நம் 'விஷன் 2020' திட்டத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டால், சுமார் 5 முதல் 8 மாணவர்கள் வரை முன்னால் வந்து நான் இதற்கு என்ன செய்வேன் என்று பேசுவார்கள். அந்த மாதிரி சிறப்பாக வரும் மாணவர்களில் 5 பேர்களைத் தேர்வு செய்து 'மாணிக்க மாணவர்கள்' என்னும் விருது தருகிறோம். 8 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 100 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட ஆட்சியர், கல்வித்துறை அதிகாரிகள் மூலம் விருது தந்திருக்கிறோம்.

அதன்பின் அவர்களை மாதம் ஒரு முறை சந்திக்கிறோம். அரையாண்டுத் தேர்வு, முழு ஆண்டுத்தேர்வு விடுமுறைகளில் 4 நாட்கள் பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ளச் செய்து, அவர்களைத் தலைவர்களாகவே உருவாக்குகிறோம்.

சில பள்ளிகளில் தலைமையாசிரியர்களே சில மாணவர்களை, 'மாணிக்க மாணவர்களாகப்' பரிந்துரை செய்வார்கள். எல்லா மாணவர்களும் மாணிக்க மாணவர்களாக உள்ள பள்ளிகளைக் 'கல்விக் கோயில்' என்கிறோம். டியூசன் சென்டர்களில் உள்ள ஆசிரியர்களிடமும், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களிடமும் கலந்து பேசி, அவர்களிடம் டியூசன் படிக்கும் மாணவர்களுக்குச் சமுதாய அக்கறையை ஏற்படுத்தக் கோருகிறோம்.

படிக்கும் மாணவர்களிடம் மூன்று பொறுப்புக்களை எடுத்துக்கொள்ளச் சொல்கிறோம். அவர்களது வீட்டில், தெருவில், பள்ளியில் எல்லா இடங்களிலும் தண்ணீர் ஒழுகாமல் இருக்கவும், மின்சாரத்தை வீணாக்காமல் இருக்கவும் பொறுப்பெடுத்துக் கொள்ளச் சொல்கிறோம்.

வீட்டில் வரவு செலவுக் கணக்குகளையெல்லாம் பார்த்துக் கொள்ளச் சொல்கிறோம். தெருவில் மரங்கள் நட்டு வளர்ப்பது இப்படி ஏதாவது ஒரு பொறுப்பு எடுத்துக்கொண்டு செயல்படச் சொல்கிறோம். இவர்களை மாதம் ஒரு முறை சந்தித்து, அந்த மாதத்தில் என்னென்ன செய்தார்கள், அவர்களின் பொறுப்பு எப்படி இருக்கிறது? என்பதைக் கலந்து பேசுகிறோம்.

கேள்வி : இவர்களில் குறிப்பிடத்தக்க முறையில் சிறப்பாகச் செயல்படும் மாணவர் யாரேனும் உண்டா?

பதில் : 'நல்லோர் வட்டம்' சேலத்தில் மிகவும் சிறப்பாகச் செயல்படுகிறது. சேலத்தில் சின்னக் கண்ணன் என்று ஒரு மாணவர் படிப்பில் முதலிடத்தில் இருக்கிறார். அவர் சமுதாயப் பணிகளில் சிறப்பாகச் செயல்படுகிறார். அவருடன் 30 – 40 மாணவர்கள் இணைந்து செயல்படுகின்றனர். சனிக்கிழமைகள் தோறும் எங்களோடு தொலைபேசியில் ஆலோசனை நடத்துகிறார். பின் வாரம் ஒரு முறை ஞாயிற்றுக் கிழமைகளில் மற்ற மாணிக்க மாணவர்களோடு கூட்டம் நடத்திப் பேசுகிறார்.

அவர்கள் ஒரு பள்ளிக்கு வண்ணம் அடித்தனர். அரசு மருத்துவமனையைத் தூய்மை செய்தனர். இப்படிப் பல பணிகளை நன்கு செய்து வருகின்றனர். இவர்களுக்கு நாங்கள் பக்க பலமாக இருந்து உதவிகள் செய்கிறோம்.

கேள்வி : மாணவர்களுக்கான திட்டம் அல்லாமல், பொது மக்களுக்கான திட்டங்கள் உள்ளனவா?

பதில் : கிராமப் பஞ்சாயத்து வளர்த்தித் திட்டம் (GPDP) என்று ஒரு திட்டம் உள்ளது. இது 2016–இல் கொண்டுவரப்பட்டது. ஒரு கிராமமே அந்தக் கிராமத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தி, அதனைப் பஞ்சாயத்தில் சமர்ப்பித்து, அது அங்கீகாரம் பெற்றபின் ஆன்லைனில் பதிவு செய்யப்படுகிறது. இதன் அவசியம் என்னவென்றால், கிராமப்புற வளர்ச்சிக்காக மைய அரசு கோடிக் கணக்கான ரூபாய்கள் ஒதுக்குகிறது. இதனை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதுதான்.

ஒட்டு மொத்தக் கிராமங்களுக்கு யாரோ ஒருவர் திட்டமிடாமல், அவரவர் கிராமத்திற்கு அவரவர் திட்டமிட வேண்டும் என்பது அரசின்

விதிமுறை. இதற்காக, கிராமப்புற மக்களுக்கு எப்படித் திட்டம் தீட்ட வேண்டும்? எது 'ஏ', எது 'பி' என்பதையெல்லாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறாம்.

எங்களை அழைக்கிற கிராமங்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சென்று கற்றுத் தருகிறோம். இது தொடர்பாக முதல் கட்டமாக 500 கிராமங்களுக்குச் சென்று பயிற்சிகள் தர எண்ணிச் செயல்பட்டு, இதுவரை 250 கிராமங்களில் பயிற்சிகள் தந்துள்ளோம்.

தமிழ்நாடு அரசிடம் மட்டும் 514 திட்டங்கள் உள்ளன. மைய அரசின் நிதி, மாநில அரசின் நிதி, சட்டமன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி முதலிய நிதி வசதிகள் உள்ளன. பஞ்சாயத்தில் ஒரு குழுவை உருவாக்கி, அதற்கு ஒரு தலைவரை உருவாக்கி, அவர்கள் மூலம் திட்டங்களை உருவாக்குவதுதான் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம்.

கேள்வி : நீங்கள் இப்படிச் செய்வதை அரசியல் வாதிகள் ஏற்றுக் கொள்வார்களா?

பதில் : அவர்களுக்கே தெரியாத பல திட்டங்களை நாங்கள் அவர்களுக்குக் கற்றுத் தருவதனால், அவர்கள் ஏற்றுக் கொள்வார்களே தவிர மறுக்க மாட்டார்கள். கிராமத்திற்கான உண்மையான உணர்வோடு மக்கள் இருந்தால் போதும்.

கேள்வி : உங்கள் பணிகளில் இதுவரை எந்த அளவிற்கு வெற்றி கிடைத்துள்ளது?

பதில் : இரண்டு ஆண்டுகளாக ஆயிரம் பேர் சந்திப்பில் கிராமசபை பற்றி அவர்களுக்கு விளக்கி, கிராம சபைக்காகச் செயல்படும் நிறைய அமைப்புகளை அறிமுகப்படுத்திய பின்தான் இன்றைக்குக் கிராம சபைகள் பல வெற்றிகரமாகச் செயல்படுகின்றன. நடிகர் கமல்ஹாசனும் கிராம சபைகள் பற்றி நல்லோர் வட்டத்திடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

உளவுத்துறை டி.ஜி.பி. எங்களை அழைத்து, தமிழகத்தில் மைக்ரோ லெவலில் சில பிரச்சனைகள் உள்ளன. இவை வளர்ந்தால் பெரும் பிரச்சனையாகிவிடும். அவற்றைப் பார்த்தால், நல்லோர் வட்டத்தின் மூலம் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டார். எனவே, அரசுத்துறையில் பெரிய பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு நல்லோர் வட்டத்தின் தரம் தெரிந்துள்ளது.

ஜி.பி.டி.பி. கூட்டங்களிலும் அரசின் உளவுத்துறையினர் பிறர் அறியாதவாறு வந்து


திரு. கௌதம்


திரு. ஸ்ரீதர்

கண்காணிப்பார்கள். அரசுக்கு எதிரான செயல்பாடு ஏதேனும் உள்ளதா என்று பார்ப்பார்கள். ஆனால், இதன் செயல்பாடுகள் உண்மையானதாக இருப்பதால், அவர்களின் ஆதரவும் உள்ளது.

அடுத்த ஆண்டு 10 ஆயிரம் பேரைச் சந்தித்து, பகுதி வாரியாக, துறை வாரியாகச் செயல்பட வழிகாட்டத் திட்டமிட்டுள்ளோம். அரசியல், அரசாங்கம் இரண்டும் சரியாகச் செயல்பட விழிப்புணர்வுள்ள மக்கள் தேவை. மக்களின் விழிப்புணர்வுதான் இதனைச் சரியாகக் கொண்டு செல்ல உதவும்.

கேள்வி : தற்போதைய இளைய சமுதாயம் கல்வி தவிர விளையாட்டு, இலக்கியம் மற்றும் பிற துறைகளில் ஆர்வம் செலுத்துவதில்லை. கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறும் குறிக்கோளைத் தவிர வேறு குறிக்கோள் எதுவுமில்லாமல், சமூக ஊடகங்களில் பொழுதுபோக்குவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். அவர்களை மாற்ற என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?

பதில் : 'மாணிக்க மாணவர்கள்' திட்டமே போதுமானது. நாங்கள் தேர்ந்தெடுக்கும் மாணிக்க மாணவர்கள் அவர்களுக்குக் கீழ் மாணவர்களைத் தேர்ந்தெடுத்துச் செயல்பட வைப்பார்கள். அவர்கள் தங்களுக்குக் கீழ் மாணவர்களைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுவார்கள். அவர்கள் நல்ல விஷயங்களில் கவனம் செலுத்தினால் போதும். தொடர்ச்சியான செயல்பாட்டினால் மாற்றம் எதிர்காலத்தில் ஏற்படும்.

ஏற்கனவே மாணவர்கள் பல நல்ல செயல்களைச் செய்து வருகிறார்கள். அதை ஊக்குவிக்கிறோம். மற்ற மாணவர்களும் இதனைச் செய்யலாமே. ஒவ்வொருவரிடமும் உள்ள தனிப்பட்ட திறமைகளை ஊக்குவித்து அவற்றை வெளிக்கொணர்கிறோம். ஒவ்வொரு திறமைக்கும் போட்டிகள் வைத்துப் பரிசுகள் வழங்குகிறோம். இதனால் அவர்கள் தங்கள் தனித்திறமைகளை வளர்த்துக் கொண்டு அதில் பிரகாசிக்கிறார்கள்.''

பேட்டி : **இரா. வேணுகோபாலகிருஷ்ணன்**


தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
SUPREME
MILK
SELECT
Pasteurised Toned Milk
500ml
Sakthi
MILK
SPECIAL
Pasteurised, Homogenised, Standardised Milk
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

சிறுகதை

பொண்ணு பிடிச்சிருக்கு

கே. பிரவாஸினி

கடைசி மாநகரப் பேருந்தும் தன் டிரிப்பை முடித்துக் கொண்டதில் வெளிப்புற நெடுஞ்சாலை பூரணமாய்ச் சலனமற்றிருந்தது.

ரகுவரன் வருகிறானா என்று எட்டிப்பார்த்து கார்த்திகேயன் கதவை அடைத்தபோது 'ஹி' வடிவிலிருந்த மான்ஷனில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆறேழு அறைகளில் குழல் விளக்குகளின் பிரகாசம்.

போகும்போதே சொன்னான், 'எங்கேயோ பூசை இருக்கு... வர நேரமாகும்' என்று. வரும்போது வரட்டும் என்று கதவை வெறுமையாய் மூடி, போர்வையை உதறி விளக்கை அணைத்தான். பத்து நிமிஷம் போலக் கண்களை மூடி இருட்டில் சல்லாபித்ததில், போன வாரம் போய்ப் பார்த்துவிட்டு வந்த திவ்யா சில கணங்கள் ஆர்வோகலரில் அவன் நினைவுகளை நெருட...

படிப்பு, உத்தியோகம் என்று பல வருடங்கள் அவனைப் பிரிந்திருந்த தாக்கத்தில் அம்மா அவன் கருத்துக்களுக்கு விட்டுப் பிடித்தாலும், அப்பா பிடி தளர்த்தாமல் வரதட்சணையாய் பெண் வீட்டாரிடம் லட்சத்தைக் கவர்வதிலேயே லட்சியமாய் இருந்தார்.

அம்மாவால் எதிர்வாதம் பண்ண முடியலை. அதனால அவனும் பெட்டிப் பாம்பாயிட்டான்.

'லொட்... லொட்...'

சத்தம் கேட்டதும், "திறந்துதான் இருக்கு" என்று கார்த்திகேயன் படுத்தபடியே குரல் கொடுக்க, விளக்கைப் போட்டுக் கொண்டு உள்ளே வந்தவனைப் பார்த்து, "பூசைக்குப் போறேன்... வர நேரமாகும்னு சொன்னியே... அதுக்குள்ள வந்துட்ட..." என்றபோது,

"என்னத்தைச் சொல்றது... பூசைக்கு வந்திருக்கோம்னு கொஞ்சம்கூட விவஸ்தை இல்லாம, பேசறதுக்கு வேற இடமே கிடைக்காத மாதிரி இந்தப் பொம்மனாட்டிங்க, 'வனிதா லாண்டரிக்காரங்கிட்ட சிரிச்சுச் சிரிச்சுப் பேசறது... மாதுரி நேரங்கெட்ட நேரத்துல சமைஞ்சதுன்னு...' அப்பப்பா பொறுத்துக்க முடியல... எழுந்து வந்துட்டேன்...

"அது போகட்டும், நீ சொல்லு. போன வாரம் போய்ப் பார்த்துட்டு வந்தியே திவ்யா... என்ன ஆச்சு?"

எதைச் சொல்றது, எதை விடறதுன்னு கார்த்திகேயனுக்கு விளங்கலே.



அறையின் மூலைக்குப் போய் கூஜாவிலிருந்து தண்ணீர் சரித்து இரண்டு மிடறு குடித்தான். கொடியில் உலர்ந்த துண்டை உருவித் தரையில் விரித்தபோது, வெளியில் காய்ந்த சருகுகளில் மழைத்துளிகள் விழும் ஓசை. கூடவே எங்கோ ஒரு நாயின் குரைப்பொலி. ரகுவரன் நெஞ்சைச் செருமிக் கொண்டான்.

‘சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாய்ச் சொல்லப் படுகிற கல்யாணங்கள், இப்பெல்லாம் ரொக்கத் தில நிச்சயிக்கப்படணும்னும்போது, பொண்ணு பிடிச்சிருந்துட்டாப்ல சரியாயிடுதா?’ – அவன் மனசுக்குள் பொரும...

“என்ன...? நான் ஏதோ விளங்காத பாலி மொழியில் கேட்டுட்டாப்ல அப்படி பிகுபிகுன்னு முழிக்கிறே... பிடிக்கலியா...?”

“அப்பாவுக்குப் பிடிக்கலே...”

“என்ன சாமி பதில் இது? கேட்கவே விநோத மாக இருக்கே... அவரா கட்டிகிட்டுக் குப்பை கொட்டப் போறார்...?”

“அதில்லே. அவர், தான் பிடிச்ச முயலுக்கு மூணு கால்னு வரதட்சணையாய் லட்ச ரூபாய் வேணுங்கிறார்.”

“யாரு... உங்கப்பாவா?”

கார்த்திகேயன் பதிலுக்குப் பேசாமல் மௌனமாய் இருந்தான்.

“முன்னெல்லாம் கொடுக்கிறதும் உதவாது... வாங்கறதும் கூடாதுன்னு உடும்புப் பிடியாய்ப் போர்க்கொடி பிடிச்சவரா இப்போ வரதட்சணை வேணும்னு... அவருக்கென்ன பிராந்து கிராந்து பிடிச்சுப் போச்சா? கேட்கவே ஆச்சரியமா இருக்கே...”

“அதுதான் விளங்கலே...”

“தன் பிள்ளைக்கு ஒரு நல்ல பொண்டாட்டி யாத் தேடறதை விட்டுட்டு, தனக்கு லட்ச ரூபாய் கொண்டு வர்ற மருமகள்தான் வேணும்னு ஆகாத் தியம் பண்றது எவ்வளவு பெரிய புத்திமுட்டத் தனம்? கண்ணைக் கொடுக்கிறானோ, பொண் ணைக் கொடுக்கிறானோங்கிறவங்கிட்டப் போயா பேரம் பண்றது?

“இல்ல... நானும் தெரியாமத்தான் கேட் கிறேன், நாளைக்கே அந்தப் பொண்ணு உன் னைக் கல்யாணம் பண்ணிகிட்டு வந்து, உங்க வீட்ல ஒரு வேலைக்காரியைப் போல சமயா சமயங் களில் பற்றுப் பாத்திரங்கள் தேய்த்து, பளிச்சினு துணி, மணிகள் துவைத்துக் கொடுத்து, வாய்க்கு ருசியா வேணுங்கிறதைப் பார்த்துப் பார்த்துச் சமைத்து வைக்கிற சமையல்காரியாகவும், குடும்ப நலன் கருதிப் பூசை, புனஸ்காரம்னு செய்யற குடும்பப் பெண்ணாகவும், கூடவே சிலபல விஷயங்களுக்கு ஈடு கொடுக்க... உனக்கு உதவி யாய்த் தானும் உத்தியோகம் பார்த்து, நீ அலுத்துச் சலித்து வர்ற சமயங்களில் கோம்ப நாய் மாதிரி முகத்தைத் தூக்கி வச்சுக்காம, அனுசரணை யோடு கொஞ்சிக் குலாவி, இரவில் இதமாய்க் கையைக் காலைப் பிடித்துப் படுக்கையில் சுக மளிக்கிற மனைவியாயும் இருந்து, சம்பளமில் லாமப் பணிவிடை செய்யப்போற பெண்ணை அங்கீகரிச்சுக்க உங்கப்பா அநியாயத்துக்கு இவ் வளவு தொகை அபராதமாக் கேட்கிறாரே, நியாயமா?

“எம்மேல எரிச்சல் படாம சித்த யோசி...

“வளர்த்துப் படிக்க வச்சு, நிலை நிறுத்தின பிள்ளைக்கு நேரங் காலத்தோட பழத்தைத் திண்ணு கொட்டையை விதைக்கட்டும்னு நல்லது செய்யறதை விட்டுட்டு, சட்டி சுட்டுட்டாப்ல உன்னை யாருகிட்டயோ கணிசமான விலைக்கு விற்கப் பார்க்கிறாரே... இதென்ன நியதி?”

தன் சீற்றத்தை ஒரு கணம் நிறுத்தி, அறை யின் மூலைக்குப் போய் கூஜாவிலிருந்து தண்ணீர் சரித்து இரண்டு மிடறு குடித்தான். கொடியில் உலர்ந்த துண்டை உருவித் தரையில் விரித்த போது, வெளியில் காய்ந்த சருகுகளில் மழைத் துளிகள் விழும் ஓசை. கூடவே எங்கோ ஒரு நாயின் குரைப்பொலி. ரகுவரன் நெஞ்சைச் செருமிக் கொண்டான்.

“கவலைப்படாதே. இந்த உலகத்தில் எதுவும் முளையடித்துக் கட்டப்பட்டது அல்ல. ஒவ்வொண் ணும் மாற்றத்துக்கு உரியதுதான். உங்கப்பா இதுக்கு விதிவிலக்கல்ல. இன்றைக்கு டிராக் மாறி விட்டவர், நாளைக்கே இன்னொரு மாற்றத்துக்கு ஆளாக மாட்டார்ங்கிறது என்ன நிச்சயம்? வருத் தப்படாதே. விடிகிற பொழுது நல்ல பொழுதாக விடியணும்னு ஐயனை வேண்டிக்க...” என்றபடி விளக்கை அணைத்துப் போர்வைக்குள் ஒடுங் கினான்.

வாழ்க்கை நம்பிக்கைக்கு உரியது என்பதால், கார்த்திகேயன் மறுபடிப் பேசவில்லை. கடவுள் யாரையாவது அனுப்பி அப்பாவுக்கு மணி கட்ட வைக்க வேண்டுமே என்று மனசு மருகிற்று.

கண் விழித்தபோது ரகுவரன் படுக்கையில் இல்லை. கொடியில் ஈரத் துவாலை கனத்தது. மேசையின்மீது ஊதுவர்த்திகள் சிறிதாகி சுகந்த

மணம் பரப்ப, சாஸ்தா நறுமண மலர்களின் குவியலில் திளைத்திருந்தார்.

இன்னும் முழுமையாக விடியவில்லை. அதற்குள் பூசை முடித்துப் போய்விட்டிருந்தான்.

சபரி மலைக்குப் போக மாலை போட்டிருந்தான். இதோடு, சுற்று வட்டாரத்திலுள்ள ஊர்ப்பட்ட கோவில்களையும் சுற்றிவிட்டு ஆஃபீசிற்கு வந்தால், பதினொன்றரை மணிவாக்கில் கேன்டீனில்தான் பார்க்க முடியும். இவன் வேலை பார்க்கும் அலுவலகத்திலேயே அவன் வேறொரு பிரிவு.

பீக் ஹவர்.

அலுவலகத்தில் அவரவரும் காபி, டீ என்று இருக்கைகளைக் காலி செய்து கொண்டிருந்தபோது, கார்த்திகேயனும் எழுந்து விரல்களைச் சொடுக்கியபடி வெளியில் வர, எதிரில் போன வாரம் இவன் போய்ப் பார்த்துவிட்டு வந்த திவ்யா, தன்னை நோக்கி நடந்து வர, கார்த்திகேயனுக்கு வியப்பா கவும், குழப்பமாகவும் இருந்தது.



அவனைச் சமீபித்தவள் வெகு இயல்பாக அவனைப் பார்த்து, ''என்னோட பேசறதுல உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபமிருக்காதுன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

கார்த்திகேயன் பதிலுக்குப் பேசவில்லை. அவனுடைய அந்த மௌனத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அவனை ஏறிட்டுச் சொன்னாள், “வாங்க... அப்படி அந்த மரத்தடிக்குப் போவோம்.''

கூச்சநாச்சமில்லாமல் வெகு இயல்பாகப் பேசினாள். நாலு ஆண்களுக்கு மத்தியில் வேலை பார்க்கிற அனுபவம் அவளுக்கு இந்த சகஜ நிலையை வழங்கியிருக்கிறது.

''தோ பாருங்க... சுற்றி வளைச்சுப் பேசி

எனக்குப் பழக்கமில்லே. தப்பா நினைக்காதீங்க. வெகு நாட்களாய்க் கல்யாணமே வேண்டாம்னு கண்டிப்போடு இருந்தவள் நான். உங்க போட்டோவைக் காட்டி, கூடவே உங்களைப் பத்தி அப்படி, இப்படின்னு நிறையச் சொல்லி வீட்டிலிருக்கிற பெரியவங்க என் சங்கல்பத்தை முறிச்சிட்டாங்க. உங்களை நேரில் பார்த்ததுக்கு அப்புறம் மிச்சம் மீதி இருந்த பிடிவாதமும் விடுபட்டுப் போச்சு. வாழ்ந்தா உங்களோடதான் வாழறதுன்னு முடிவெடுத்துட்ட நேரத்தில... உங்கப்பா அநியாயத்துக்கு லட்சத்தை வச்சாத்தான் கல்யாணங்கிறாரே...''

கார்த்திகேயனுக்கு என்ன பேசுறதுன்னு புரியல.

''பொண்ணு பிடிச்சிருக்குன்னு ஃபோனில் கூப்பிட்டுச் சொன்னவங்க, எங்களுக்கு இத்தனை சவரன் நகை போடணும், இவ்வளவு பண்டம் பாத்திரங்கள் தரணும், இவ்வளவு ரூபாய் கை ரொக்கமாய்க் கொடுக்கணும்னு அப்பவே கண்டிஷனாய்ச் சொல்றதை விட்டுட்டு...''

அவள் சொல்லாமல் விட்ட வார்த்தைகள் இவன் நெஞ்சுக்குள் நெருஞ்சியாய்க் குத்தின.

அப்போது அவள் மறுபடியும் தொடங்கினாள். ''ஒரு பொண்ணுக்கு இவன்தான் புருஷன்னு முடிவு பண்ணிட்டு, அதுக்கப்புறம் அதுல சொட்டை, இதுல சொள்ளை என்று உதவாக்கரைக் காரணங்களைக் காட்டி, தீர்மானம் பண்ணினவனைத் தூரத் தள்ளிட்டு, இன்னொருத்தனுக்குக் கழுத்தை நீட்றதுங்கிறது பெண்களுக்கு ஒவ்வாத விஷயம். உடம்பால வாழறது அவ்வளவு பாந்தமான உணர்வு அல்ல.

''அதனாலதான் எது எப்படியாயினும், உங்கப்பா கேட்கிற பணத்தை, என் சொந்தச் சேமிப்பிலிருந்து எடுத்துக் கொடுத்திடறேன். இப்படின்னு யாருகிட்டயும் சொல்ல வேணாம். ஏதோ மனித நேயத்தோடு வாங்கறதும் கூடாது, கொடுக்கிறதும் உதவாதுன்னு நமக்குள்ள ஒத்துப் போயிட்டதா பாவிச்சுக் கல்யாணத்தை முடிச்சுக்கலாம்னுதான் உங்களைப் பார்த்துப் பேச வந்தேன்...''

அவளுடைய பண்பட்ட இணக்கமான வார்த்தைகளும், நலம் கருதி எடுத்த அதிரடியான நடவடிக்கைகளும் அவனைப் பிரமிக்க வைத்த அதே நேரம்,

சற்றுத் தள்ளி, ஊரிலிருந்து அவனைப் பார்க்க வந்திருந்த அவன் அப்பாவும், ரகுவரனும் விழிவாங்காமல் அவர்களைப் பார்க்க, அவன் அப்பா தயக்கத்துடன் திவ்யாவை அணுகிச் சொன்னார்.

''உன்னுடைய மனம் தொட்ட வார்த்தைகளைக் கேட்டு நான் ஏகத்துக்கும் புளகாங்கிதம் அடைஞ்சுட்டேம்மா. உன்னை மருமகளாய் அடைய நான் ரொம்பவே கொடுத்து வைச்சிருக்கணும்.

''அதே சமயத்தில் நானும் நாலு வார்த்தை சொல்லிக்க என்னை அனுமதிக்கணும். என்னன்னு கேட்டா, நான் கருமி இல்லே... அதே சமயத்தில் சம்பந்தி வீட்டாரை ஈவு இரக்கமில்லாமல் கசக்கிப் பிழியணுங்கிற கல்நெஞ்சனுமில்ல.

''இவனுக்குப் பெண் பார்க்க நேரிட்ட தொடக்க காலத்தில் எனக்கு ஏற்பட்ட இரண்டொரு அனுபவத்தினாலதான் நான் இப்படி ஒரு நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப் பட்டுட்டேன். இதுக்கு முன்னாடி இவனுக்கு இரண்டு மூன்று இடங்களில் பெண் பார்க்கப் போயி, கொடுக்கிறதும், வாங்கிறதும் கூடாதுங்கிற பிடிவாதமுடைய நான், வரதட்சணையே வேண்டாம்னு மறுக்கப்போக, அவங்க என் கருத்தை வேறு மாதிரி, அதாவது என் குடும்பத்திலதான் ஏதோ பெரிசா விபரீதமிருக்குன்னு தவறுதலா எடுத்துக்கிட்டு, என்னையும் என் குடும்பத்தையும் தாறுமாறா விமர்சிக்கப் போயி...

''நாலு பேரும் ஓடும்போது ஊடால ஓடாம, நாம நேர்மை, நியாயம்னு சில நியதிகளைப் பேசிக்கிட்டு, பண்ணாந்தைத் தனமா நின்னுக்கிட்டிருந்ததாலதானே, நம்மைக் கீழே தள்ளி ஏறி மிதிச்சுக்கிட்டு ஓடறாங்கன்னு விழிச்சுக்கிட்டு, இந்த ஜனங்ககிட்டே யதார்த்தமா வாழறதுங்கிறது இயலாதுன்னு... வரதட்சணை கேட்கிற வறட்டு முடிவைக் கைக்கொண்டேன். இப்பச் சொல்லு, நான் எடுத்த முடிவுல ஏதும் தப்பு இருக்கா?''

அவரது கேள்வியில் இருந்த நியாயத்தைத் தலையசைப்பில் ஆமோதித்த திவ்யா, ''வாங்க மாமா டீ சாப்பிடலாம்'' என அழைக்க, மகிழ்ச்சியோடு அனைவரும் சேர்ந்து கேன்டீனை நோக்கி நடந்தனர்.

●



அயோத்தித் தீர்ப்புக்குச் சீராய்வு அவசியமா?

500 ஆண்டுகளுக்கு முன்பு 1528–இல் இந்தியா மீது முகலாயப் படையெடுப்பு நிகழ்ந்தது. முகலாய மன்னர் பாபரின் படைத் தளபதி டெல்லியைக் கைப்பற்றினான்.

சரயு நதியின் பக்கத்தில் கோசலா ராஜ்யத்தின் தலைநகரான அயோத்தியில் இருந்த ராமர் கோயிலை இடித்துத் தகர்ப்பதை, அத்தளபதி தனது வெற்றியின் உச்சமாகக் கருதி அதனைத் தகர்த்தான்.



ஸ்ரீ ராமர்

தகர்த்த இடத்தில் 'இந்தியா கேட்' போல ஒரு நினைவுக் கட்டடத்தை எழுப்பாமல் மசூதியை உருவாக்கினான்.

முகலாய சாம்ராஜ்ய ஆட்சிக்குப் பிறகு வந்த பிரிட்டிஷ் ஆட்சி ராமர் கோயில் இடிக்கப்பட்டதைப் பற்றியோ, பாபர் பெயரால் ஒரு மசூதி கட்டப்பட்டதைப் பற்றியோ கண்டு கொள்ளவில்லை.

அதன் பிறகு, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக இந்தியா விடுதலையடைந்தது. இறையாண்மை மிக்க பாரத ஆட்சி 1947–இல் உருவானது. பாரத ஆட்சிக்குச் சம காலத்தில் பாகிஸ்தான் ஆட்சி இந்தியாவின் மேற்குப் பகுதியில் இஸ்லாமிய தேசமாக உருவாகியது. அதேபோல் பாரதத்தையும் ஹிந்துஸ்தான் என அன்றே அமைத்திருந்தால் பெரிய எதிர்ப்பு ஏற்பட்டிருக்காது.

பாகிஸ்தானுக்குச் செல்ல விரும்பாத தேசிய இஸ்லாமியர்களை நமது தேசத்தின் தலைவர்கள் தங்களின் சகோதரர்களாகக் கருதியதால், பாரதத்தை ஹிந்துஸ்தானமாக்க விரும்பவில்லை. இஸ்லாமியர்கள் அன்றைக்கு 4 கோடிக்கும் குறைவாக இருந்தாலும், அச்சிறுபான்மையினரை 25 கோடி இந்துக்கள் சமத்துவமாகவே கருதினர். பாரதத்தை மத (கம்யூனல்) தேசமாக்காமல், மதச் சார்பில்லாத (செக்யூலர்) தேசமாகவே அறிவித்தனர்.

இந்தியாவை ஆக்கிரமித்த பாபர், இந்தியாவுக்கு அந்நியன். ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும், பௌத்தர்களுக்கும் தேசிய இசுலாமியருக்கும் அந்நியன்.

பாபர் மசூதி மெக்காவைப்போல, பெத்லகேம் போல புனிதத் தலமல்ல. அதுவும் ராமர் கோயிலை இடித்துக் கட்டப்பட்ட அந்த மசூதி, ஹிந்துக்கள் கடவுளாக வழிபடுகிற ராமர் பிறந்த புண்ணிய பூமி.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அந்த இடத்தை ராமரின் ஜென்ம பூமியாக நம்பியே, ஹிந்துக்கள் அங்கே தீர்த்த யாத்திரை வருகின்றனர். ஹிந்துக்களின் பக்தியை, நம்பிக்கையைப் பிற மதத்தார் அவமதிப்பதற்கு உரிமை கிடையாது.

இஸ்லாமியருக்கு ஹிந்துக்கள் மீது ஏன் கோபம் ஏற்பட்டதென்றால், மசூதியை அவர்கள் இடித்துவிட்டார்களே என்பதால்தான். அதேபோல அதனை இடித்த ஹிந்துக்களுக்கு முஸ்லிம்கள் மீது ஏன் ஆத்திரம் ஏற்பட்டதென்றால், படைத்தளபதி மீர்பாகி அங்கிருந்த பழமையான ராமர் கோயிலை இடித்துவிட்டானே என்பதால்தான். முதலில் இடித்தவன் முஸ்லிம் மீர்பாகியின் சிப்பாய்கள். இரண்டாவது இடித்தது ஹிந்து மதத் தீவிரவாதிகள்.

இடிப்புக்கு இடிப்பு என்று இப்படியே போனால், இதை எப்படி முடிப்பது?

இந்த நிலையில்தான், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், தனது ஓய்வு நாளுக்கு முன்பாக இதற்கான தீர்ப்பை வழங்குவேன் என்று உறுதிபட அறிவிப்புச் செய்தார். அதனை ஒட்டியே 40 நாட்கள் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தித் தீர்ப்பையும் வழங்கிவிட்டு ஓய்வும் பெற்றுவிட்டார்.

தீர்ப்பில், நீதிபதிகள் ஐவர் அமர்வு பாபர் மசூதி காலியிடத்தில் கட்டப்படவில்லை. ஏற்கனவே கட்டப்பட்ட ஒரு கட்டடத்தை இடித்த இடத்தில்தான் கட்டப்பட்டுள்ளது என்ற தொல்லியல் துறையின் ஆய்வைச் சுட்டிக் காட்டியது.

காலியிடத்தில் மசூதி கட்டப்பட்டிருக்குமானால், ஒருவேளை ராமர் கோயிலை இடித்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படாமலேயே போயிருக்கலாம். மீர்பாகி கட்டிய பாபர் மசூதியும் தனியான இடத்தில் இருந்திருக்கும்.

ஆனால், மீர்பாகி ஓர் ஆக்கிரமிப்பாளன். இந்து மத விரோதி. ராமர் கோயிலைப் பார்த்த மாத்திரத்தில் அது அவனை ஆத்திரப்படுத்தியிருக்க வேண்டும். இந்து மதத்தை அவமதிக்கும் நோக்கத்தில் அதை அவன் இடித்துவிட்டதுடன், அதன் மேலேயே ஒரு மசூதியையும் கட்டினான்.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஐவர் அமர்வு, மசூதியை இடித்தவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டதை நியாயம் என ஏற்க முடியாது எனச் சுட்டிக் காட்டியுள்ளது மதச்சார்பற்ற அணுகுமுறையாகும்.

இந்த ஐவர் அமர்வில் ஒருவருடைய தீர்ப்புக்கூட மாறுபட்டதாக இல்லை. எல்லா நீதிபதிகளுமே சட்ட நுணுக்கங்களுக்குள் பிரவேசிக்காமல், புதிய கோணத்தில் இந்த வழக்கை அணுகியுள்ளனர். அதற்காக அவர்கள் ஐவரும் கூடியமர்ந்து முன்பே விவாதித்திருக்கலாம்.

அயோத்தி வழக்கு கொந்தளிப்புகளை உருவாக்கக்கூடிய வழக்கு. சரியான இந்தப் புரிதலுடன் தாங்கள் வழங்கப்போகும் தீர்ப்பால், ஹிந்து – முஸ்லிம் கலவரம் மீண்டும் ஏற்படக் கூடாது என்றும் சமூக நல்லிணக்கம் (Communal harmony) பேணப்பட வேண்டும் என்றும் ஐவர் அமர்வு கருதியுள்ளது.

தீர்ப்பை மிக்க கவனத்துடன் வழங்கியுள்ளனர். அதனால் அவர்கள் அரசியல் சாசனச் சட்டச் சந்துக்குள் புகுந்து மயிர் பிளக்கும் வாதப் பிரதிவாதங்களில் பிரவேசிப்பதைத் தவிர்த்துவிட்டனர்.

அதற்கான அடையாளங்கள் பல அகப்படுகின்றன. "பாபர் மசூதி

இடிக்கப்பட்டதை ஏற்க முடியாது" என்று கருதுவதாகக் கூறியுள்ள உச்ச நீதிமன்றம், பாபர் மசூதி காலியிடத்தில் கட்டப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த ஐவர் அமர்வு, அயோத்தி வழக்குக்கே சட்ட ரீதியான சமாதியைக் (Legal Burial) கட்டிவிட்டது என்கிறது 'தி இந்து' தலையங்கம். அதேசமயம், ராமர் கோயிலையும் கட்ட அனுமதித்தது. பாபர் மசூதி கட்டவும் 5 ஏக்கர் காலி யிடத்தை ஒதுக்கியுள்ளது.

அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பை ரத்து செய்து, அதன்மூலம் வழங்கப்பட்ட 2.77 ஏக்கர் பூமியை, நில தாவா எனக் கருதக்கூடாது என்றும் கூடவே, மத நம்பிக்கைகளை (Faith) பகுத்தறிவுக் கேள்விக்கு உட்படுத்தக் கூடாது என்றும் கோடிட்டுக் காட்டி யுள்ளது.

ராமர் கடவுள் என்றால், அவருக்கு எதற்குப் பிறந்த வீடு? கடவுள் அல்ல, மனிதன்தான் என்றால் அவனுக்கு எதற்குக் கோயில்? எனக் கேட்பதில் தர்க்கம் இருக்கலாம், தர்ம நியாயம் இல்லை.

ராமர் பிறந்த அரண்மனைதான் அயோத்தியில் கோயிலானது என ஹிந்துக்கள் நம்புகிறார்கள். முஸ்லிம்கள் இதை நம்பாமல் போகலாம். இதே போல அவர்களின் புனிதத் தலம் மெக்கா என்பதை ஹிந்துக்கள் நம்பா மல் போகலாம். ஒருவர் மத நம்பிக்கை களில் பிறர் யாரும் தலையிடக்கூடாது.

சமூக நல்லிணக்கத்திற்கான இந்தத் தீர்ப்பை மார்க்சிஸ்டுகள் வரவேற்ற அதேசமயத்தில், பாபர் மசூதியை இடித்தவர்களைக் கைது செய்து தண்டிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இது இன்னொரு விவகாரத்தை ஏற்படுத்தும்.

கோத்ரா ரயிலுக்குத் தீ வைத்து 58 கரசேவகர்களை எரித்துக் கொன்றவர் களைக் கைது செய்து தண்டிக்க வேண் டும் என்று இந்துக்கள் கோரிக்கை எழுப் பினால் அதற்கு என்ன செய்வது?

தமிழ்நாட்டின் அரசியல் தலைவர் கள் இத்தீர்ப்பை வரவேற்றாலும், கட்சி நடத்துவதற்காகப் பிரச்சனைகளைக் கிளப்ப முடியாமல் போய்விட்டதே என்கிற அவர்களின் ஏமாற்றத்தை நம் மால் புரிந்து கொள்ள முடிகிறது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், ராம ஜென்ம பூமியின் 2.77 ஏக்கர் நிலத்தை உச்சநீதிமன்ற ஐவர் அமர்வு, ஹிந்துக் களுக்கு மட்டுமே அளித்துள்ளதில், அரசியல் தலையீடு இருப்பதாகத் தனது சந்தேகத்தை தெரிவித்துள்ளார். அப்படி யானால், மசூதி கட்டுவதற்கு 5 ஏக்கர் தரப்பட்டுள்ளதிலும் இதே சந்தேகத்தை ஏனோ அவர் எழுப்பவில்லை.

அயோத்தித் தீர்ப்பு பற்றி தி.க. தலைவர் கி. வீரமணி கூறுகையில், "மதக் கலவரங்கள் வெடித்து மக்கள் பலியாகக் கூடாது என்பதற்கான இத் தீர்ப்பு முக்கியமானதாக இருந்தாலும், வழக்குகள் போட மதவாதிகளுக்கு இட மளிப்பதாகவும் இத்தீர்ப்பு இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

மதவாதிகள் என்று அவர் குறிப்பிடு வது இந்துக்களையா? இஸ்லாமிய ரையா? என்பது தெரியவில்லை. இத் தீர்ப்பை திரு. கி. வீரமணி அவர்கள் கடுமையாக எதிர்க்க முடியாமல் அவரு டைய வாய் கட்டப்பட்டதாகவே தெரிகிறது.

பாபர் மசூதி இடித்ததை நீதி மன்றமே ஏற்க முடியாது என்று சொல்லிய பிறகும் முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் சீராய்வு மனுச் செய்ய என்ன இருக்கிறது? முஸ்லிம்களைத் திருப்திப்படுத்த மசூதியை அதே இடத் தில்தான் மறுபடியும் கட்ட வேண்டும்.

அப்படியானால், ராமரைக் கடவு ளாக வழிபடுகிற பக்தர்களுக்கு ராமர் கோயில் கிடைப்பது எப்படிச் சாத்திய மாகும்? பாபர் மசூதி போல ஆயிரக் கணக்கான மசூதிகள் உள்ளன. அவை யாவும் மெக்காவில் உள்ள காபா மசூ திக்குச் சமமானவையல்ல. அதே போலத்தான் ராமர் கோவிலுக்கும் வேறு எந்த ஹிந்துக் கோவிலும் அதற்குச் சமமானதல்ல.

ஹிந்து – முஸ்லிம் ஒற்றுமை வரா விட்டாலும், ஒருவரை ஒருவர் சகித்துக்

கொள்ளுமளவுக்காவது சமாதானமாக வாழ்வதற்குச் சிறுபான்மையினரான முஸ்லிம் சகோதரர்கள் இத்தீர்ப்பை வரவேற்க வேண்டும்.

பெரும்பாலான முஸ்லிம் சகோதரர்கள் பிரச்சனை செய்ய மாட்டார்கள். கடுமையான சில முஸ்லிம்களுக்கு மட்டுமே இத்தீர்ப்புக் கசப்பானதாக இருக்கும்.

உச்சநீதிமன்றத்தில் முத்தலாக் பற்றிய வழக்கில் 5 நீதிபதிகள் இருந்தனர். ஹிந்து மதத்தைச் சேர்ந்த யு.யு. லலித், சீக்கிய மதத்தைச் சேர்ந்த ஜே.எஸ். கேஹர், இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த அப்துல் நசீர், கிறித்தவ மதத்தைச் சேர்ந்த குரியன் ஜோசப், பார்சி மதத்தைச் சேர்ந்த நாரிமன் என ஐந்து வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள்.

இஸ்லாமிய நீதியரசர் நசீர் முத்தலாக்கை அரசியல் சட்ட அம்சங்களுக்குள் கொண்டுவரக் கூடாது என்கிற முரண்பாடான தீர்ப்பை வழங்கினார். ஆனாலும், பெரும்பான்மைத் தீர்ப்பால் முத்தலாக் சட்டம் செல்லுபடியாகியது.

ஆனால் அயோத்தி வழக்கில் 5 நீதிபதிகள் அமர்வில், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதியரசர்கள் எஸ்.ஏ. பாப்டே, டி.ஒய். சந்திரசூட், அசோக் பூஷண், அப்துல் நசீர் ஆகியோரில் எந்த ஒரு நீதிபதியும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கவில்லை என்பதே அயோத்தித் தீர்ப்பின் சிறப்பாகும்.

முஸ்லிம் தலைவர் ஜவாஹிருல்லா அவர்களுக்கு இந்தத் தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லை. மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்கிறார். இடித்தவர்களுக்குத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும் என்கிறார். இப்படி வேறு சில முஸ்லிம் தலைவர்களும் கூறியுள்ளனர். அவர்கள் யோசனைப்படி, தீர்ப்பு அமைந்திருந்தால் நாடு முழுவதும் நவகாளிகள் வெடித்திருக்கும்.

இந்தியாவில் இப்போது உள்ள 18 கோடி முஸ்லிம்களில் மதத் தீவிரவாதிகள் வெகு சிலர்தான். 100 கோடி ஹிந்துக்களில் மதத் தீவிரவாதிகள் சிலர்தான். இந்தச் சிலர் ஆபத்தானவர்கள், அத்துமீறிகள். இவர்கள் சிலராக இருந்தாலும், மழைத் துளிகள் அல்ல விஷத் துளிகள்.

இப்போதே, ஐ.எஸ். அமைப்பு மக்கள் மத்தியில் அச்சத்தை ஊட்டி வருகிறது. இது போதாது என்று இந்த வழக்கின் தீர்ப்பும் அமையுமானால், மதக் கலவரத்தால் இந்தியா அழிந்து போனது என்றே எதிர்காலச் சந்ததி ஏசும்.

இதனை மனதில் கொண்டுதான் இந்தத் தீர்ப்பால் யாருக்கும் வெற்றியும் இல்லை, யாருக்கும் தோல்வியுமில்லை. தீர்ப்பைக் கொண்டாடுவதுகூட அவசியமில்லை. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதையே இத் தீர்ப்பு பிரகடனப் படுத்தியுள்ளதாகப் பிரதமர் மோடி பக்குவமாகக் கூறியுள்ளார்.

இனிமேல் எதிர்பார்க்க வேண்டியது என்னவென்றால், இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவருமே தங்கள் கட்சி நிதியில் ஒரு தொகையை ராமர் கோவில் கட்டவும், மசூதி கட்டவும் தருவதற்கு முன்வரலாமே.

அரசியல் கட்சிகளில் இல்லாத ஹிந்துக்களும் முஸ்லிம் சகோதரர்களும் மசூதியையும் ராமர் கோவிலையும் மாறி மாறிக் கட்டுவதற்குத் திரளுவார்களானால், வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாக இந்தியா நிச்சயம் மலரும்.

மதவெறியர்களுக்கு மதம் இல்லை. அவர்கள் வெறியர்கள் மட்டுமே. மதத்தின் நோக்கம் மனிதனைத் தெய்வமாக்குவதுதானே தவிர, வெறியனாக்குவது அல்ல.

ஈசுவரன், அல்லா இருவருமே ஒருவரே. ஒவ்வொருவரும் சட்டத்தின் வியாக்கியானத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடியும். ஆனால், சட்டத்தின் நோக்கத்தை அப்படிச் செய்ய முடியாது. அது அனைவருக்குமான சமுதாய நல்லிணக்கம்தான்.

இப்பின்புலத்தில் வாசகர்களாகிய நீங்கள் அயோத்தித் தீர்ப்பு சமுதாய நல்லிணக்கத்திற்கு நிரந்தரமாக வழிவகுத்துள்ளதா? அல்லது தற்காலிகமானதாகத்தான் வழிவகுத்து உள்ளதா? என என்ன எண்ணுகிறீர்களோ, அதனை எழுதி அனுப்புங்கள் டிசம்பர் 15–க்குள்.

– பி.சி.

ஆன்மிகம்

நம்மாழ்வார் பாசுரங்களில்
இலக்கியச்சுவை

பரந்துபட்ட தமிழ் இலக்கியச் சோலையில் ஆழ்வார்களின், குறிப்பாக நம்மாழ்வாரின், இலக்கியங்களின் சுவையை அனுபவிப்பதே தனி சுகம்.

ஆழ்வார்கள் திருமாலியச் சிந்தனையாளர்கள். "உண்ணும் சோறு, பருகு நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் பகவானே" என்று இருந்தவர்கள்.


நம்மாழ்வார்

அதேபோல், ஆழ்வார்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வைக் கண்டு ரசித்தவர்கள். அதுவே இறைவன் என்று நினைத்து வணங்கியவர்கள். இறைவன் உலகத்தை படைத்துக் காத்து அருள்பவன். எண்ணற்ற இயற்கை வளங்களைப் படைத்து அதில் மறைந்தவன்.

ஆகையினால், இவ்வுலகின் கடலும் வானும் மலர்களும் ஆறுகளும் என எதைப் பார்த்தாலும் அது இறைவன் படைத்ததாக மட்டுமல்ல, இறைவனே அதிலே கலந்து இருப்பதாக அவர்கள் பாடிய பாடல்களில் நாம் காண முடியும்.

"திடவிசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை படர்பொருள் முழுதுமாய் அவை அவை தொறும்" என்று ஒரு பாசுரம்.

எங்கும் இறைவன் கலந்துள்ளான்...

எப்படிக் கலந்துள்ளான்?"

உடலுக்குள்ளே உயிர் எப்படி இயக்குகின்றதோ, அதைப் போல இயற்கையில் இறைவன் கலந்து இவ்வுலகத்தை இயக்குகின்றான் என்பதை,

"உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும்
பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட
சுரனே"

என்று இப்பாசுரத்தில் இறைத் தத்துவக் கருத்தையும் நம்மாழ்வார் இணைத்துச் சொல்லுகின்றார்.

ஒரு மலையை ஆழ்வார் பார்க்கின்றார். மலையின் மீது செஞ்சுடரைப் பார்க்கின்றார். இவை இரண்டையும் பார்க்கும் பொழுது திருமாலின் திருவுருவம் அவருக்கு ஞாபகம் வருகின்றது.

"திருமால் உருவொக்கும் மேரு அம்
மேருவில் செஞ்சுடரோன் திருமால் திருக்கை
திருச்சக்கரம் ஒக்கும்" (திருவிரு 88)

என்று பாடுகின்றார்.

அழகான நெல் வயல்கள். அங்கே நெற்பயிர்கள் நன்கு விளைந்து காற்றில் அசைந்து கொண்டிருக்கின்றன. இதைப் பார்க்கும்போது ஆழ்வாருக்கு அருமையான இந்த இயற்கைக் காட்சியானது இறைத் தொண்டு செய்வது போல் தோன்றுகிறது. நெல் வயல்கள் இறைவனுக்குக் கவரி வீசுவது போலக் காட்சி தருவதாகப் பாடுகிறார்.

"சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த்
திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தா கண்டேன்
எம்மானே"

என்று பாடுகின்றார்.



எஸ். கோகுலாச்சாரி

நம்மாழ்வார் மட்டுமல்ல; இதே கற்பனையை மற்றவர்களும் கைக்கொள்கின்றனர்.

நம்மாழ்வாரின் பாசுரங்களில் எத்தனையோ அருமையான இலக்கண இலக்கியச் சிறப்புக்களை அனுபவிக்க முடியும். முதல் பாசுரமே வினா விடை அமைப்பில் அமைந்த பாசுரம்.

"உயர்வற உயர்நலம் உடையவன் எவன், அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன், அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன், அவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே!"

'உயர்வற உயர்நலம் உடையவன் எவன்' என்கிற வினா எழுப்பி, விடையாக 'அவன்' என்று தருகின்றார். இதைப் போல அடி தோறும் வினா எழுப்புகின்ற பாசுரம் ஒன்று உண்டு.

"புகழுநல் ஒருவன் என்கோ? பொருவில்
சீர்ப் பூமி என்கோ?
திகழு தண் பறவை என்கோ? தீ என்கோ?
வாயு என்கோ?
நிகழும் ஆகாசம் என்கோ? நீள் சுடர்
இரண்டும் என்கோ?
இகழ்விலிவ் வனைத்தும் என்கோ?
கண்ணனைக் கூவுமாறே" (3.4.1)

இப்படி வியப்பு வினா தொடுத்து அமைந்த எண்ணற்ற பாசுரங்கள் திருவாய்மொழியில் கொட்டிக் கிடக்கின்றன.

பக்தி இலக்கியக் கவிதைகள் வெறும் வறட்டு வேதாந்தங்களைப் பேசுவதாக நாம் எளிதாகக் கடந்துவிட முடியாது. அற்புதமான இலக்கிய அனுபவங்கள் அவற்றில் உண்டு. அணி நலன்கள் உண்டு. இலக்கணக் குறிப்புகளும் உண்டு.

நம்மாழ்வார் பாசுரத்திலே அமைந்த சில உவமைகளைச் சான்றுகளாகக் காட்டலாம். விளக்க வந்த பொருளை, வேறொரு பொருளோடு தொடர்பு படுத்தி விளக்கும் இலக்கிய உத்திகள் பல உண்டு. அதில் உவமையும் உண்டு.

எம்பெருமானின் கண்களைக் காண்கின்றார். அந்தக் கண்களுக்கு உவமையாகத் தாமரை மலரைப் பல பாசுரங்களில் சொல்லுகின்றார். தாமரைக்கு உள்ள குளிர்ச்சி, மென்மை, அழகு, இனிமை, இவை அனைத்தும் எம்பெருமானுடைய கண்களுக்கும் பொருந்துவதால், தாமரை என்று அழைக்கின்றார். 'தாமரைத் தடம்' என்றே எம்பெருமானை அழைக்கின்றார்.

ஒரு பெரிய பரப்புடைய கடலைப் பார்க்கின்றார். அந்தக் கடல் மேலே செங்கதிரோன் எழுந்து வருவது அவர் கண்களுக்குத் தெரிகின்றது. இரண்டையும் இணைத்துப் பார்க்கிறார். கடல் பரப்பின் மேல் ஒளிமயமான எம்பெருமான் காட்சி தருவதாக ஓர் அற்புதமான ஒரு காட்சியை ஒரு பாசுரத்தில் சொல்கிறார்.

"இருள்விரி நீலக் கருஞாயிறு சுடர் கால்வது போல்
இருள்விரி சோதிப்பெருமான் உறையும் எறிகடலே"

எம்பெருமானுடைய நிறத்துக்கு மேகத்தைச் சொல்லிவிட்டார். இந்தப் பாசுரத்திலே இருட்டை விளக்குகின்றார். இருள்விரி நீலக் கருஞாயிறு என்று சொல்லிவிட்டார்.

இந்த இடத்திலே ஒரு தத்துவத்தையும் அழகாக இயற்கையோடு இணைத்துக் கொடுக்கக் கூடிய அமைப்பையும் நாம் காண்கின்றோம். எம்பெருமான் இருளைக் கெடுப்பவன். ஞானத்தை வழங்குபவன். இருள் என்பது மதிமயக்கம். ஞானம் என்பது மெய்யறிவு. நல்லறிவு.

நல்லறிவு இருந்தால்தான் இறைவனை உணர முடியும். அந்த நல்லறிவை இறைவனே கொடுக்கின்றான் என்பதினால்தான் அவர் இன்னொரு பாசுரத்திலே கூட 'மயர்வற மதிநலம் அருளினன்' என்று சொன்னார்.

எம்பெருமானுடைய நிறத்தை ஓரளவு சொல்லிவிட முடியும். ஆனால் பல்வேறு பொருள்களும் அவருடைய உருவத்தை நினைவுபடுத்துவதாக இருப்பதையும் அவர் பார்க்கின்றார்.

"கொண்டல்தான் மால்வரை தான் மா கடல் தான்
சூர் இருள் தான் வண்டறா பூவை தான்"

என்று ஒரு பாசுரம். அதிலே கார், மலை, கடல், இருள், காயாம்பூ என

<u>அட்டைப்பட விளக்கம்</u>



மாமன்னர் இராஜராஜசோழனின் 1034–ஆவது சதய விழா!

தமிழகத்தின் முதல் மாமன்னர் இராஜராஜசோழன். தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த இவரால் கட்டுவிக்கப்பெற்ற 'தஞ்சைப் பெரிய கோயில்' என்று போற்றப்படும் பெருவுடையார் கோயில் உலகப் புகழ் பெற்றது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் சதய நட்சத்திர நாளில் மாமன்னர் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் தஞ்சைப் பெரிய கோயிலில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு இராஜராஜசோழனின் 1034–ஆம் ஆண்டு சதய விழா, சென்ற 6.11.2019 அன்று கொண்டாடப்பட்டது. தமிழக அரசின் சார்பிலும், பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தச் சதய விழாவைச் சிறப்பிக்கும் வகையில் தஞ்சைப் பெரிய கோயிலும், மாமன்னர் இராஜராஜனின் திருவுருவச் சிலையும் இம்மாத 'ஓம் சக்தி'யின் முகப்பு அட்டையை அலங்கரிக்கின்றன.

– ஆர்.வி.

எல்லாப் பொருள்களையும் எம் பெருமானுடைய நிறத்துக்குச் சேர்க்கை ஆகுமோ என்று ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்துப் பாடுகிறார். ஆடை அகங்களிலே வண்ணப்பொருத்தம் பார்த்து ஆடை வாங்கும்போது, இந்தச் சிகப்புக்கு இந்தச் சிகப்பு பொருந்துகிறதா என்று ஆராய்வதைப் பார்க்கலாம்.

இராமனின் வடிவழகைப் பாடும் கம்பனும் இதே அமைப்பில் பாடிய கவிதையும் உண்டு. "அழியா அழகுடையான்."

இறைவன் தன்மையை, வியாபகத்தை ஒரு பாசுரத்திலே பொதிந்து பாடுகின்றார்.

"கறந்த பாலுள் நெய்யே போல் இவற்று ளெங்கும் கண்டுகொள்" என்று பாடுகின்றார். பாலுள் நெய் இருப்பது தெரியாது. ஆனால் இருக்கிறது போலே, இறைவனைக் கண்டு உணர முடியாதவர்க்குக் காண முடியாதவனாகவும் காண முடிபவர்க்குக் காட்சி தருபவனாகவும் விளங்குகின்றான்.

இன்னொரு செய்தி... மறைந்து இருக்கிறான். மறைந்திருப்பதாலே எளிதில் காண முடியாதவனாக இருக்கிறான்.

பெருமாள் கருட வாகனத்தில் உலா வருகின்ற காட்சியைக் காணுகின்ற ஆழ்வார் அதற்கும் ஓர் உவமையைப் பாடுகின்றார். காசினப் பறவை ஊர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில் போல் எம்பெருமான் வருவதாகக் காட்சிப்படுத்துகிறார்.

இல்பொருள் உவமை என்று ஓர் உவமை இலக்கணத்தில் உண்டு. அதாவது இல்லாத பொருளை உவமையாகச் சொல்வது. வராகப் பெருமானை வாழ்த்திப் பாடுகின்ற ஓர் அருமையான பாசுரம்.

"கோல மலர்ப்பாவைக்கு அன்பாகிய
என் அன்பேயோ
நீலவரை யிரண்டு பிறைகவ்வி நிமிர்ந்த தொப்ப
கோல வராகம் ஒன்றாய் நிலம்கோட்டிடைக்
கொண்ட எந்தாய்
நீலக் கடல்கடைந் தாய் உன்னைப் பெற்றினிப்
போக்குவனோ"

என்பது பாசுரம். இதில் 'நீலம் வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்த தொப்ப' என்கிற வரியை எடுத்தால் நீலமலை. நீல மலைக்கு இரண்டு பிறை கிடையாது. நீலமலையும் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகராது. ஆனால் நீலமலை போல் எழுந்த வராகத்துக்கு இரண்டு பிறைகள் உண்டு.

அடுத்து ஒரு பாசுரம். "ஓதக்கடல்

ஒலி போல் எங்கும் எழுந்த நல் வேதத்து ஒலி." கடலோசையும் மறையோசையும் இங்கே இணைத்துப் பார்க்கப்படுகிறது.

கடலொலி விட்டுவிட்டு ஒலிக்காது. அது தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும். அதைப் போல அந்த ஊரிலே வேத ஒலியானது இடைவிடாமல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது என்பதைக் காட்சிப்படுத்துகின்றார்.

இன்னொரு காட்சி ஆழ்வாருடைய மனதை அப்படியே வசப்படுத்துகிறது.

நன்கு காய்ச்சப்பட்ட இரும்பு. அந்த இரும்புத் துண்டு செக்கச்செவேலென்று அனல்விட்டுத் தகதகத்துக் கொண்டு இருக்கிறது. அதிலே கொஞ்சம் நீரை எடுத்து ஊற்றுகின்றான் தொழிலாளி. ஊற்றிய நீர் முழுக்க அந்த இரும்பு அப்படியே குடித்து விடுகிறது. இந்தக் காட்சியை கண்ட ஆழ்வார்,

"தீர இரும்பு உண்ட நீரது போல என் ஆருயிரை

ஆரப்பருக எனக்கு ஆரா அமுது ஆனாய் நீயே"

ஆழ்வார் கவிதையைப் பாடும்பொழுது உணர்வுப்பூர்வமாக, மிக நுட்பமான கவி அனுபவங்களைக் காட்டுகின்றார்.

நம்மாழ்வாரின் பாசுரத்திலே பல சிற்றிலக்கியக் கூறுகளையும் நாம் காணுகின்றோம். 96 வகையான சிற்றிலக்கியங்கள் இறைவனைப் புகழும், அரசர்களை புகழும், வள்ளல்களைப் புகழும்.

அந்தாதி, கலம்பகம், கோவை, பிள்ளைத்தமிழ், பரணி, பள்ளு, மடல் என்று பல்வேறு சிற்றிலக்கியங்களை நாம் கேள்விப்பட்டிருக்கலாம். தூது என்பது ஒரு சிற்றிலக்கிய வகை. இதைத் தனி இலக்கியமாகப் பாடாவிட்டாலும், தூது என்கிற விஷயத்தைப் பயன்படுத்திச் சில பதிகங்களைப் பாடியிருக்கின்றார்.

நாரை, வண்டு, கிளி, பூவை, குருகு, அன்னம் முதலியவற்றைத் தூதாக விடுகின்றார். அகத்துறையில் அமைந்த பாடல்களில் அழகான உணர்ச்சியைப் பிழிந்து காட்டுகிறார். நாரையைத் தூது விடும் பாடல் ஒன்று.

"அஞ்சிறைய மடநாரா அளியத்தா நீயும் நின்

அஞ்சிறைய சேவலுமா ஆவாவென்று எனக்கு அருளி"

என்று நாரையைத் தூதுவிட்டுத் தன்னுடைய மேலான பிரிவுத் துயரை எம்பெருமானிடம் விளக்குவதாகக் காட்சிப் படுத்துகின்றார்.

கடற்கரையின் முகத்துவாரங்களில் இருக்கக்கூடிய பகுதிகளுக்குக் கழிவாய்ப்பகுதி என்று பெயர். குருகு என்கிற பறவையினம் அங்கு மேய்ந்து கொண்டிருக்கும். திருவண்வண்டூர் என்கிற திருத்தலத்திலே இருக்கக் கூடிய எம்பெருமானை நாயகி பாவத்தில் காதலிக்கிறார். எம்பெருமானும் முகம் கொடுக்கவில்லை. ஏன் என்று விளங்கவில்லை. யாரைத் தூது அனுப்பலாம் என்று பார்க்கின்ற பொழுது, கடற்கரை ஓரமாக நின்று கொண்டிருக்கக் கூடிய குருகுகளைத் தூது அனுப்பினால் என்ன என்கிற சிந்தனை ஆழ்வாருக்கு வருகிறது.

உடனே அந்தக் குருகுகளைக் கூப்பிட்டு "நீங்கள் சென்று வணக்கத்தோடு என் தலைவனிடத்திலே என் காதலைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொள்கின்றாள்.

தலைவன் எங்கே இருப்பான் என்பதையும் அழகாகக் காட்டுகின்றாள். "மலைநாட்டுப் பிரதேசம் நீர் வளமும் நில வளமும் உண்டு. அதனால் செந்நெல்கள் மிக அழகாக வளர்ந்து செழித்திருக்கின்றன. அங்கே உறைகின்ற கையில் சக்கரம் வைத்திருக்கக்கூடிய என்னுடைய பெருமானைக் கண்டு நீங்கள் என்னுடைய காதலைச் சொல்ல வேண்டும். எப்படித் தெரியுமா... கை கூப்பிச் சொல்ல வேண்டும்." இத்தனை அழகும் நயமும் இந்தப் பாடலிலே அமைந்திருக்கின்றன.

"வைகல் பூங் கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்

செய்கொள் செந் நெல் உயர் திருவண்வண் டூருறையும்

கைகொள் சக்கரத்து வைத்து என் கனிவாய்ப்

பெருமானைக் கண்டு

கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன்

காதன்மையே"

என்பது இப்பாசுரம்.

இதுபோல் நம்மாழ்வார் பாசுரங்களில் கொட்டிக் கிடக்கும் இலக்கியச் சுவைகள் ஏராளம். அவற்றைப் படித்து ருசித்துக் கொண்டேயிருக்கலாம். ●

வாசகர் கடிதம்

பாரதியின் கவிதை வரியோடு – பாரதியின் அழகிய படத்துடன் 'ஓம் சக்தி' தீபாவளி மலர் – 2019 அட்டைப்படம் ஓர் ஓவியமாய்க் காட்சியளிக்கிறது. மலர், பல்சுவையும் நிரம்பிய கருத்துக் களஞ்சியம்.

– **இரா. கதைப்பித்தன்,** இராஜபாளையம்.

ஓர் இதழின் பெருமையை இதைவிடச் சிறப்பாக விளக்க முடியாது என்று எண்ணி வியக்கும்படி அருமையான தலையங்கம் 'கலங்கரை தீப'த்துடன் மலர்ந்திருக்கிறது 'ஓம் சக்தி' தீபாவளி மலர்.

– **ஜெயாராஜாமணி,** மதுரை.

'ஓம் சக்தி தீபாவளி மலரில் ஸ்ரீரங்கப்பட்டணம் பற்றிய கட்டுரையில் திப்பு சுல்தானின் வாழ்க்கையைச் சுருக்கமாகவும், சுவையாகவும் என்.ஆர். ஜெயசந்திரன் எழுதியுள்ளார்.

– **மு. அங்கமுத்து,** இடைப்பாடி.

'ஓம் சக்தி' தீபாவளி மலரில் "தமிழ்ச் சமூகத்திற்குச் சாதிகள் இல்லை" என்று டாக்டர் ம. மாணிக்கம் அவர்களின் அரிதான ஆய்வுக் கட்டுரை சிந்தனைக்கு விருந்து. தமிழர்கள் பெருமிதப்பட வேண்டிய, சிறப்பிற்குரிய செய்தியுடன் முடித்திருப்பது வெகு அழகு!

– **மு. சண்முகம்,** தருமபுரி.

'ஓம் சக்தி' தீபாவளி மலரில் வெளிவந்துள்ள கட்டுரை, கதை, கவிதை மற்றும் புனிதங்கள் அனைத்தும் மக்களும் படித்துப் பயன்பெறும்படி மிகச் சிறப்பாக உள்ளன. 'ஓம் சக்தி' இதழ் தன் சேவையைத் தொடர வாழ்த்துக்கள்!

– **பி. வெங்கட்ராமன்,** பொள்ளாச்சி.

எப்போதும் போல இந்த வருட 'ஓம் சக்தி' தீபாவளி மலரையும் பத்திரப்படுத்தி விட்டேன். சும்மா சொல்லக் கூடாது, ஓம் சக்தி தீபாவளி மலர் என்றாலே எப்போதும் அது ஒரு பொக்கிஷம்தான்!

– **சின்னஞ்சிறுகோபு,** சிகாகோ.

காந்தியடிகளின் 150–ஆம் ஆண்டு விழா வேளையில் ஓம் சக்தி தீபாவளி மலரில் அதைக் கௌரவிக்கும் வகையில் மகாத்மாவின் நல்லிணக்க யாத்திரைகளை நினைவுகூர்ந்திருப்பது சிறப்புக்குரியது. அதுபற்றிய ம.செ.–வின் ஓவியங்கள் கண்ணைக் கவர்ந்தன.

– **அ.சாகுல்அமீது,** கொழிஞ்சாம்பாறை.

'மொழியைக் கிளியாக்கி, 'எங்கள் கிளி' என வான்வெளியில் பறக்க விட்டிருக்கிற கவிஞர் சிற்பியின் கவிதை அருமையிலும் அருமை!

– **பானுமதி பாஸ்கோ,** கோவை.

'கல்வியில் தேசபக்தியைக் கலப்போம்!' என்று 'சுரங்கம்' பகுதியில் வெளியாகியிருந்த டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களின் கட்டுரை, தேசநலன் மீது அக்கறை கொண்டு எழுதப்பட்ட கட்டுரை. தொலைநோக்குச் சிந்தனை! ●



ஆலந்தூர் கோ. மோகனரங்கன் மறைவு

கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அருமையான கவிஞர். பெருமைக்குரிய பண்பாளர். உரிமைக்கான போராளி. அவருடைய கவிதைகளை 'ஓம் சக்தி' பதிப்பித்து வாசகர்களின் சிந்தனைக்கு விருந்தளித்தது.

அவர் எழுதியுள்ள 'நூலகத்தால் உயர்ந்தேன்' என்ற 1096 பக்கங்கள் கொண்ட நூலை வாசித்தால் வியந்து போவோம். நினைவலைகளாக அவற்றை அவர் பதிவு செய்துள்ளார். அந்நூலில் ராஜாஜி, அண்ணா, பாரதிதாசன், மறைமலையடிகள், கி.ஆ.பெ. என தமிழ்ச் சான்றோர்களின் வரலாறுகளைப் பதிவு செய்துள்ளார்.

திருக்குறள் மூல நூல் அல்ல, அது வேதங்கள் மற்றும் தர்ம சாஸ்திரங்களின் சாரம் என்று டாக்டர் இரா. நாகசாமி எழுதிய கட்டுரையை 'ஓம் சக்தி' எதிர்த்தபோது, அதில் தனது பங்களிப்பாக ஆலந்தூர் கோ. மோகனரங்கன் வெளியிட்ட கட்டுரை, இரா. நாகசாமியைத் தோலுரித்துக் காட்டியது. அப்படிப்பட்ட உரிமைப் போராளி.

இத்தகைய சிறந்த படைப்பாளி திடீரென மரணமடைந்த செய்தியை அறிந்து கையறுநிலை அடைந்தோம். சிறந்த ஆளுமை நம்மைவிட்டுப் பிரிந்து சென்றது தமிழுக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பாகும். அத்தகைய ஒரு சிறப்புக்குரிய ஒருவரை நினைவுகூர்ந்து, அவருடைய ஆன்ம சாந்திக்கு 'ஓம் சக்தி' பிரார்த்திக்கிறது.

– இ.ஆர்.



தினமணி தீபாவளி மலர் 2019

நாளேடுகள் வெளியிடும் தீபாவளி மலர்களில் நல்லதொரு மலராக மலர்ந்திருக்கிறது ‘தினமணி தீபாவளி மலர் – 2019.’ மலரில் இடம் பெற்றுள்ள படைப்புகள் அத்தனையும் சிறப்பாக உள்ளன.

தொடக்கத்தில் ஆன்மிகத் தொகுப்பு. ஆசிரியர் திரு. கி. வைத்தியநாதனின் ‘அஹோபிலம் அஹோபலம்’ கட்டுரை மிக அருமை. அத்துடன் பல தலங்களைப் பற்றிய கட்டுரைகள் மலரை உயர்த்துகின்றன.

பெண் ஆளுமைகள், இசையமைப்பாளர்கள், முதுபெரும் ஆளுமைகளின் தலை தீபாவளி அனுபவங்கள், புகழ்பெற்ற எழுத்தாளர்களின் சிறுகதைகள், இலக்கியக் காட்சிகள், தமிழகத்தின் தொல்லியல் சிறப்புகள், கடல் கடந்த தமிழ், தமிழகத்தின் மன்னர் பரம்பரையினர், கடல் கடந்த தமிழ் ஆளுமைகள், விளையாட்டுகள், சிவ சங்கரியின் ‘உயர்ந்தவர்கள்’ குறுநாவல் என அற்புதங்களின் குவியலாக கண்களுக்கு விருந்தளிக்கும் வண்ணப்படங்களோடு அழகாக வெளிவந்திருக்கிறது ‘தினமணி தீபாவளி மலர் – 2019.’

தினமணி தீபாவளி மலர் – 2019, பக். 340, விலை ரூ. 100/– முகவரி : தினமணி, 29, 2–வது மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை – 600 058. ❖

அமுதசுரபி தீபாவளிச் சிறப்பிதழ் – 2019




‘**அ**முதசுரபி’ தீபாவளிச் சிறப்பிதழ் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இவ்வாண்டுச் சிறப்பிதழ், மருத்துவர் ச. இராமதாசு அவர்களின் ‘புவி வெப்பமயமாதல் எனும் பேரழிவு’ எனும் கட்டுரையுடன் அருமையாகத் தொடங்குகிறது. ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணனின் அட்டைப்படச் சிறுகதையான ‘‘ஊர்மிளை என்றோர் உத்தமி’’ இராமாயணக் காட்சியைக் கண்முன் நிறுத்துகிறது.

மேலும் ஆன்மிகம், பழைய இலக்கியம், தற்கால இலக்கியம், சிறுகதைகள், கவிதைகள், வாழ்வியல் கட்டுரைகள், கலைகள், பயண இலக்கியம், பொது எனப் பல்வேறு தலைப்புகளில் புகழ் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் சிறப்பாக வெளிவந்துள்ளன.

அமுதசுரபி தீபாவளிச் சிறப்பிதழ், பக் : 300, விலை : ரூ. 175/–, முகவரி : அமுதசுரபி, R5-A/2, தரைத்தளம், இமயம் காலனி 2–ஆவது தெரு, அண்ணா நகர் மேற்கு விரிவு, சென்னை – 600 101. போன் : 044–43538245. ❖

விஜயபாரதம் தீபாவளி இதழ் – 2019





விஜயபாரதம் வார இதழின் ‘தீபாவளி இதழ் – 2019’ வண்ணமயமான இரண்டு புத்தகங்களாக வெளிவந்துள்ளன.

முதல் புத்தகம் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எனப் பல்சுவைக் கதம்பமாக அழகுற வெளிவந்துள்ளது. எஸ்.ஆர்.அருணாச்சலம் வழங்கியுள்ள ‘தீப ஒளியில் தெய்வ கங்கை’ கட்டுரை தீபாவளியின் சிறப்பை எடுத்துரைக்கிறது. திருப்புகழ் மதிவண்ணன், அறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியனின், கட்டுரைகள் சிறப்பாக உள்ளன. பட்டுக்கோட்டை பிரபாகர், உமா கல்யாணி, படுதலம் சுகுமாரன், ராஜேஷ்குமார், விமலாரமணி உள்ளிட்ட பல பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகள் அருமை!

இரண்டாவது புத்தகம் மூத்த பத்திரிகையாளர் திரு. சுப்பு அவர்களால் ‘தமிழர் பெட்டகம்’ என்று தயாரிக்கப்பட்டுள்ளது. இது தமிழர் பெட்டகம் என்பது உண்மை. தமிழகத்தின் பெருமைகளை ஆன்மிகம், கலைகள், கோவில்கள், இலக்கியங்கள், பிற சிறப்புகள் எனப் பல்வேறு தலைப்புகளில் எடுத்துரைக்கிறது.

விஜய பாரதம் தீபாவளி இதழ் – 2019, பக். 376, விலை ரூ. 150/–, முகவரி : விஜயபாரதம் வார இதழ், ‘சேவா’, 79, முதல் தளம், டாக்டர் அழகப்பா சாலை, புரசைவாக்கம், சென்னை – 84. போன் : 044 – 26421271.

– ஆர்.வி.

இஸ்லாத்தைப் பற்றி தஸ்லிமா நஸ்ரீன்...



"கேள்வி : திருக்குரான் மறையில் உள்ளவை அல்லா அருளிய இறை வசனங்கள். அதை நம்பாமல் கேள்வி கேட்பதே தெய்வ நிந்தனையல்லவா?

பதில் : இந்த இறை வசனங்களை யார் எழுதியது? நமது இறுதி இறைத் தூதரான நபிகள்பெருமான்தான் இறைவன் சொல்லச் சொல்ல எழுதினார். இறைவசனம் இவ்வாறு எழுதப் பட்டிருப்பதால், படுதீவிர நம்பிக்கையுடன் அதை ஓதுகிறவர்கள் முஸ்லீம் அல்லாதவர்களையும், இஸ்லாமை விமர்சிப்பவர்களையும் ஒழிப்பதைத் தங்கள் கடமை என்று நம்புகிறார்கள். அவ்வாறு செய்தால், அவர்கள் மோட்சத்திற்குச் செல்வதாகவும் நம்புகிறார்கள்.

கேள்வி : புனித இறை வசனங்களிலேயே கொலை, கடவுளின் சித்தமாக இருப்பதால், இந்த வன்முறைக்கு மாற்று என்ன?

பதில் : இஸ்லாம் சமயம் சீர்திருத்தப்பட வேண்டும். இறை வசனங்களைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றுவதை நிறுத்துவதற்கான தருணம் வந்துவிட்டது. திருக்குரானில் நாம் நமது சமயோசித ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும். இறை வசனத்தை, எழுத்து அர்த்தத்தை அப்படியே பின்பற்றிவிடக் கூடாது. நம்முடைய சொந்த ஞானத்தைப் பயன்படுத்தி எது நல்லது, எது மிதமானது, எது தீவிரமானது என்று அறிய வேண்டும்.

ஆனால், இதிலுள்ள முரண்பாடு என்னவென்றால், இந்தப் பயங்கரவாதிகள் இவ்வாறு வன்முறையில் ஈடுபடுவதைத் தவறாக நினைக்காமல், தங்களை நல்ல முஸ்லீம்கள் என்றும் நம்புகிறார்கள். அத்துடன், திருக்குரானே அப்படித்தான் போதித்துள்ளதாகவும் நம்புகிறார்கள்.

இந்த இடத்தில் இளைஞர்களை முதலில் பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும். சமூகம் கண்காணிக்க வேண்டும். அவ்வாறு கண்காணித்தால்தான் அவர்களை நல்வழிப்படுத்த முடியும்.

நல்வழிப்படுத்துவது என்பது ஒரு நல்ல முஸ்லீமாக இருப்பதுதான். அதற்கு, மற்றவர்களுக்கு நன்மையை மட்டுமே செய்ய வேண்டும்."

– 18 ஜூலை 2016 'அவுட்லுக்' பத்திரிகையில் வெளியான இப்பேட்டியின் முழுப் பகுதி 'ஓம் சக்தி' ஆகஸ்டு, 2016 இதழில் வெளியாகியுள்ளது.

கட்டுரை

சிவவாக்கியர் சிந்தனையில் புதுமையும் புரட்சியும்

பகவதாஸ் ஸ்ரீஸ்கந்ததாஸ்



சிவவாக்கியர்

தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் அறிஞர்கள், மொழிக்குச் சித்தர்கள் ஆற்றிய தொண்டினை எடுத்துக் கூறத் தயங்க மாட்டார்கள். இன்றும் கிராமங்களில் இவர்களின் பாடல்களை மக்கள் பாடுவது நாம் காணக் கூடியதாக உள்ளது. சித்தர்களின் பாடல்களில் பல மறைமுகமான கருத்துக்களை அவதானிக்கலாம். இவர்களின் ஆக்கங்களில் தத்துவம், சமயம், பகுத்தறிவு உட்பட அறிவியல் சார்ந்த பல அம்சங்களைக் காணலாம்.

பேராசிரியர் மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில், இவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்: இந்தச் சித்தர்களுள் பெரும்பாலோர் சைவர்கள் ஆயினும், பொதுவாக இவர்கள் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்தவர்கள், மூடநம்பிக்கைகளுக்கு இடம் தராதவர்கள், சடங்குகளையும் சடங்குகளோடு ஒட்டிய வழிபாடுகளையும் போற்றாதவர்கள். தம் வாழ்க்கை அனுபவங்களால் கண்டறிந்த உண்மைகளை மட்டுமே எடுத்துச் சொல்வது இவர்களின் நோக்கம்!

சித்தர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்தவர்களல்லர். வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தவர்கள். இவர்களில் பலரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் பெரிய அளவில் இல்லை. சிலரைப் பற்றிய குறிப்புகள் உண்மையும் கற்பனையும் கலந்தனவாகவே காணப்படுகின்றன.



சித்தர்

கடவுள் குடியிருக்குமிடம் : சிவவாக்கியர், சித்தர்களில் முக்கியமான ஒருவராக விளங்குகின்றார். பொதுவாக இவர் வாழ்ந்த காலம் 10–ஆம் நூற்றாண்டு என்று கூறுவர். 'சித்தர் பாடல்கள்' என்ற நூலில், சிவவாக்கியர் வாழ்ந்த காலம் கி.பி. 9–ஆம் நூற்றாண்டாக இருக்கக் கூடும் என்ற கருத்துக் காணப்படுகிறது. பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் இவர் என்று கூறுவாரும் உளர்.

வாசகரைச் சிந்திக்கத் தூண்டுவனவாக சிவவாக்கியரின் பல பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றில் சில, சமுதாயத்தில் நிலவிய சம்பிரதாயங்கள் பகுத்தறிவுடன் முரண்படுவதை எடுத்துக் காட்டுகின்றன. நகைச்சுவையுடன் கூடிய பின்வரும் பாடல், அன்று நிலவிய வழிபாட்டுமுறையைப் பற்றிப் பக்தர்களைச் சிந்திக்க வைக்கின்றது.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லும்மந்திரம்
ஏதடா?
நட்டகல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?" (517)

இப்பாடலில், மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, விக்கிரகங்களை வலம் வந்து வழிபடும் பழக்கம் சிவவாக்கியரால் கேள்விக்கு உட்படுத்தப் படுகின்றது. அதேபோல் கேலிக்கும் இலக்காகின்றது. இதனை விளக்க இவர் தரும் உதாரணம், சிறுவர்களுக்கும் புரியக் கூடியதாக விளங்குகிறது.

எப்படி, சமையல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பாத்திரமோ அல்லது அகப்பையோ உணவின் சுவையை அறியமாட்டாவோ, அதேபோன்று, ஒவ்வொருவருக்குமுள்ளே வசிக்கும் இறைவனைக் கண்டுகொள்ள விக்கிரகங்களும், மந்திரங்களும் பயன்பட மாட்டா என்று கூறுகின்றார் சிவவாக்கியர்.

மேலே கூறப்பட்ட கருத்து, இறைவன் பற்றிய இவரது நிலைப்பாடாகும். அதன்படி, மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு விக்கிரகங்களை வலம் வருவதன் மூலம் இறைவனை உணர முடியாதென்று தெளிவாக விளக்குகிறார். இந்த நிலைப்பாட்டை இறைவன் ஒவ்வெருவருக்கும் உள்ளே உள்ளார் என்பதை, பின் வரும் பாடல் மூலம் உறுதிப் படுத்துகின்றார்.

"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை
இல்லையே!" (35)

கோயிலுக்குச் செல்வதன் மூலம் இறைவனைக் காணலாம் என்று சிலர் கருதுவர். வேறு சிலர், குளங்களில் புனித நீராடுவதன் மூலம், தமது பாபங்களை அகற்றி இறைவனைக் காண முயல்வர். இவர்களுக்குச் சிவவாக்கியர் வழங்கும் ஆலோசனை இவர்கள் தேடும் பொருள் மனத்துளே காணப்படும் என்பதாகும்.

ஒன்றே தெய்வம் : ஒவ்வெருவருடைய மனத்துள்ளும் இறைவன் குடியிருக்கிறார் என்று கூறும் சிவவாக்கியர், உலகில் ஒன்றிற்கு மேற்பட்ட தெய்வங்கள் உள்ளன என்று கூறுவோரைச் சபிக்கின்றார். கடவுள் ஒருவரே என்ற இவரது சிந்தனையைக் கீழ்வரும் வரிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

"எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு
தேவரோ?
இங்குமங்கு மாயிரண்டு தேவரே இருப்பரோ?
அங்குமிங்கு மாகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ!
வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுத்து
மாள்வரே" (133)

உயிர் பிரிந்தபின் உயிர் : மற்றைய பொருள்களைப் போலன்றி, உயிர் பிரிந்தபின் உடல் பெறுமதியற்ற பொருளாகவே கணிக்கப்படுகின்றது. சிவவாக்கியர் கருத்துப்படி, மண்ணால் செய்யப்பட்ட ஒரு பாத்திரம் உடைந்தால், அதன் துண்டுகளை வேறு தேவைக்குப் பயன்படுத்தலாமென்று சேகரித்து வைப்பர். உலேகத்தினால் செய்யப்பட்ட பாத்திரம் விழுந்து நெளிந்தாலும் அதனை எறியாமல் பாதுகாப்பாக வைத்திருப்பர். ஆனால், உயிர் பிரிந்தபின் உடலை அப்படிப் பேணார். அந்த உடல் (பிணம்) துர்நாற்றம் தரும் என்பதால், தாமதமின்றி மயானத்திற்கு எடுத்துச் செல்வர். ஆனால் மக்கள் எண்ணத்தில் கலந்திருக்கும் மாயைதான் என்ன? இதற்கு விளக்கம் தரும்படி ஈசனிடம் சிவவாக்கியர் வேண்டுகின்றார். உயிர் பிரிந்த உடல் பற்றிய நாலு வரிகளில் அமைந்த இவரது பாடல் கீழே தரப் பட்டுள்ளது.

"மண்கலம் கவிழ்ந்தபோது வைத்துவைத்து
அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்தபோது வேணுமென்று
பேணுவார்

நண்கலம் கவிழ்ந்தபோது நாறுமென்று போடுவார்

எண்கலந்து நின்றமாயம் என்னமாயம் ஈசனே!" (80)

உயிர் பிரிந்தபின் எவ்விதப் பயனு மற்றது உடல் என்ற கருத்தில் தமிழ் இலக்கியத்தில் பல பாடல்கள் காணப் படுகின்றன. அந்த உடலிலிருந்து எழும் துர்நாற்றத்தைப் பற்றிப் பட்டினத்தார், நாதகுத்தனார் முதலியோர் தமது ஆக்கங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

மறுபிறப்புப் பற்றிய கேட்பாடு : இந்தியாவில் தோன்றிய பெரும்பாலான மதங்கள் ஒருவர் இறந்தபின் மீண்டும் பிறப்பார் என்ற கருத்தை முன்வைக் கின்றன. பிறப்பு, துன்பத்திற்கு வழி கோலும். எனவே, பிறவாமை வேண்டு மென்று பக்தர் இறைவனிடம் வேண்டு வர். பிறப்பும் இறப்பும் சகடக்கால் போல மாறி மாறி வரும் என்ற கருத் தைத் திருவள்ளுவரும் ஏற்கின்றார் என்பதை,

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு"

என்ற குறள் உறுதிப்படுத்துகின்றது.

ஆனால், சிவவாக்கியர் மறுபிறப்புப் பற்றிய இக்கேட்பாட்டை நிராகரிக் கிறார். மறுபிறப்பு இல்லை என்ற இவரது ஆணித்தரமான கருத்தை,

"கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணை மோர்புகா

உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா


விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா

இறந்தவர் பிறப்பதில்லை இல்லையில்லை இல்லையே!" (48)

என்னும் பாடலில் எடுத்துக் காட்டு கின்றார்.

பசுவின் மடியில் இருந்து கறந்த பால் திரும்பவும் அங்கு சென்றடை யாது. மோரில் இருந்து கடைந்தெடுக்கப் பட்ட வெண்ணெய் திரும்பவும் மோராக மாறாது. சங்கில் இருந்து வெளிவந்த ஓசை சங்கு உடைந்தபின் அதனுள் புக முடியாது. மரத்தில் பூத்து நிலத்தில் உதிர்ந்த பூவும், மரத்திலிருந்து விழுந்த காயும் திரும்பவும் மரத்தை அடைய மாட்டா. இதைப்போல் ஒருவர் இறந்தபின் திரும்பி வர மாட்டார் என்று விளக்குகிறார்.

சாதிக் கொடுமை : சென்ற நூற் றாண்டில் பாரதத்தில் நிலவிய சாதிக் கொடுமையின் கோரத்தை பாரதியார் தமது கவிதை மூலம் வெளிப்படுத்தி னார். பாரதியார் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்வாழ்ந்த சிவ வாக்கியர் இந்த மனிதத் தன்மை யற்ற செயலைத் தமது பாடல் களில் வெளிப் படுத்தத் தவற வில்லை. இந்த அக்கிரமத்தைச் சிவவாக்கியர் தர்க்க ரீதியாகக் கண்டிக்கிறார். இதனைக் கண்டிக்கும் சிவவாக்கியரின் வார்த்தைகள் சிலரது புரட்சிகரச் சிந் தனையின் வெளிப்பாடாகவே பார்க்கப் படுகின்றன.



பாரதியார்




டாக்டர் மு.வ.

சிவவாக்கியரின் பாடல்களில் ஆழ மான கருத்துக்களைக் காணலாம். சில சந்தர்ப்பங்களில் பொருள் இலகுவில் புரியாது. இவரது பாடல்கள் வாசகரின் சிந்தனையைத் தூண்டக்கூடியன. இப் பாடல்கள் சாதி சமய பேதங்களுக்கப் பாற்பட்டவை. சிவவாக்கியரின் ஆக்கங் களில் புதுமையைக் காணலாம். பல பாடல்கள் இவரது புரட்சிகரச் சிந் தனையின் வெளிப்பாடாகவே அமைந் துள்ளன.

கட்டுரை

காரைக்காலம்மையார் கையாண்ட
கடைக்காப்பு உத்தி





தமிழ் ஞான சம்பந்தர் பாடிய பதிகங்களைத் 'திருக்கடைக்காப்பு' என்று சைவச் சான்றோர் சிறப்பித்துப் பேசுவது உண்டு. அவர் சிவபெருமானைப் போற்றி 383 பதிகங்களைப் பாடியுள்ளார் என்பார்கள். ஒவ்வொரு பதிகத்தின் கடைசிப் பாடலையும் கடைக்காப்புச் செய்தே சம்பந்தர் பெருமான் நிறைவு செய்துள்ளார்.

'கடைக்காப்பு' என்பது ஒரு பதிகத்தின் பத்துப் பாடல்களையும் பாடிய பின்பு பதினொன்றாம் பாடலில் அந்தப் பதிகத்தைப் பாடியவர் பெயரும் அப்பதிகத்தைப் பாடுவதால் அடியார் அடையும் பயனையும் உறுதிப்படுத்தப் பாடப் படுவதாகும்.

இதனால் பதிகத்தை இயற்றிய ஆசிரியர் பெயர் அதிகாரப் பூர்வமாகத் தெரிய வருகின்றது. கூடவே பதிகத்தைப் பாடுவோர் பெறும் பேறும் தெளிவுப்படுத்தப்படுகிறது.

இந்தப் புதிய உத்தியைச் சம்பந்தர் தாம் பாடிய அத்தனை பதிகங்களிலும் பதிவிட்டுள்ளார். அவர்க்குப் பின்பு வந்த சுந்தரரும் சம்பந்தரைப் போலவே தம் பதிகங்களின் இறுதியில் கடைக்காப்புப் பாடலைப் பாடியுள்ளார்.

இந்த இரண்டு சிவஞானியர்க்கும் சில நூற்றாண்டுக்கு (5–ஆம் நூற்றாண்டு) முன்பே, தாம் பாடிய பதிகங்களில் கடைக் காப்புச் செய்து காட்டியவர் காரைக் காலம்மையாரே ஆவார்.

இந்த அரிய செய்தி குடத்தில் வைத்த விளக்குப் போல இன்னமும் வெளிச்சத்திற்கு வராமலேயே உள்ளது. அம்மையார் தாம் பாடிய இரண்டு மூத்த திருப் பதிகங்களின் கடைசிப் பாடல்களிலும் தம் பெயரைப் பதிவு செய்ததுடன், அப்பதிகப் பாடல் களைப் பாடும் அடியார் அடையும் பயன்களையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

"... ... . காரைக் கால்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்து வாரே!"

(மூத்-1 : பா : 11, 3-4)

என்பது அம்மையாரது முதல் மூத்த திருப்பதிகக் கடைக்காப்புப் பாடலாகும்.

தொடர்ந்து இரண்டாம் மூத்த திருப்பதிகத்திலும் தம் பெயரைப் பதிவு செய்த அம்மையார், அப்பதிகப் பாடல்களைப் பாடும் அடியவரின் பாவங்கள் அனைத்தும் அழிந்து

போகும் என்றும் அறுதியிடுகின்றார்.

"... ... . காரைக் கால்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே"

(மூத்.2 : பா : 11, 3-4)

என்பது அம்மையார் வாக்கு மூலம்.

மேலும் அம்மையார் தமிழிலக்கிய உலகுக்கு அளித்த அற்புதத் திருவந் தாதியில் கடைக்காப்பாகப் பாடிய வெண்பாப் பாடலில் (பா : 101) "காரைக்கால்பேய் பாடிய அந்தாதி என்னும் இந்தப் பாமாலையைப் பக்தி உணர்வுடன் பாடித் துதிப்பவர் சிவ லோகம் சென்று மாறாத பேரன்புடன் சிவபெருமானைப் போற்றிக் கொண் டிருப்பார்கள்" என்றும் மறைமொழி போல நிறைமொழி கூறுகின்றார்.

"உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்கால் பேய்சொல் – பரவுவார்
ஆராத அன்பினோ(டு) அண்ணலைச் சென்(று)
ஏத்துவார்
பேராத காதல் பிறந்து" (அற். அந்- பா : 101)

இவ்வாறு, அம்மையார் தாம் பாடிய மூத்த திருப்பதிகங்களிலும், அற்புதத் திருவந்தாதியிலும் கடைக் காப்பு உத்தியைக் கடைப்பிடித்தற்கு அழுத்தமான காரணம் இருந்திருக்க வேண்டும்.

அவர் காலத்தில் தமிழகம் களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. களப்பிரர் என்பவர் கருநாடகப் பகுதி யைச் சேர்ந்த ஒரு கூட்டத்தார் என்பர் வரலாற்று ஆய்வாளர். எனினும் அவர்களைப் பற்றிய ஆய்வு இன்ன மும் தொடர்கின்றது.

களப்பிரர் பாலி, பிராகிருத மொழி களை ஆதரித்தவர்கள். அவர்கள் ஆட்சியில் முதலில் பௌத்தமும் பின்பு சமண சமயமும் செல்வாக்குப் பெற்றிருந்தன. மக்களுள் பலர் சம

ணம் சார்ந்தனர். சைவம் ஓரங்கட்டப் பட்டது.

இப்படிப்பட்ட இருண்ட காலச் சூழலில் வாழ்ந்த காரைக்காலம் மையார், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்றும் செந்தமிழால் பெரு மானைப் பாடி வழிபட்டால் சிவகதி பெறலாம் என்றும் மிக அழுத்தமுடன் எல்லார்க்கும் உறுதிப்படுத்தவே கடைக்காப்பைக் கடைப்பிடித் துள்ளார்.

அம்மையார்க்குப் பின்னர்த் தமிழகத்தில் வாழ்ந்த சம்பந்தரும், சுந் தரரும் தமிழே கடைத்தேற்ற வல்லது


ஞானசம்பந்தர்


சுந்தரர்

என்றும் சிவபெருமானே வீடு பேறு அருள வல்லான் என்றும் அம் மையார் காட்டிய நெறியில் நின்று கடைக்காப்பு உத்தியை உலகுக்குக் கடைப்பிடித்துக் காட்டியுள்ளார்கள்.

அம்மையார்க்குப் பிறகு சுந்தர ரினும் சம்பந்தர் பெருமானே, கடைக் காப்பு உத்தியைப் பெரிதும் வலி யுறுத்தி மிகப் பல பதிகங்களில் பாடி யுள்ளார். இக்காரணம் பற்றியே சம்பந்தர் பெருமான் தேவாரத்தைத் திருக்கடைக்காப்பு என்று சிவன டியார்கள் பெருமிதத்துடன் சிறப்பிக் கின்றார்கள்.


கட்டுரை

சூரியன் மேற்கில் உதிக்கும்

கா.மு. சிதம்பரம்

"கால்திசை சுருங்கச் செல்லும்
கடுமையான் கதிரின் செல்வன்
மேல்திசை எழுவான் அல்லன்
விடிந்ததும் அன்று மேரு
மாற்றினன் வடபால் தோன்றும்
என்பது மறைகள் வல்லோர்
சாற்றினர் என்ன துன்பம்
தவிர்ந்தனர் தவத்தின் மிக்கான்"

– கம்பராமாயணம் – மருத்துமலைப் படலம் 56)



இப்பாடலின் பொருள் : "கதிரவன் மேற்றிசையில் தோன்றமாட்டான்; விடியலும் தோன்றாது என்னும் இயல்பை மேருமலை மாற்றியது. மேருவிற்கு வடக்கே உள்ள பகுதியில் கதிரவன் மேற்கில் எழும் என்பது வேதங்களில் வல்லவர்கள் கூறிய கருத்து" என்பதாகும்.

இதன் கருத்தை "உலகில் என்றாவது ஒருநாள், எங்காவது ஓர் இடத்தில் சூரியன் மேற்கில் தோன்றும்" என்று கூறியதாகக் கொள்ளலாம்.

சூரியன் மேற்கில் தோன்றும் என்ற கருத்து இல்பொருள் உவமை அணியா? உயர்வு நவிற்சி அணியா? அதீதக் கற்பனையா? சோதிடமா? அல்லது உண்மையா என்றால் முற்றிலும் உண்மை என்று கூறுகிறது அறிவியல்.

இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பூமி தன்னைத் தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள ஆன நேரம் நான்கு மணி நேரம்தான். பூமியின் சுழற்சி வேகம் குறைந்து, தற்போது இருபத்து நான்கு மணி நேரம் ஆகியுள்ளது.

இவ்வாறே தொடர்ந்தால், ஒரு நாள் பூமியின் சுழற்சி நின்று விடும். அதன்பின் அதுவரை மேற்கிலிருந்து கிழக்காகத் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருந்த பூமி கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றத்

தொடங்கும். அப்போது சூரியன் மேற்குத் திசையில் தோன்றும்.

இத்தகைய நிகழ்வு பூமிக்கு 7,80,000 ஆண்டுகளுக்கு முன் நடந்துள்ளது. வருங்காலத்தில் ஆயிரம் ஆண்டு முதல் பத்தாயிரம் ஆண்டுகளுக்குள் எப்போதாவது இந்நிகழ்வு நடக்கலாம்.

பூமி கிழக்கில் இருந்து மேற்காகச் சுற்றும்போது சூரியன் மேற்கில் உதிக்கும்.

பூமி மட்டும் அல்லாது மற்ற கிரகங்களுக்கும் இந்நிலை ஏற்படும். செவ்வாய் கிரகம் மேற்கிலிருந்து கிழக்காகத் தன்னைத் தானே சுற்றிக்



கொள்வதை 30.07.2003 அன்று நிறுத்திக் கொண்டது.

அதன்பின் அக்கிரகம் கிழக்கில் இருந்து மேற்காகச் சுற்றத் தொடங்கிவிட்டது. தற்போது செவ்வாய் கிரகத்தில் சூரியன் மேற்குத் திசையில் தோன்று கிறது.

இக்கருத்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே குரான் என்னும் இஸ்லாமிய வேத நூலில் கூறப்பட்டுள்ளது. (The sun will rise from the west instead of rising from the east before the day of Judgement)

இச்செய்தியைக் கூறும் கூகுள் இணையதளம் “சூரியன் மேற்கில் தோன்றும் என்ற கருத்தைக் கூறிய ஒரே மதம் இஸ்லாமிய மதம்தான்” என்ற கருத்தையும் பதிவு செய் துள்ளது. (Islam is the only religion that prophesies that the sun will rise from the west).

கம்பராமாயணத்திலும் அதற்கு முற்பட்ட வேதங் களிலும் சூரியன் மேற்கில் உதிக்கும் என்ற கருத்துக் காணப்படுகின்றது என்பதை யும் அந்த இணையதளத்தில் பதிவுசெய்யத் தமிழறிஞர்கள் ஆவன செய்ய வேண்டும்.

●



நால்வர் மகிமை

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரை நால்வர் எனச் சிறப்பித்துக் கூறுவர்.

இந்த நால்வரையும் சிவபெருமான் – பாலை, சூலை, ஓலை, காலை கொடுத்து ஆட்கொண்டதாகக் குறிப்பிடுவர்.

சம்பந்தர் பசியால் அழுதபோது சிவனே பார்வதியோடு வந்து “பாலை” ஊட்டி ஞானம் அளித்தார்.

மனம் போல வாழ்ந்த நாவுக்கரசருக்கு “சூலை” என்னும் வயிற்று வலியைக் கொடுத்து ஆட்கொண்டார்.

முதியவராக வந்த சிவன் சுந்தரரை தன் அடிமை என்று சொல்லி அதற்குரிய சாட்சியாக “ஓலை” (அடிமை சாசனம்) காட்டி ஆட்கொண்டார்.

குருநாதராக வந்த சிவன், மாணிக்கவாசகரின் தலையில் தன் “காலை” (திருவடி) வைத்துத் தீட்சை யளித்தார்.

– சக்தி. விண்மணி, போடிநாயக்கனூர்

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்


சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் – 641 018 போன் : 0422-2233982, 2233983

கட்டுரை



சிலப்பதிகாரம் ஓர் ஒருமைப்பாட்டு காப்பியம்

'எண்டிசையும் புகழ் ஒலிக்கும் சிலம்பைச் சொன்ன இளங்கோவின் திருநாமம் என்றும் வாழும்' என்றார் நாமக்கல் கவிஞர். இச்சிலம்பை இசைத்த இளங்கோ அடிகள் ஒரு சமணத் துறவியென் றும், அவர் இயற்றிய காப்பியம் ஒரு சமணக் காப்பியம் என்றும் கூறுவார் உண்டு.



சமணமும், பௌத்தமும் தமிழகத் தில் காலூன்றிச் செல்வாக்குப் பெற் றிருந்த காலத்தில் இயற்றப்பட்டது இக்காப் பியம். சமண – பௌத்தப் பூசல்களும், சைவ – வைணவப் போராட்டங்களும் நிலவிய பக்தி இயக்கக் காலத்தில் இந்நூலைச் சமணரல்லாத பிற சமயத்தார் கற்பது குறைந்தது என்றும், சமணர் மட்டுமே கற்கும் நூலாக நின்றது என்றும் டாக்டர் மு.வ. குறிப்பிடுகிறார்.

சிலப்பதிகாரத் துணைமை மாந்தர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள். மேலும் இந்நூலில் சமண சமயக் கொள்கைகள் ஆங்காங்கே பேசப் படுகின்றன. எனினும் பௌத்த சமயத்தையோ, சைவ, வைணவக் கடவுள ரையோ பழித்துரைக்காமல், நடுவுநிலைமையில் நின்று காப்பியம் படைத்துள்ள இளங் கோவடிகள் போற்றுதலுக் குரியவர்.



மேலும், அக்காலப் பெருநகரங்களிலிருந்த கோயில்கள் பற்றியும் குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய நிலங்களில் வாழ்ந்த மக்களின் வழிபாடுகள் பற்றியும் விரிவாகக் குறிப்பிடுவதன் மூலம் இளங்கோவடி கள் படைத்துள்ள சிலப்பதிகாரம் சமயப் பொதுமையை வலியுறுத்தும் ஓர் ஒருமைப்பாட்டுக் காப்பியம் என லாம்.

பூம்புகார் நகரில் சிவன், முருகன், பலதேவன், திருமால் ஆகிய கடவுளர்க்குக் கோயில்கள் இருந்தமையை,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்"

(இந்திர விழவு : 169 – 173)

என்று கூறுவதால் அறியலாம்.

புகாரைப் போன்று மதுரையிலும்,

"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் கோயிலும்
மேழிவலன் உயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்"

(ஊர்காண் : 7 – 10)

இருந்தமையை அறிய முடிகின்றது.

முனைவர் ப. சுப்பிரமணியன்

திருவனந்தபுரத்தில் திருமால் பள்ளி கொண்ட கோலத்தொடு கூடிய கோயில் இருந்தமையை, “ஆடக மாடத்து அறி துயில் அமர்ந்தோன்” (கால்கோள் : 61)

என்பதால் அறியலாம்.

சிவபெருமான் பற்றிய செய்திகள் சிலம்பில் இடம் பெற்றுள்ளன. பிறையைக் கண்ணியாகத் தலையில் சூடியும், சூலம் ஏந்தியும் விளங்குபவன் சிவன் என்பதை,

“பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலம்”

(காடுகாண் : 72 – 73)

என்பார். சிவன் ஆடிய ஆடல் கொடுகொட்டி என்பதும், அவன் ‘உமையொரு பாகத்து ஒருவனாக’ விளங்குகிறான் என்பதும் நூல் நுவலும் செய்திகளாம்.

முருகன் குறிஞ்சி நிலத் தெய்வம். குறவர்கள் முருகனை விழா எடுத்து வழிபட்டனர் என்பதை வஞ்சிக்காண்டமும், குன்றக்குரவையும் விரித்துரைக்கின்றன. முருகன் சரவணப் பொய்கையில் தாமரைப் பள்ளியில் கார்த்திகைப் பெண்கள் அறுவரால் பால் கொடுத்து வளர்க்கப்பட்டான் என்பதை,

“சரவணப் பூம்பள்ளி அறைத்தாய்மர் அறுவர்
திருமுலைப் பாலுண்டான்”

(குன்றக்குரவை : 10)

என்று கூறுவதால் அறியலாம்.

முருகன் ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் உடையவன். மயில் வாகனன். வேலாயுதம் ஏந்தியவன். இந்திரன் தன்னை வணங்கும்படி அவன் துயர் தீரத் தன் வேற்படையால் அசுரனை அழித்தான். இவற்றை,

“அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தான் உடையான் ஏந்தியவேல் அன்றே
பிணிமுகம் மேல் கொண்டுஅவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பின் கோன்ஏத்த மாறட்ட வெள்வேலே”



(குன்றக்குரவை – 9)

என்று பாடிப் பரவுகிறார்.

கடலுள் புகுந்து மறைந்த சூரனைக் கொன்ற செய்தியை,

“பார்இடும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மாதடிந்த சுடர் இனைய வெள்வேலே”

(குன்றக் குரவை – 8)

என்று குறிப்பிட்டார்.

குன்றில் வாழும் குறவர்கள் வள்ளியோடு உடனுறை முருகனை நேரடியாகப் போற்றித் தொழுதார்கள் என்பதை,

“குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்”

(குன்றக்குரவை – 18)

என்பதால் அறியலாம். திருச்செந்தூர், திருச்செங்கோடு, வெண்குன்றம், ஏரகம் ஆகியன முருகன் உறையும் தலங்கள் என்று சிலம்பு கூறும்.

முல்லை நிலத் தெய்வமாகிய திருமால் பற்றியும், திருமால் எடுத்த அவதாரங்கள் பற்றியும் ஆய்ச்சியர் குரவை வழி அறிய முடிகின்றது. வாமனன், இராமன், கண்ணன், பலராமன் ஆகிய அவதாரங்கள் பற்றிய செய்திகள் சிலம்பில் இடம் பெறுகின்றன. பாற்கடல் கடையத் திருமால் உதவியதை,

“வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே” (ஆய்ச். –32)

என்பார். திருமால் வாமன அவதாரம் எடுத்ததையும், மாவலியிடம் மூவடி மண் கேட்டதையும், இரண்டடியால் மூவுலகையும் அளந்ததையும் சிலம்பு குறிப்பிடுகிறது.

“திரண்டமரர் தொழுதேத்த திருமால்நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே”

(ஆய்ச். 34)

என்பது போற்றி உரை.

வாமனன் திரிவிக்கிரமனாகி மூவுலகும் ஈரடியால் அளந்ததையும், இராமன் வனவாசம் சென்று இலங்கையை அழித்ததையும், கண்ணன்

பாண்டவர்க்காகத் தூது சென்றதையும் தேனொழு கும் தீந்தமிழில் ஆழ்வார்களையும் விஞ்சிவிடும் வகையில் பாடித் துதிக்கிறார்.

வாமன – இராம அவதாரம்

“மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகையருளித்
தாவிய சேவடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே”

(ஆய்ச். 35)

கண்ணன் தூது சென்றமை

“மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்ற
படர்ந்தாரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா என்னா நாவென்ன நாவே”

(ஆய்ச். 37)

‘திருவரங்கத்தில்’ ஆயிரம் விரித்தெழு தலை யுடை அருள்திறல் பாயற் பள்ளியில் பள்ளி கொண்டுள்ள திருமாலின் கிடந்த கோலத்தையும், ‘வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும் ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை ... ... செங் கண் நெடியோன் நின்ற வண்ணத்தை யும்’ மாங்காட்டு மறையோன் கோவலன், கண்ணகி, கவுந்தி ஆகியோரிடம் வருணிக்கிறான். இந்த வருணனை, அரங்கநாதனையும், வேங்கடவாணனையும் படிப்பவர் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துவது போன்றே உள்ளது எனலாம்.



புகார் நகரத்தில் இந்திரனுக்குத் தனிக் கோயில் இருந்தது. இந்திரன் படையாகிய வச்சிராயுதத்திற்கும், அவன் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானைக்கும் கற்பகத் தருவிற்கும் கோயில்கள் தனித்தனியே இருந்தன. வச்சிரக் கோட்டத்தி லிருந்த முரசை யானைமீது ஏற்றி ஐராவதம் நிற் கும் கோட்டத்திற்குக் கொண்டு வந்தனர். இந்திர விழாவின் தொடக்கத்தையும் அறிவித்தனர். கற்பகத் தருக் கோட்டத்திலிருந்த கொடியை வானிலே பறக்கும்படி ஏற்றினர் என்பதை இந்திர விழவூரெடுத்த காதையின் மூலம் அறிய முடிகின்றது.

ஐயை பாலை நிலத் தெய்வம். வேட்டுவர்கள் இத்தெய்வத்தைக் கொண்டாடுவார்கள். பாய் கலைப் பாவை கொற்றவை. அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, சங்கரி, அந்தரி முதலிய பல பெயர்களால் இத்தெய்வம் அழைக்கப்படுகிறது. வேட்டுவர்களும், அக்குலப் பெண்களும் இத்தெய் வத்திற்குப் பலியிட்டு வாழ்த்திப் பாடுவதை வேட்டுவவரி மூலம் அறியலாம்.

கடல் தெய்வமாகிய வருணனைப் பற்றிய குறிப்பு, கானல் வரியில் இடம் பெற்றாலும், அத் தெய்வ வழிபாடு பற்றிய விரிவான செய்திகள் சிலம்பில் இடம்பெறவில்லை.

சமண சமயம் சார்ந்த கோவலனிடம் பிற சமய வெறுப்புணர்ச்சி இல்லை. அவன் வைகறைப் பொழுதில் புகாரை விட்டு மதுரைக்குப் புறப்படு கிறான். முதலில் வழியில் அமைந்துள்ள திருமால் கோயிலை வலம் வருகிறான் என்பதை,

“அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலம் செலாக் கழிந்து”

(நாடுகாண் : 9 – 10)

என்பார் இளங்கோ.

அதன் பின்னர் புத்தர்பிரான் அறிவுரைகளை அந்த சாரிகள் வந்திருந்து சாற்றும் இந்திர விகாரங்கள் ஏழையும் வணங்கிப் போனான் என்பதை,

“... ... அறவோன் திருமொழி
அந்த சாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர விகாரம் ஏழுடன் போகி”

(நாடுகாண் : 12 – 14)


என்றார்.

அதன் பின்னர் நீராட்டு விழாக் களின் போதும், தேர் விழாக்





டாக்டர் மு.வ.



நாமக்கல் கவிஞர்

களின் போதும் அருக சமயத்தை உபதேசிக்கும் சாரணர்கள் வருவார்கள் என்று கருதி, அவர்களுக்காகச் சாவக நோன்பிகளால் இடப்பட்ட சிலாதலத்தையும் வணங்கி வலங்கொண்டு கோவலன் புறப்பட்டான் என்பதை,

"நீர் அணி விழவினும் நெடுந்தேர் விழவினும்
சாரணர் வரூஉம் தகுதி உண்டாம் என
உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலங் கொளிச் சிலாதலம் தொழுது வலங்
கொண்டு" (நாடுகாண் : 22 - 25)

என்பார் இளங்கோவடிகள்.

சேரன் செங்குட்டுவன் சிவபக்தன். அவன் சிவபெருமான் அருளுடன் பிறந்தவன் என்பதை,

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ"
(கால்கோள் : 98 - 99)

"ஆன்ஏறு உயர்த்தோன் அருளினில் விளங்க
மாநிலம் விளக்கிய மன்னவன்"
(வரந்தரு : 141 - 142)

என்று வஞ்சிக்காண்டம் குறிப்பிடுகிறது. செங்குட்டுவன் வடபுலப் படையெடுப்பிற்குப் புறப்பட்ட போது, சிவபெருமானை வணங்கிப் புறப்பட்டான் என்பதை,

"நிலவுக் கதிர் நீள் இருஞ் சென்னி
உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி
வலங்கொண்டு" (கால்கோள் : 54 - 57)

என்று சிலம்பு கூறும்.

சிவபக்தனான செங்குட்டுவன் வடபுலம் புறப்படும் வேளையில், 'மன்னவன் வெற்றி பெறுக' என்று வாழ்த்திக் கொண்டு சிலர் வந்தனர். அவர்கள் திருவனந்தபுரத்தில் அரவணையில் பள்ளி கொண்டுள்ள திருமாலின் பிரசாதத்தைக் கொண்டு வந்து வணக்கத்துடன் மன்னனிடம் அளித்தனர். அதை வாங்கிக் கொண்ட மன்னன், சிவபெருமான் சேவடி மலரை முடியிலே சூட்டியிருந்ததால், அத்திருமால் பிரசாதத்தைத் தோளிலே தாங்கிச் சென்றான் என்பார் இளங்கோ.

சிவபக்தனான செங்குட்டுவன் திருமால் பிரசாதத்தையும் பெற்றுக் கொள்ளும் பண்பட்ட மனத்தைப் பெற்றிருந்தான் என்று குறிப்பிடுவதன் மூலம் சிலப்பதிகாரக் காலத்தில் குவலயம் ஆளும் மன்னன் முதல், குடிமக்கள் ஈறாக அனைவரிடமும் 'எம்மதமும் சம்மதம்' என்ற மனப்பான்மை மேலோங்கியிருந்ததை அறிய முடிகின்றது.

சிலப்பதிகார காலத்தில் பல்வேறு கடவுளரை வழிபடும் வழிபாடு இருந்தது. சமயங்கள் இருந்தன. ஆனால், மக்களிடம் பிற சமய வெறுப்போ, பிற கடவுளரை இழிவுபடுத்தும் தன்மையோ இல்லை என்பதை இளங்கோ காட்ட முயல்கிறார். சிவபக்தனான செங்குட்டுவன் பௌத்தம் சார்ந்த சாத்தனாரிடம் நட்புக் கொண்டிருந்தான். சமணம் சார்ந்த கண்ணகிக்குக் கோயில் எடுத்து வழிபட்டான்.

கோவலன் காதலி மாதவி, கோவலன் இறப்பிற்குப் பின் பௌத்தத் துறவியானாள். தன்மகள் மணிமேகலையையும் பௌத்தத் துறவியாக்கினாள். கோவலன் தந்தை மாசாத்துவான் பௌத்தத் துறவியாவதும், கண்ணகியின் தந்தை மாநாய்கன் ஆசீவகம் சார்ந்து துறவு மேற்கொள்வதும் காப்பியம் நுவலும் செய்திகள்.

சிலப்பதிகாரத்தின் இறுதிக் காதையாகிய வரந்தரு காதையில் இளங்கோவடிகள் நேரில் தோன்றி அறவுரைகள் வழங்குகிறார். அவ்வறவுரைகளுள் பல பொதுவானவை. எனினும், 'ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்' முதலிய சில அறவுரைகள் சமணம் வலியுறுத்துபவை. இதனால் இளங்கோவடிகளைச் சமணத் துறவி எனக் கூறுவார் கூற்று ஏற்கத் தக்கதே.

எனினும் குறிஞ்சி, முல்லை, பாலை ஆகிய நிலங்களில் வாழும் மக்கள் தங்கள் கடவுளரைப் பாடிப் பரவும்போது, இளங்கோவடிகள் அம்மக்களுள் தாமும் ஒருவராக மாறிவிடுகின்றார் என்றே சொல்லலாம். சிலப்பதிகாரத்தில் சமய வேற்றுமை இல்லை. பிற கடவுளரையோ, சமயங்களையோ இழித்துரைக்கும் போக்கு இல்லை. இதனால், சிலப்பதிகாரம் சமய வேற்றுமை பாராட்டாத ஓர் ஒருமைப்பாட்டுக் காப்பியம் என்று உறுதிபடக் கூறலாம். ●





செ. சரத்

உழவர்க்கும் வந்தனை செய்வோம்!

யாருக்கு நீங்கள் முதல் மரியாதை செய்வீர்கள்? என்று கம்பனிடம் கேட்டிருந்தால், நிச்சியமாக உழவர் பெருமக்கள் என்றுதான் பதில் கொடுத்திருப்பார். ஏனென்றால் நெற்கதிர் போர் வைத்த களத்தில் முத்தமிழ் அறிந்த கவிபாடும் திறன் பெற்றோரும், இசைக் கலையில் திறன் உடையவர்களும், அன்புகொண்ட பதினெட்டுக் குடிகளைச் சேர்ந்த மக்களும், நாடாளும் மன்னர்களும் என அனைவரும் உழவர்கள் கொடுக்கும் பொருளைப் பெறுவதற்கு அவர்களின் முன்னே வந்து நிற்பார்கள் என்று 'ஏரெழுபது' வில் பாடியுள்ளார்.

அப்படி கம்பர் தொட்டு முதல் மரியாதை பெற்ற சமூகம் இன்று சீரோடும் சிறப்போடும் இன்றி வேதனையோடும், வெறுப்போடும் வாழ்ந்து வருகின்றனர். ஏன் அவர்களிடம் போதிய உழைப்பு இல்லையா, திறன் இல்லையா, நேர்த்திதான் இல்லையா? இவையெல்லாம் உண்டு. ஆனால் மதிப்பு இல்லை, வருமானம் இல்லை, விலையில்லை. இன்னும் சொல்லப் போனால் உயிர் நாடிகூட சில சமயத்தில் ஊசலாடி விடுவதுண்டு.

ஒரு சராசரி மனிதனிடம் நிச்சயமாக இந்தக் கேள்வி எழுந்திருக்கும். ஏன் கடன் தள்ளுபடி என்பது கொழுத்துப்போன தொழிலதிபர்களுக்கு மட்டும்தானா? ஒரு தனிமனிதனுக்கு இல்லையா என்று.

ரிசர்வ் வங்கியின் கணக்குப்படி ஒரு தனி நபரோ அல்லது நிறுவனமோ 90 நாட்களில் கடனைச் செலுத்தாவிட்டால் அது வாராக்கடன் ஆகும். தற்பொழுது வாராக்கடனின் அளவு, ஒரு சராசரி மனிதனின் இரத்த அழுத்தத்தைவிட அதிகரித்துச் சென்று கொண்டிருக்கிறது.

இதற்கான விடையும், காரணமும் இந்தியச் சந்தையில் கடையை விரித்து, முடிந்த வரையில் வங்கியிடம் கடன் வாங்கிச் சுருட்டி ஏப்பம் விட்டு, பின் அரசாங்கத்திற்குத் தெரிந்தோ, தெரியாமலோ விமானத்தில் வெளிநாடு போய் அங்கு ஆடிப் பாடும் தொழிலதிபர்களுக்கும், தலைமறைவாய் உள்ள அவர்களைக் கண்டுபிடித்து விரைவில் நாடு கடத்துவோம் எனக் கூறும் அப்பாவி அரசாங்கத்திற்கும் மட்டுமே தெரியும்.

இதற்கிடையில், வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி, வெயிலில் மாடு மாதிரி உழைத்துச் சிறுகச் சிறுக வங்கியில் கடன் வாங்கும் கூலித் தொழிலாளியும், விவசாயியும் கடனைச் செலுத்தாவிட்டால் மிஞ்சுவது ஜப்தி, மித மிஞ்சிய (அவ) மரியாதை என அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால், விவசாயிகள் என்றுமே தாங்கள் வாங்கிய கடனை எப்படியாவது செலுத்திவிட வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர்கள் என்று ஆய்வுக் கூறுகள் கூறுகின்றன.

அதேபோல், ஒரு விவசாயி தன் தோட்டத்தில் கூலிவேலை செய்யும் வேலையாட்களுக்குத் தன்னிடம் பணம் இல்லையென்றாலும் எப்படியாவது, யாரிடமாவது இருந்து கடன்பெற்றுக் கூலிப் பணத்தைச் சரியான நேரத்தில் கொடுத்து விடுவார். காரணம், உழைப்பாளிக்குத்தான் உழைப்பாளியின் அருமை தெரியும்.

இதனினும் உழவர்க்கும், வியாபாரிக்கும் உள்ள வித்தியாசத்தை ஓர் ஓய்வுபெற்ற நூலகர் அழகாக இப்படிக் கூறினார் : 'முள் தராசில் சரியான அளவைவிட ஒரு கத்திரிக்காய் கூடுதலாக ஒருவர் போடுகிறார் என்றால் அவர் விவசாயி. அதுவே அளந்து அளந்து கூடுதலாக வந்த ஒரு கத்திரிக்காயைத் தராசில் இருந்து எடுத்து விடுகிறார் என்றால் அவர் வியாபாரி. ஏனென்றால், உழுதவன் என்றுமே கணக்குப் பார்க்க மாட்டான். அவனின் நோக்கமே தான் விளைவித்ததை விற்று மக்கள் பசியாற வேண்டும் என்பதே.'

பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் 26 நாடுகளில் (ஓ.இ.சி.டி.) விவசாயம் சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வறிக்கை ஒன்றை 2017ஆம் ஆண்டு வெளியிட்டது. அதன்படி, இந்தியா உள்பட மூன்று நாடுகளில் விவசாயம் லாபகரமானதாக இல்லை. அதிலும் இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளாகவே விவசாயம் நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உணவுப் பொருள்களின் விலையைச் சராசரிக்குள் வைத்திருப்பதே முக்கிய காரணம் என்று அந்த ஆய்வறிக்கைக் கூறுகிறது.

மேலும் விவசாய வருமானம் 2000–ஆம் ஆண்டிலிருந்து 2016–ஆம் ஆண்டு வரை சராசரியாக 14 சதவீத அளவுக்குச் சரிவைச் சந்தித்தது என்றும் 2014 மற்றும் 2016–ஆம் ஆண்டில் இது ஆண்டுக்கு 6 சதவீதச் சரிவைச் சந்தித்தது என்றும் கூறுகிறது.


அதிலும் 2000–ஆம் ஆண்டிலிருந்து 2016–ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்திய விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளுக்கான சர்வதேசச் சந்தை விலையில் மிகக் குறைவான அளவையே பெற்றுள்ளனர். அதற்கு ஏற்றுமதிக்குத் தடை விதித்தது, சர்வதேச அளவில் உணவுப் பொருள்கள் விலை குறைந்து வரும்போது அதைப் பரிசீலிக்காதது, முக்கியமாக விவசாயத்தில் முதலீடுகளை அதிகரிக்காமல், அரசு மானியத்தையே தொடர்ந்து வழங்கி வந்தது முதலியவை காரணங்களாகக் கருதப்படுகின்றன.

இயல்பாகவே நுகர்வோர் உணவுப் பொருளுக்குத் தரும் விலைக்கும் விவசாயி அந்தப் பொருளை விளைவித்ததற்குப் பெறும் தொகைக்கும் இடையே பெரும் வித்தியாசம் இருப்பதை யாராலும் மறுத்துவிட முடியாது. இதற்கிடையில் இடைத்தரகர்கள்தான் அதிகம் லாபம் பெறுகிறார்கள் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதற்கான உதாரணம் 2017–ஆம் ஆண்டில் காரிப் பருவத்தில் கோதுமை, சமையல் எண்ணெய் மற்றும் சோயா முதலிய பயிர்களின் இறக்குமதியை அரசாங்கம் நிறுத்தியது. இதில் சோயாப் பயிர் என்பது காரிப் பருவத்தில் (செப்டம்பர்/அக்டோபர்) அறுவடை செய்யப்படும். அறுவடை முடிந்தவுடன் பெரும்பாலும் விற்பனைக்கு அக்டோபர் அல்லது நவம்பர் மாத இறுதிக்குள் சந்தைக்கு வந்துவிடும்.

ஆகஸ்ட் மாதத்தில் சோயா எண்ணெய்யின் இறக்குமதி வரி விகிதம் 12.5 சதவீதத்தில்

இனிப்புக்கு இலுப்பைப் பூ



இலுப்பைப் பூ மலர்வதற்குப் பத்து வருடங்கள் ஆகும். ஒரு மரத்தில் சுமார் 100 கிலோ பூ கிடைக்கும். இது ரசமுள்ளதாகவும், இனிப்பாகவும் இருக்கும். இதில் 60 சதவீதம் சர்க்கரை உள்ளது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்று கூறுவது இதனால்தான்.

– *ம.செ.மயில்,* திருநெல்வேலி

இருந்து 17.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. ஆனால் அது உள்நாட்டு விலைக்கும் சர்வதேச விலைக்கும் வேறுபட்ட காரணத்தால் மீண்டும் 17.5 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக நவம்பர் மாத இறுதியில் அதிகரிக்கப்பட்டது. ஆனால் அப்போது பெரும்பாலான விவசாயிகள் சோயாவை விற்றுவிட்ட காரணத்தால், வந்த லாபம் அனைத்தும் சோயாவைக் கொள்முதல் செய்த இடைத்தரகர்களுக்கும், வியாபாரிகளுக்கும் சென்று சேர்ந்தது.



அதனினும் ஒருசில இடைத்தரகர்கள் ஒரு படி மேலே சென்று உணவு பொருள்களைப் பதுக்கி வைத்துச் செயற்கையானத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதிலும் ஒரு லாபம் பார்க்கின்றனர்.

இவை எல்லாம் ஒரு பக்கம் என்றால், மறுபக்கம் இயற்கையின் பாதிப்பும் விவசாயிகளின் கழுத்தை அவ்வப்போது நெரித்து விடுகிறது. பாசனம் இன்றித் தவிக்கும் நெல் மணிகள், காற்றுக்கு அச்சப்படும் வாழைகள், மழைக்கு ஏங்கும் பயிர்கள், புயலுக்குத் தப்ப ஆசைப்படும் தென்னைகள், வெள்ளத்தில் உடைந்துவிடாது தப்பிக்க முயலும் பாசன ஏரிகள் என்று இவற்றைக் கடந்து தப்பித்து ஒரு காசு பார்த்தால்தான் அடுத்த போகம். இல்லையேல் அவர்கள் வாங்கிய கடன் வட்டி போட்டுக் குட்டி போட ஆரம்பித்து விடும்.



இந்தியாவில் உள்ள 62 சதவீத விவசாயிகள் 0.80 ஹெக்டேருக்கும் குறைவான நிலத்திலேயே சாகுபடி செய்து வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்தாலும், வேறு ஒரு தொழிலுக்கு இவர்கள் மாறுவதில்லை. காரணம் அவர்களின் உயிர்நாடி ஏர்நாடிதான்.

அப்படிப்பட்ட அந்த மன்னவர்களைக் காக்க சில வழிமுறைகள்:

முதலில் வேளாண் விலை பொருள்களின் விலையை அனைத்து விவசாயிகளுக்கும் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் தெரியப்படுத்த வேண்டும்.

செயலிழந்து வரும் உழவர் சந்தைகளுக்குப் புத்துணர்ச்சி அளிக்க வேண்டும்.

முடிந்தவரையில் விவசாயிகளை மாற்றுப் பயிர் மற்றும் சுழற்சி முறையில் பயிர் சாகுபடி செய்ய அறிவுறுத்த வேண்டும். ஏனென்றால் இன்றும் சிறுதானியம் மற்றும் மூலிகைப் பயிர்களின் தேவை சந்தையில் அதிகம் தென்படுகிறது. இதற்கான சந்தைத் தொடர்பை அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும்.

மரபணு மாற்றுப்பயிர் உகந்ததா என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்தி, அதற்கான ஒரு வரைவை உண்டாக்க வேண்டும். அரசாங்கத்தின் கூற்றுப்படி மரபணு மாற்றுப்பயிர் உண்ணுவதற்கு உகந்தது இல்லையென்றாலும் மரபணு மாற்றப்பட்ட பருத்தியில்தான் நாம் வனஸ்பதியை உற்பத்தி செய்து உண்டு வருகிறோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே வேளையில், விதையின் மீது சொந்தம் கொண்டாடி குஜராத் விவசாயிகளின் மீது நஷ்ட வழக்குத் தொடர்ந்த தனியார் நிறுவனத்தை ஒருபோதும் மறந்து விடவும் முடியாது.

மத்திய அரசாங்கத்தின் கௌரவ உதவித் தொகையை அதிகரிக்க மாநில அரசாங்கமும் இத்திட்டத்தில் இணைய வேண்டும்.

எனவே, இவையெல்லாம் தந்து உழைக்கும் கரங்களை வளப்படுத்தி உழவர்க்கும் வந்தனை செய்வோம்! ●

இம்மாத ராசி பலன்

**"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.12.2019 அன்று கோள்கள் நிலை

			ராகு
	05.12.2019 புதன்–விருச். 15.12.2019 சுக். – மகரம் 16.12.2019 சூரி. – தனுசு 25.12.2019 செவ்.–விருச். 25.12.2019 புதன் – தனுசு			
சந்திரன்			
சுக்கிரன் சனி குரு கேது	சூரியன்	புதன் செவ்வாய்	



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் 15–ஆம் தேதி வரை எதிர்பாராத செலவுகள் ஏற்படும். எதிர்பாராத சம்பவங்களும் சிலருக்கு ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், காரியத் தடைகள் ஏற்படக் கூடும். தர்ம காரியங்கள், ஆன்மிகப் பணிகளில் ஈடுபடலாம். இம்மாதம் 9–ஆம் வீட்டில் குரு, கேது, சனி, சூரியன் முதலிய கிரகங்களின் சேர்க்கையால், ஒரு சிலர் நீண்ட தூரப் புனிதப் பயணம் செல்லக்கூடும். தொலைதூரங்களிலிருந்து நற்செய்தி கிட்டலாம். மகான்கள் ஆசியும் கிட்ட வாய்ப்புண்டு.

செவ்வாய் இம்மாதம் பெரும்பாலான நாட்கள் 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், கணவன் – மனைவிக்கிடையில் சண்டை, சச்சரவு, கருத்து வேற்றுமை ஏற்படலாம், கவனமாக இருக்க வேண்டும். ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சகோதர வர்க்கத்தார் ஏதேனும் சிக்கலில் மாட்டிக்கொள்ள வாய்ப்புண்டு. குறுகிய பயண வாய்ப்புகள் சிலருக்கு ஏற்படும். திருமணக் காரியங்கள் 2020 அக்டோபர் வரை எப்பொழுது வேண்டுமானாலும் கைகூட வாய்ப்புண்டு. புது முயற்சிகள் இம்மாதம் வேண்டாம். புதன் 5–ஆம் தேதி முதல் 8–இல் சஞ்சரிப்பதால், உறவினரால் நன்மை உண்டு.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியன் 7, 8–ஆமிடங்களில் சஞ்சரிப்பதால், எதிர்பாராத செலவு, இடப் பெயர்ச்சி, உடலில் உபாதைகள் ஏற்படலாம். ஒரு சிலர் எதிர்பாராத உயில் சாசனச் சொத்து, காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் பயன் அடைவர். ராகு, செவ்வாய் முதலிய பாவ கிரகங்களின் திசை, புத்திகள் நடை முறையில் இருப்பின் தன விரயம் ஏற்படலாம். திருட்டு அல்லது தீயவர்கள் மூலம் பாதிப்பு வரலாம். மிகவும் வயதானவர்கள் உடல் ஆரோக் கியத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

செவ்வாய் 6–இல் சஞ்சரிப்பதால், வழக்கு விவகாரங்களில் சிலருக்குச் சாதகமான போக்குக் காணப்படும். காரமான உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. குறிப்பாக அசைவ உணவைத் தவிர்க்கலாம். புதன் 25–ஆம் தேதி வரை 7–இல் சஞ்சரிப்பதால், உறவினர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். ராகு 2–இல் சஞ்சரிப்பதால், திடீர் பண வரவு கிட்டலாம். அதேபோல் திடீர் செலவுகளும் ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில் உங்களின் பேச்சே உங்களுக்கு வினையாக முடிய

வாய்ப்புண்டு. நீண்ட பயணங்களைத் தவிர்க்க வேண்டும். திருமணக் காரியங்கள் நடந்தேற வாய்ப்புக் குறைவுதான்.

மிதுனம்



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் தொழில், உத்தியோக வழிகளில் நன்மையை ஏற்படுத்தக் கூடும். பொருளாதார விஷயங்களில் அனுகூலம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் எதிர்ப்புகள் ஏற்படலாம். 25–ஆம் தேதி வரை செவ்வாய் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், புத்திர வர்க்கத்தாரால் பிரச்சனைகள் ஏற்படும். நிலையான முடிவெடுக்க இயலாது. அடிக்கடி உங்களின் முடிவுகளை மாற்றிக் கொள்வீர்கள். புதன் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், குடும்பத்தில் விரோதம் ஏற்படலாம். உறவினர்கள் மூலம் ஒரு சில சங்கடங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

குரு 7–ஆம் வீட்டில் சஞ்சரிக்கத் தொடங்கி இருப்பதால், கல்யாண காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும். சனி, கேது 7–இல் சஞ்சரிப்பதால், சில புதுமையான, இனிய அனுபவங்களும் ஏற்படும். ராகு, ராசி மீது சஞ்சரிப்பதால் எதிலும் சுகாதாரம் வேண்டும். கிருமிகளின் தாக்கத்தால் பாதிப்பு வரும். வயிற்று வலி, உபாதை முதலியன பெண்களுக்கு ஏற்படும். மாற்றுச் சாதி, மதக்காரர்கள், வெளிதேசத்தவர்கள் விஷயங்களில் இன்னும் சில மாதங்கள் கவனமாக இருக்க வேண்டும். புதிய முயற்சிகளில் மாதத்தின் முற்பாதியில் இறங்கலாம். நன்மை ஏற்படும்.

கடகம்



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் முயற்சிகளில் தடைகளை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு. அவ்வப்போது புத்திக் குழப்பமும் ஏற்பட வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் 6–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் தைரியம், தன்னம் பிக்கை கூடும். இருப்பினும் உடல் உபத்திரவங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. குரு 6–இல் சஞ்சரிப்பதால் உயிரியல், பௌதீகம், வானியல் ஆய்வுகளில் தொடர்புடையவர்களுக்கு நன்மை உண்டாகும். புதன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், தொழில் துறையில் மன நிறைவான பலன்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

செவ்வாய் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உங்களது நடவடிக்கைகளில் நாணயம், நம்பிக்கை அவசியம். அகௌரவமான சூழ்நிலைகளுக்கு ஆளாக நேரிடும் என்பதால், நடத்தையிலும் கவனம் வேண்டும். மேலும், பெரியோர் பேச்சைக் கேட்டு நடப்பது நல்லது. 12–இல் ராகு சஞ்சரிப்பதால் குல தெய்வம் உங்களது முயற்சிகளுக்கு உறுதுணையாக விளங்கும். மாதத்தின் பிற்பாதியில் புதிய முயற்சிகளில் இறங்கலாம். உறவினர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும். வீண் விரோதம் ஏற்படும் வாய்ப்புண்டு. டிசம்பர் 24, 25, 26–ஆம் தேதிகளில் கவனம் தேவை.

சிம்மம்



சிம்ம ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் கிரகங்கள் சாதகமாகச் சஞ்சரிப்பதால், பற்பல நன்மைகளை அடைய வாய்ப்புண்டு. மாதத்தின் முற்பாதியில் சூரியன் வீண் அலைச்சல்களை ஏற்படுத்தினாலும், அலைச்சலுக்கு ஏற்ற நன்மையான பலன்களையும் ஏற்படுத்தும். சூரியன், புதன் இணைவு காரணமாக எழுத்து, இலக்கியம், ஒப்பந்த காலப் பணிகள், அரசாங்கக் காரிய ஈடுபாடுகளில் நன்மை அடையலாம். செவ்வாய் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ரத்த சம்பந்தப்பட்ட உறவினர்கள் நன்மை அடைவர். குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும்.

சனி, கேது, சூரியன் முதலிய ஆன்மிக கிரகங்கள் 5–ஆம் வீட்டில் குருவுடன் மாதத்தின் பிற்பாதியில் சஞ்சரிப்பதால், மனரீதியான உற்சாகம் கூடும். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளால் மேன்மை உண்டாகும். ராகு 11–இல் சஞ்சரிப்பதால், நூதனமானவர்களால் உதவிகள் கிடைக்கும். பற்பல துன்பங்களையும், தோஷங்களையும் ராகு நிவர்த்தி செய்யும். திருமணக் காரியங்களில் ஈடுபடலாம். 2020 அக்டோபர் வரை எப்பொழுது வேண்டுமானாலும் திருமணம் நடைபெறலாம். புத்திரப்பேறு அற்றவர்களுக்குப் புத்திரப் பேறு உண்டாகும் வாய்ப்பும் ஏற்படும். குல தெய்வ வழிபாடு நன்று.

கன்னி ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளில் ஏற்றத்தைக் கொடுக்கும். மன உறுதி ஏற்படும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். மாதத்தின் பிற்பாதியில் குடும்பத்தில் சிற்சில


கன்னி



பிரச்சனைகள் ஏற்படலாம். குழப்பம் ஏற்படலாம். வீடு, சுய தொழில் சம்பந்தப்பட்டுச் சில மாற்றங்களைச் செய்ய வாய்ப் புண்டு. இரண்டில் செவ்வாய் சஞ்சரிப்பதால், லஞ்சம் கொடுப் பதாலோ, வாங்குவதாலோ சிலர் துன்பம் அடைவர். சிலர் தண்டச் செலவை அடைவர்.

ராகு 10–இல் சஞ்சரிப்பதால் மாறுதல்கள் குறித்துச் சிலர் சிந்திப்பர். புதிய குயுக்தி தந்திர முறைகளைத் தொழில் துறையில் கையாள் வதற்குச் சிலர் முயற்சி செய்வர். ஆனால், நினைத்தபடி எதுவும் நடைபெற வாய்ப்பில்லை. பெற்றோர் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டும். 24, 25, 26 தேதிகளில் கவனம் வேண் டும். நீங்களும் போக்குவரத்துகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். திருமணக் காரியங் கள் நிறைவேறுவது கடினம். ஜனன ஜாதகத்தில் தனுசு ராசியில் சுக்கிரன் இருப்பவர்களுக்குக் கல்யாணம் கைகூடும். புதிய முயற்சிகளை மாதத் தின் முற்பாதியில் தொடங்க நன்மை ஏற்படும்.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரி யன் தன லாபத்தையும், நண்பர் கள் உதவியையும், பெரியோர் கள் மூலமான நன்மைகளையும் கொடுக்கும் வாய்ப்புண்டு. கைவிட்டுப்போன பொருள் ஒரு சிலருக்குக் கிடைக்கலாம். மாதத்தின் பிற்பாதியில் தன்னம்பிக்கை பன்மடங் காகும். எடுத்த காரியம் வெற்றியாகும். எதிர்ப்பு களை வெற்றிகொண்டு உயர்வடையும் வாய்ப் புண்டு. உங்கள் ராசி மீது செவ்வாய் 25–ஆம் தேதி வரை சஞ்சரிப்பதால் கோபதாபங்கள் அதிகப்படும். சிறு சிறு காயங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றக்கூடும், கவனம் தேவை.

மூன்றாம் வீட்டில் 6 கிரகங்கள் 24, 25, 26 தேதிகளில் கூடுவதால், உணர்ச்சிவசப்படுவது கூடாது. தேவையில்லாத போட்டி பந்தயங்களில் ஈடுபட வேண்டாம். ராகு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப் பதால், உடல் உபாதைகள் இருந்து வரும், கவனம் தேவை. திருமணம் முதலிய காரியங்கள் ஒரு சிலருக்குக் கூடிவரும். ஜனன ஜாதகப்படி 2, 7, 11 ஆகிய வீடுகளின் அதிபதிகள் திசை, புத்தி நடைமுறையில் உள்ளவர்களுக்கும், ஜனன ஜாத கத்தில் குரு மிதுன ராசியில் அமையப் பெற்றவர் களுக்கும் கைகூடி வரும். மாதத்தின் பிற்பாதி புது முயற்சிகளுக்கு நன்று.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர் களுக்கு, சூரியன் இம்மாதத் தின் முற்பாதியில் ராசி மீது சஞ் சரிப்பதால், வீண் மனக்குழப்பம் ஏற்படும். தொழில் துறை சம்பந்தப்பட்ட சிந்தனைகள் அதிகப்படும். மாதத்தின் முற் பாதியில் புதன், சூரியன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்ப தால், நண்பர்கள், உறவினர்கள் மூலம் நன்மை, தீமை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் இரண்டாம் வீட்டில் சஞ்சரிப்பதால், பண வரவு ஏற்படும். வித்தை, புத்தி, யுக்தி, போதனை செய் பவர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கிட்டலாம். குடும்பத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகலாம். உங்கள் சொல்லுக்கு மதிப்புண் டாகும்.

செவ்வாய் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், ஒரு சிலர் பிறர் பேச்சைக் கேட்டு வாழ்க்கையை வீணடித்துக் கொள்வர். 8–இல் ராகு சஞ்சரிப்ப தால், அரசாங்க உபத்திரவம் வரக்கூடும். தீயவர் கள், திருடர்களால் பயம் உண்டாகும். பிடிக்காத இடத்தில் சிறிது காலம் வசிக்கவோ, வேலை செய்யவோ கூடும். திருமணம் முதலிய சுப காரி யங்கள் 2020–இல் கண்டிப்பாக நிறைவேற வாய்ப் புண்டு. எதிர்வரும் பிப்ரவரி முதல் உங்கள் வாழ்க்கைப் பாதை முற்றிலும் மாறிவிடும்.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியனின் சஞ் சாரம் சாதகமாக இல்லை. சுப காரியச் செலவு, அலைச்சல் ஏற்படும். மாதத்தின் முற்பாதி யில் புதன் இணைவு பெற்றுச் சூரியன் சஞ்சரிப்பதால் களத் திர வழியிலும், தொழில் வழியிலும், பணியாளர் கள் வழியிலும் பிரச்சனைகளைச் சந்திக்க நேரிட லாம். மாதத்தின் பிற்பாதியில் ராசி மீது சூரியன் பிற கிரகங்களுடன் இணைவு பெற்றுச் சஞ்சரிப்ப தால் குழப்பங்கள், சிரசு வலி, மன அமைதிக் குறைவு ஏற்படலாம். செவ்வாய் 25–ஆம் தேதி வரை லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உடன் பிறந்த சகோதர வர்க்கத்தார், உத்தியோகஸ்தர் கள், நிலம் பூமி மூலம் ஆதாயம் ஏற்பட வாய்ப்புண்டு.

குரு ராசி மீது அடுத்த ஆண்டு அக்டோபர் வரை சஞ்சரிப்பதால் கௌரவப் பிரச்சனைகளால் கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். இளம் வயதினர் அதிகம் பாதிப்படைவர். ராகு 7–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், உங்கள் தனிப்பட்ட வாழ்வில் அந்நியர் சிலர் தலையீடு செய்வர். திருமண வாய்ப்பு இந்த ஆண்டு குறைவு. ஜனன ஜாதகத்தில் ராசிக் கட்டத்தில் மிதுன ராசியில் குரு, சுக்கிரன் போன்ற கிரகங்கள் இருப்பின் திருமண வாய்ப்புக் கிட்டும். புதிய முயற்சிகளுக்கு இம்மாதம் நல்லதல்ல. 23, 24, 25, 26 தேதிகளில் கவனம் தேவை.




மகர ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் மிகவும் சோதனை மிக்கது. மாதத்தின் முற்பாதியில் நீங்கள் வஞ்சிக்கப்படலாம். தெரிந்தே சில விஷயங்களில் ஏமாறக்கூடும். 11–இல் சூரியன் சஞ்சரிப்பதால், இப்பலன் நேரிட வாய்ப்புள்ளது. மாதத்தின் பிற்பாதியில் 24, 25, 26, 27 ஆகிய தேதிகளில் கவனம் தேவை. உங்களின் ஆடம்பரப் பொருள்களை இந்த நாட்களில் பத்திரமாக வைத் துக்கொள்ள வேண்டும். வெளியில் சென்றால் வீட்டை மற்றவர்களின் கண்காணிப்பில் விட்டுச் செல்ல வேண்டும். மிகவும் வயதானவர்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

ராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வயிற்று உபாதை, தொண்டைப் பகுதிகளில் பாதிப்பு, காய்ச்சல் முதலியவை சிறுவர், சிறுமிகளைப் பாதிக்கக் கூடும். செவ்வாய் 10–இல் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் தலங்களில் உங்களின் அதிகார எல்லைக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும். புதன் 11–இல் சஞ்சரிப்பதால் ஒரு சிலர் உறவினர்கள் மூலம் நன்மை அடைவர். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்குத் தென்படும். தொழில் வகை நண்பர்கள் சந்திப்பு பயனுள்ளதாக இருக்கும். இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் புதிய பொறுப்பு சிலருக்கு உண்டாகும். திருமணக் காரியங்களுக்கு இது ஏற்ற காலமல்ல. புது முயற்சிகள் வேண்டாம்.



கும்ப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் அதிர்ஷ்டகரமான மாதம். மாதத்தின் முற்பாதியில் புதிய காரியங்களைத் தொடக்க வெற்றி ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் 11–இல் சூரியன் பிற கிரகங்களோடு இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால், நண்பர்கள் மூலம் உதவி, பெரியோர் ஆசி கிட்டும். திருமணக் காரியங்களில் இந்த ஆண்டு முன்னேற்றம் உண்டாகும். முயற்சித்தால் விரைவில் சித்தியாகும். இன்னும் இரண்டு மாதங்களில் ஏழரைச் சனியின் பிடியில் நீங்கள் சிக்க இருப்பதால், அதற்கு ஏற்றாற்போல் வாழ்க்கைப் பாதையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

முதலீடுகள் செய்யும் விஷயங்களில் கவனம் வேண்டும். சொத்து, சுகம் சேர்க்கை, சுபச்செலவு முதலியவை வரும் காலங்களில் ஏற்பட வாய்ப்புள்ளது. 9–ஆம் வீட்டில் 25–ஆம் தேதி வரை செவ்வாய் சஞ்சரிப்பதால், நாத்திகவாதம் பேச வேண்டாம். பெண்களாக இருப்பின், வயிற்றில் உபாதைகள் தோன்றும். கவனம் தேவை. புதன் 10–ஆம் வீட்டில் 25–ஆம் தேதி வரை சஞ்சரிப்பதால் கலை, இலக்கியத்துறை, ஒப்பந்தக்காலப் பணி செய்வோர் மேன்மை அடைவர். ராகு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், மாணவர்கள் சாதனை செய்ய வாய்ப்புண்டு.



மீன ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் 9, 10–ஆம் இடங்களில் சஞ்சரிப்பதால், பொதுவில் நன்மையுண்டு. சிற்சில தடைகள் ஏற்பட்டாலும், பின்னர் உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர்கள். சுப கிரக திசாபுத்தி நடைபெறுபவர்களுக்குக் கீர்த்தி, பிரதாபம் ஏற்படும். உயர்ந்த பதவி, அந்தஸ்தில் அமரும் யோகம் உண்டு. இடப்பெயர்ச்சி, தொழில் மாற்றங்கள் குறித்த நல்ல செய்திகள் ஒரு சிலருக்கு வந்தடையும். பொது வாழ்க்கையில் உள்ளவர்களுக்குச் சில அதிரடித் திருப்பங்கள் ஏற்படலாம்.

சூரியன், புதன் 9–ஆம் வீட்டில் இம்மாதம் சஞ்சரிப்பதால், ஆன்மீகப் பிரசங்கம் செய்பவர்களுக்கு இது நன்மையுண்டாக்கும் காலமாகும். வெளிதேச யாத்திரை, தொழில் வழி முயற்சிகளால் வெற்றி முதலியவையும் ஏற்படும் வாய்ப்புண்டு. ராகு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், வாகனங்களைக் கையாள்வதில் இந்த ஆண்டு முழுவதும் கவனம் வேண்டும். இள வயதினர் தங்களது பழக்க வழக்கங்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். திருமணம் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து, அதன்படி முயற்சி செய்யலாம். டிசம்பர் 24, 25, 26 தேதிகளில் எதிர்பாராத நன்மைகள், திருப்பங்கள் ஏற்படலாம்.

சென்ற அக்டோபர் 2019
இதழ் தொடர்ச்சி

பேரா. டாக்டர் க. பாஸ்கரன்

விண்ணைத் தேடி 3



அந்தக் கடற்கரைப் பகுதி சுமார் 50 வீடுகள் மட்டும் உள்ள, கண்ணுக்கு எட்டிய தூரம் பாலைவனம் மாதிரி மணல்பரப்பு, கடல், காற்று, பறவைகள் என இயற்கை நிறைந்த இடம். அன்புடன் உபசரித்த மீனவக் குடும்பங்கள்.

ஆனால் வந்த காரியம் எதிர்பார்த்த மாதிரி முன்னேற்றம் காணவில்லை. சகோதரர்கள் மனம் தளரவில்லை. முதல் சிறு சிக்கலாக கிளைடர் செய்யத் தேவையான நீளமுள்ள மரச்சட்டம் தங்கள் ஊரான Deyton–இல் கிடைக்கவில்லை. கிட்டிஹாக் அருகிலும் கிடைக்கவில்லை. ஆனால் இருப்பதை (சவுக்கு மரக் கம்பு) வைத்துத் திறமையாகச் சமாளித்து ஒரு கிளைடர் செய்தனர்.

நண்பர்கள் உதவியுடன் அதை மணல் குன்றில் ஏற்றிப் பட்டம் மாதிரிப் பறக்கவிட்டனர். அதிக தூரம் பறக்கவில்லை. பல முறை கீழே விழுந்து கிளைடர் உடைந்தது. சளைக்காமல் ஒட்டுவேலை செய்து பறக்க விட்டுச் சிறிது முன்னேற்றம் கண்டனர்.

அவர்களது முதல் கிளைடர் 5 அடிக்கு மேல் 17 அடி செவ்வகம். துணியால் மூடப்பட்ட இரண்டு அடுக்கு. மூங்கில் சட்டங்கள் முன்புறம் 12 சதுர அடி சுக்கான் (Rudder): இது திசை திருப்ப, ஏற்ற, இறக்க உதவும். சமநிலையை அடையவும் உதவும்.

கிளைடரின் எடை 50 பவுண்டு தான். வில்பர் பறக்கும்போது, வில்பரின் எடையைச் சேர்த்து சுமார் 190 பவுண்டு. வில்பர் குப்புறப் படுத்துக் கைகளை நீட்டிச் சுக்கானை இயக்க வேண்டும். குன்றின் உச்சியிலிருந்து கிளைடரைத் தரையில் தள்ளிப் பறக்க வைக்க வேண்டும்.




சக்கரம் இல்லாத இந்த கிளைடரின் அடியில் மரப்பட்டைகள், மணலில் கிளைடர் சரிந்து பறக்க (Take off) உதவின. பட்டம் (கிளைடர்) ஓரளவு தனியாகப் பறக்கிறது.

வில்பர் கிளைடரில் படுத்துக் கொண்டு கிளைடரைப் பறக்க வைக்க முயற்சித்தார். பல முயற்சிகளுக்குப் பின் சுமார் 300 அடி தூரம் பறந்தபின் 30 மைல் வேகத்தில் 'தொப்' என்று

விழுந்தது. மணல் தரை என்பதால் காயமின்றித் தப்பினார்.

இப்படிப் பல முயற்சிகள். முன்பு மற்றவர்கள் செய்த கிளைடரைவிட, ரைட் சகோதரர்கள் செய்த இந்த கிளைடரில் முக்கிய வித்தியாசம் என்னவென்றால், கிளைடரில் படுத்துக்கொண்டே பட்டையான (இறக்கைகளை) நீளவாட்டில் திருகுதல் (Wind warping) மூலம் ஓரளவு கிளைடரின் இயக்கத்தைக் கட்டுப் படுத்தும் ஓர் அமைப்பு. ஆனால், இந்தக் கட்டுப்பாடு மட்டும் போதாது என்பதையும் உணர்ந்தனர்.

தங்கள் சோதனைகளை 7 வாரங் களில் முடித்துவிட்டு, செப்டம்பர் 1900–இல் தங்கள் ஊருக்குத் திரும் பினர்.



வழியில் பல விதமான சிந்தனை கள், மனச்சோர்வு, அதே சமயம், 'தோல்வி வெற்றியின் முதல்படி' என்ற ஒரு மனத்தெளிவு அவர்களை உந் தியது.

தோல்வியின் காரணங்களை அலசி ஆராய்ந்தனர். சில தெளிவுகள் பிறந்தன. அடுத்த ஆண்டு கிட்டி ஹாக்குக்குத் திரும்பித் தங்களது சோதனைகளைத் தொடர முடிவு செய்தனர்.

வீடு திரும்பியவுடன் புதுத் தெம்பு பிறந்தது. தங்கை, அப்பாவிடம் தங் களது முதல் அனுபவத்தைப் பகிர்ந்து மகிழ்ந்தனர். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். ஆதலால், எந்த முயற்சியிலும் 'உயிர்ப் பாது காப்பு' என்பது மிக முக்கியம். கண் மூடித்தனமாகச் செய்யாமல், அபாய நேர்வுகளைத் (Dangerous risks) தவிர்க்க வேண்டும் என்ற தந்தையின் அறிவு ரையை மனதில் வைத்திருக்கிறோம் என்று அவருக்கு உறுதி அளித்தனர்.

தங்கள் ஊரில் பெரிய கிளைடர் செய்யும் முயற்சியில் இறங்கினர். அந்தச் சமயம் அமெரிக்க இஞ்சினியர் சனூத், Deyton–னுக்கு வருகை தந்தார். அப்போது சனூத்துக்கு வயது 70. ரைட் சகோதரர்களுடன் அவர்களது புதிய திட்டங்களைப் பற்றி, கிளைடர் வடிவமைப்புப் பற்றி ஆர்வமுடன் பேசினார்.

சகோதரர்களுக்கு அன்பளிப் பாகக் கையில் அடங்கும் ஒரு காற்று வேக அளவியைத் (Portable Anemometer) தந்தார். சகோதரர்களுக்குக் காற்றின் வேகத்தை அளக்க மிக உதவியாக இக்கருவி அமைந்தது.

முதல் பயணத்தில், ரைட் சகோ தரர்கள், கிட்டி ஹாக்கின், முக்கியமாக Kill Devil Hill கிராம மக்களிடம் நல்ல பெயர் வாங்கினர். அதாவது, இருந்த 7 வாரங்களில், இரு சகோதரர்கள் அயராமல் உழைத்ததை, அவர்களது பணிவைக் கண்டு வியந்தனர்.

சிலர், மனிதனால் என்றும் பறக்கும் இயந்திரம் செய்ய முடியாது என்ற ஒரு கொள்கையினால், இந்தச் சகோதரர்கள் தேவை இல்லாமல் தங்களது நேரத்தை வீணாக்கு கிறார்கள் என்று பரிதாபப்பட்டனர்.

ரைட் சகோதரர்களைப் பொறுத்த வரையில் இந்த 7 வார முயற்சி, அவர்களுக்கு நிறையப் பாடங்களைக் கற்பித்தது. ஊக்கமும் கொடுத்தது.

நீண்ட காலக் கனவு, கடின உழைப்பு ரைட் சகோதரர்களுக்கு இயற்கையைப் பற்றி ஒரு புரிதலைக் கொடுத்திருந்தது. இதை கொள்கை, விதி, கோட்பாடு (தியரி) என்று

சொல்வார்கள். உதாரணமாக, நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின்பு நியூட்டன் தனது விதிகளை உலகுக்குப் படைத்தார்.


இதே மாதிரி ரைட் சகோதரர்கள், தங்கள் மனதில் விமானம், கிளைடர் பறப்பது, அதன் இயக்கம், கட்டுப்பாடு பற்றிய ஒரு விஞ்ஞானக் கொள்கையை உருவாக்கினர்.

1902–ஆம் ஆண்டு தொடக்கம். ரைட் சகோதரர்கள் 3–ஆவது கிட்டி ஹாக் பயணத்திற்கு ஆயத்தம் செய்தனர். முந்தைய இரண்டு கிளைடர்கள் போல, 1902–ஆம் ஆண்டு கிளைடரும் 2 அடுக்கு இறக்கைத் தட்டுகள் கொண்டது. மரச்சட்டங்கள் தைக்கப்பட்ட இறக்கைத் துணிகள், இணைக்கும் கம்பிகள் என மொத்த எடை சுமார் 117 பவுண்டு. செவ்வக இறக்கைத் தட்டு, 26–க்கு 8 அடி. அளவில் முன்பைவிடப் பெரியது.

கிளைடர் தலைகீழ் அல்லது கால் கீழ் நோக்கிப் பாயாமல் இருக்க (Pitch control) கைகளால் இயக்கப்படும் செவ்வகத் தட்டின் (Canard surface) வடிவம் நீள் வட்ட (Elliptical) வடிவமாக மாற்றப்பட்டது. ஒரு செங்குத்தான சுக்கான் (Rigidly fixed Rubber) அசையாமல் பின்புறம் பொருத்தப்பட்டது. வழக்கம் போல் கால் மிதி மூலம் இறக்கை திருகுதல் (Wind warping) செய்யப்பட்டது.

முதல் இரண்டு கிளைடர்களைச் சோதித்தது மாதிரி 3–ஆவது கிளைடரையும், முதலில் பட்டம் போல் காற்றில் பறக்கவிட்டு அதன் இயக்கங்களை ஓரளவு புரிந்து கொண்டனர்.

வில்பர் கிளைடரில் படுத்துச் சில நாட்கள் இயக்கி 200, 300 அடி தூரம் பறந்து புது கிளைடரை, சமநிலையில் நன்கு கட்டுப்பாட்டுடன் காற்றில் ஓட்டக் கற்றுக்கொண்டார். தம்பி ஆர்விலும் முதல் முறையாகக் கிளைடரில் ஓரளவு கட்டுப்பாட்டுடன் பறக்கக் கற்றுக் கொண்டார்.



சார்லஸ் டெய்லர் – ரைட்ஸ் எஞ்ஜின்

இந்தச் சோதனை ஓட்டங்களின் போது ஒரு புது யோசனை உதித்தது. சுக்கானின் அசையா நிலையை மாற்றி, அவை பக்கவாட்டில் திரும்ப வழி செய்தால், கட்டுப்பாட்டுடன் கிளைடரைத் திசை திருப்ப உதவும் என்று உணர்ந்தனர்.

இன்னொரு யோசனையும் உதித்தது. அதாவது, சுக்கானைத் திருப்பும் கட்டுப்பாட்டையும் இறக்கை திருகுதல் கட்டுப்பாட்டையும் ஒன்றிணைப்பது. இந்த இரண்டும் கிளைடர் திசை திரும்ப உதவுவதால் அவற்றை இணைக்க முடிவு செய்தனர்.

நாம் சைக்கிள் ஓட்டும்போது கால், கை, இடுப்பு ஆகிய மூன்றும் இணைந்து திசை திருப்புகிறோம். கீழே சாயாமல் நிலையாக ஓட்டுகிறோம். இதே மாதிரி, ரைட் சகோதரர்கள், ஒரு புது இடுப்புக் கம்பி (Hip Cable), கால் மிதி மூலமாக சுக்கானையும், இறக்கை திருக்குதலையும் இணைத்துக் கட்டுப்படுத்துகின்றனர்.

இந்த முக்கிய இடைக்கால மாறுதல்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்தன. 1902–ஆம் ஆண்டில் இந்த மாறுதல்களுக்கு முன்னால் சுமார் 300 முறை கிளைடரில் பறந்தனர். இந்த மாறுதல்களுக்குப் பின் கிளைடரை உயர்த்தி, கீழ் நோக்கிச் செல்ல வைத்து, திருப்பி, வட்டமிட்டு, மெதுவாக இறக்கி சுமார் 700 முறை வெற்றிகரமாகப் பறந்தனர்.

சில சமயம் கிளைடரில் சுமார் 650 அடி (ஒரு பர்லாங்) தூரம் பறந்தனர். 1902–ஆம் ஆண்டில் மொத்தம் சுமார்

1000 முறை கிளைடரில் வெற்றிகரமாகப் பறந்தனர். அடுத்த கட்டமாக ஓர் எஞ்சினை இணைத்து, அதன்சக்தி மூலம் விமானத்தை ஓட்டிப் பறக்க வைக்க முடிவு செய்தனர்.

இதற்கு முன்பு மற்றவர்கள் விமானம் செய்து பறக்கவைக்கும் முயற்சியில் நீராவி எஞ்சின்கள் பயன்படுத்தப்பட்டன. நீராவி எஞ்சின்களின் எடை மிக அதிகம் என்பதால் அவற்றை வைத்துப் பறப்பது ஒரு பெரிய பளு. விமானமும் எடை, அளவில் பெரியதாகியதால் கட்டுப்படுத்த முடியாமல், சமநிலைப்படுத்த முடியாமல் எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

கலந்துரையாடல், சிந்தனை, ஸ்மீட்டன் சமன்பாடு உபயோகத்துக்குப் பின் நீராவி எஞ்சினுக்குப் பதில் பெட்ரோல் எஞ்சின்தான் பொருத்தமானது என்று முடிவுக்கு வந்தனர்.

பெட்ரோல் எஞ்சின்களின் இயக்கம் இந்தக் காற்றாடிகளைச் சுற்ற வைக்கும். விமானம், பெட்ரோல் எஞ்சினின் எடை, தேவையான எஞ்சின் சக்தி (Horse Power) *ஆகியவற்றை ஸ்மீட்டன் சமன்பாடு முதலிய சமன்பாடுகளைப் பயன்படுத்தி நிர்ணயித்தனர்.*

தேவையான வடிவமைப்பில், எடை குறைந்த எஞ்சின்களை உருவாக்கித்தர மோட்டார் கம்பெனிகள் தயாராக இல்லை. எடை குறைந்த, வலுவான, அதேசமயம் உஷ்ணத்தைத் தாங்கக்கூடிய உலோகத்தைப் பற்றிச் சிந்தித்தனர். தாங்களே எஞ்சின் செய்ய முடியுமா என்று சிந்தித்தனர்.

இந்தச் சமயத்தில் ரைட் சகோதரர்களின் சைக்கிள் கடையைக் கவனித்து வந்த சார்லஸ் டெய்லர் என்ற அனுபவம் மிக்க ஒரு மெக்கானிக் உதவிக்கு வந்தார். ரைட் சகோதரர்களின் வெற்றிக்குச் சார்லஸ் டெய்லரின் அனாயசமான திறமை, உதவி மிக முக்கியமாக அமைந்தது.

கிளைடர் பறப்பதில் ரைட் சகோதரர்கள் முழுக் கவனத்தைச் செலுத்துவதற்கு டெய்லர் மிகவும் உதவியாக அமைந்தார். இரும்பு எஞ்சினுக்குப் பதில் எடை குறைந்த அலுமினிய எஞ்சின் செய்ய முடிவு செய்தனர். இதனை சார்லஸ் டெய்லர் தன் திறமையை உபயோகித்து அதிசயம் புரிந்தார் என்றே சொல்ல வேண்டும்.

தங்கள் ஊரில் உள்ள ஓர் உருக்காலையில் அலுமினியத்தை உருக்கித் தேவையான வடிவில் எஞ்சினை வார்த்தனர். தங்களது பட்டறையில் எஞ்சினை மெருகேற்றினர். பின்பு தேவையான பாகங்களைச் செய்து அல்லது கடையில் வாங்கி முழு எஞ்சின் செய்தனர். மூன்று வார முடிவில் சரித்திரப் புகழ் பெற்ற சார்லஸ் டெய்லர் – ரைட்ஸ் எஞ்சின் உருவாகியது.

1903 பிப்ரவரி 12–இல் முடிக்கப்பட்ட இஞ்சின் ஒரு சோதனை ஓட்டத்தின்போது உடைந்து பழுதடைந்தது. புது எஞ்சின் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. புது எஞ்சின் அச்சு (Cast of the Engine) *ஏப்ரலில் வந்தது. முழு முயற்சி, கடின உழைப்பின் பின் ஜூன் மாதத்தில் சார்லஸ் டெய்லர் இரண்டாவது எஞ்சினை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.*

இரண்டாவது முறை சிகாகோவில், 1903 ஜூன் 24–இல் இஞ்சினியர்களுக்கு வில்பர் சொற்பொழிவாற்றித் தங்களது 1902–ஆம் ஆண்டின் வெற்றிகரமான 3–ஆவது கிளைடர் முயற்சியை விவரித்தார். கிளைடரைக் கட்டுப்படுத்திப் பறக்கக் கற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தாங்கள் 1,000 முறை கிளைடரில் ஒரு மாதத்திற்கு மேல் பறந்தது, வெறும் 5 மணி நேரம் தொடர்ந்து கிளைடரைக் கட்டுப்படுத்தி ஓட்டப் பழகியதற்குச் சமம் என்றார்.

டிசம்பர் 1903–இல் எஞ்சின் பொருத்திய விமானத்தில் ரைட் சகோதரர்கள் வெற்றிகரமாகப் பறந்தனர்.

– முற்றும் –



பங்களாதேஷ் எழுத்தாளர்

தஸ்லிமா நஸ்ரீன்

தஸ்லிமா நஸ்ரீன் மருத்துவ டாக்டராகத் தொழில் செய்தவர். ஏதோ காரணத்தால் மணமுறிவு ஏற்பட்டும் வாழ்க்கையைத் தொடர்ந்தவர். அவருடைய அன்புத் தாயார் புற்றுநோயால் அவதிப்பட்டபோது மரணப்படுக்கையில் இருக்கும் அவரைப் பார்ப்பதற்காகத் தன் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்தவர். அதன்பிறகு ஏறக்குறைய 25 ஆண்டுகளாக அகதி வாழ்க்கையை மேற்கொண்டவராகவே உள்ளார்.

ஐரோப்பாவில் ஸ்வீடன் நாடு இவர் தஞ்சமடைந்த தேசம். அதன்பிறகு இந்தியாவில் கல்கத்தா. அதன் பிறகு டெல்லி. ஒவ்வோராண்டும் இந்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் இவர் தங்க வேண்டிய நிலைமை நீடித்து வருகிறது. அளிக்கப்படுகிற அந்த அனுமதியும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை என்பதால், அவர் வருத்தப்பட வேண்டியதாகவும் உள்ளது.

இவ்வாறு, வெளிநாட்டில் வாழ்வதற்குக் காரணம் என்ன? அவர் தீவிரவாதி அல்ல, பயங்கரவாதி அல்ல. பிறர் நோயைக் குணப்படுத்தும் மருத்துவர். அது உடல் நோய் மட்டும்தான். அதைவிட வன்மம், வக்கிரம், மதவெறி முதலிய மாசுள்ள மனிதர்களின் நோயைப் போக்குவதற்காக இவர் அளித்த மருந்துகள், இவர் எழுதிய புத்தகங்கள்தான்.

அவருடைய முதல் புத்தகம் 'லஜ்ஜா' (வெட்கக்கேடு) என்பதாகும். இந்த வெட்கக்கேடு யாருக்குத் தெரியுமா?

பங்களாதேசம் இஸ்லாமிய நாடு. அந்த நாட்டின் மதம் இஸ்லாம். அந்த நாட்டு இஸ்லாமியர்கள் வங்காளி பேசுகிற இஸ்லாமியர்கள். உருது பேசுகிற இஸ்லாமியர்கள் அல்ல.

இதே பங்களாதேசில் வங்காள மொழி பேசும் 16 கோடி இஸ்லாமியர்களுக்கு மத்தியில் சுமார் 1.5 கோடி வங்காளி பேசும் இந்துக்களும் வாழ்கிறார்கள். இந்தியாவில் இந்துக்கள் மெஜாரிட்டி மதத்தார். ஆனால், பங்களாதேசத்தில் அதே இந்துக்கள் மைனாரிட்டி மதத்தார்.

1992 டிசம்பர் 6–இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் விளைவாகக் கலவரம் வெடித்தது. மும்பையில் குண்டு வெடிப்பு பல உயிர்களைப் பலி கொண்டது. அதற்குக் காரணமானவன் நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் என்பவன். அவன் இப்போது இருப்பது பாகிஸ்தானில். பங்களாதேசத்தில் வசிக்கும் மெஜாரிட்டி இஸ்லாமியர்கள்

மைனாரிட்டி இந்துக்களை மதவெறி காரணமாக அடித்துத் துன்புறுத்தியதும், கொடுமைப்படுத்தியதும், கொலை செய்ததுமான சம்பவங்கள் ஏராளம்.



மருத்துவர் தொழில் செய்து கொண்டிருந்த தஸ்லிமா நஸ்ரீன் இதனை நேரடியாகப் பார்க்கிறார், பரிதாபப்படுகிறார். பாவப்பட்ட அந்தச் சிறு கூட்டத்தார் மத்தியில், இந்துக்கள் என்பதைத் தவிர, அவர்களைப் பற்றிச் சொல்வதற்கு வேறு எதுவும் இல்லை.

பங்களாதேசில் உள்ள மெஜாரிட்டி முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் மட்டுமே மதவெறியர்கள். சகிப்புத் தன்மை இல்லாதவர்கள். ஆங்கிலத்தில் அவர்களை Fundamentalist என்பார்கள். Fanatics என்பார்கள். அடிப்படை மதக்கோட்பாடுகளை முதன்மையாகக் கடைப்பிடிப்பவர்கள் அவர்கள். இவர்களால் மதச் சிறுபான்மையினரான இந்துக்களைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் இந்தத் துன்புறுத்தலைச் செய்கிறார்கள்.

மனிதாபிமானத்தோடு இதனைப் பார்த்த இளம்பெண் தஸ்லிமா நஸ்ரீன் ஆத்திரப்படுகிறார். தட்டிக் கேட்க விரும்புகிறார். ஆனாலும் பெண் என்பதால், இவருடைய குரல் பலம் பெறவில்லை.

அதனால், இரவு முழுவதும் கண் விழித்துக் கண்ணீர் சிந்துகிறார். ஆத்திரத்தை ஒன்று திரட்டித் தனது பேனாவுக்குள் அடக்கி, அந்த மையை இரத்தமாகக் கருதி எழுதுகிறார். அது ஒரு புத்தகமாகிறது. அந்தப் புத்தகத்திற்கு இவர் வைத்த பெயர்தான் ‘லஜ்ஜா’ என்பதாகும்.

அந்தப் புத்தகத்தைத் தனது தாய் மொழியான வங்காளத்தில்தான் எழுதினார். வங்கமொழி இஸ்லாமியர்கள் அதை வாசித்தனர். இந்துக்களுக்கு ஆதரவாக ஓர் இஸ்லாமியப் பெண் எழுதுவதா என்று இவருடைய வீட்டைச் சூழ்ந்து சூறையாடத் தொடங்கினர். உயிருக்குத் தப்பித்து விமானத்தில் டெல்லி வந்து சேர்ந்தார்.

அந்தப் பெண்ணுக்கு அடைக்கலம் தரக்கூடாது என்று அன்றைய மத்திய அரசுக்கு இந்திய இஸ்லாமியர்கள் எச்சரிக்கை செய்தனர். அதனால் மத்திய அரசு அவரை வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டிக் கொண்டது. ஐரோப்பாவில் ஸ்வீடன் நாடு அவருக்கு அடைக்கலம் தர முன்வந்தது. அதனால் ஸ்வீடன் சென்றார், தங்கினார். 20 ஆண்டுகள் உருண்டோடின.

பிறகு இந்தியா திரும்பத் திட்டமிட்டார். அன்றைக்கு மேற்கு வங்காளத்தில் ஜோதிபாசுவின் மார்க்சிஸ்ட் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த ஆட்சியில்தான் கல்கத்தாவில் தங்குவதற்கு இவர் வந்தார். ஆனால், இவரை வெளியேற்றச் சொல்லி மார்க்சிஸ்ட் அரசுக்கு எச்சரிக்கை விடப்பட்டது. அதனால் தஸ்லிமா கல்கத்தாவை விட்டு வெளியேறும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார்.

தலைநகர் டெல்லியில் தொடர்ந்து தஸ்லிமா தங்கியிருந்தார். ஐரோப்பாவில் இருப்பதைவிட, இந்தியாவில் கல்கத்தாவில் வசிப்பது தனது தாய் நாட்டில் வசிப்பது போல என எண்ணினார். இது அவருடைய ஆசை. அதனால்தான் குறுகிய கால அரசு அனுமதியோடு டெல்லியில் தங்கி வருகிறார்.

‘லஜ்ஜா’ நாவலுக்குப் பிறகு தொடர்ந்து எழுதியும் வருகிறார். இஸ்லாமிய மறைநூலான திருக்குர்ஆன் பற்றியும் அவருக்கு அபிப்பிராயங்கள் உண்டு. இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றாமல் அவர் வாழ்ந்து வருகிறார். பர்தா அணியவில்லை.

சென்ற ஆகஸ்ட் மாத ‘தி வீக்’ ஆங்கில வார இதழ், தஸ்லிமா நஸ்ரீன் பற்றி வெளியிட்ட கட்டுரை சுவாரஸ்யமானது. டெல்லியில் ஓர் இறைச்சிச் சந்தைக்குச் சென்றிருக்கிறார். அங்கே ஒரு பூனையைப் பார்த்திருக்கிறார். அந்தப் பூனை இவருக்குப் பிடித்துப் போய்விட்டது. ஸ்வீடனில் இருந்த போதும் ஒரு பூனையைப் பல

தொடர்ச்சி 92–ம் பக்கம்

முத்தமிட்ட ரோஜாவனம்



ஒரு ரோஜாப்பூவைக்
கையில் ஏந்திவந்த
அவளின்
கண்களுக்குள்
ஆயிரம் ஆயிரம் ரோஜாப்பூக்கள்
ஆசையோடு விசாரித்தன என்னை.

செம்பருத்திப் பூவிதழ்கள்
பட்டுச் சிவந்து கொண்டேயிருந்த
ரோஜாவின் முகத்தில்
அவள் பேசப் பேச
அப்படியொரு நாணம்.

நீலம் படர்ந்த வானம்
அவளின்
ஒவ்வொரு சொல்லோடும்
ஒரு நட்சத்திரத்தை
ரோஜாப்பூவாக
என்னிடம்
கொண்டுவந்து கொடுத்தது.

அவள் நெற்றியில்
இருந்த
சிறு மச்சத்திலும்
பூத்துச் சிரித்தது
ரோஜா.

செவ்வரி படரத் தொடங்கியிருந்த
அவளின்
சுருண்ட கூந்தலில்
என் காலம்
கைதுபட்டு நின்றதோ?.

கவிஞர் சென்னிமலை தண்டபாணி

பேசித் தீராத நினைவுகளை
மவுனப் பார்வை
கொஞ்சம் கொஞ்சமாய்
மொழிபெயர்த்துக் கொண்டிருந்தது.

வெற்றிடமே இல்லாமல்
என்னுள் பூத்த ரோஜாவனம்
முத்தமிட்டது
ஒவ்வொரு நொடியையும்.

அவள்
பேசப் பேசக்
கேட்டுக்கொண்டே இருந்த நான்
திசைகளைக் கடந்த
பறவையானேன்;
அவள் கையில் இருந்த
சிவந்த ரோஜாவைக்
கவ்விக் கொண்டு.


உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE
GURKHA E.O.V.
4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 37 நவம்பர் 2019 இதழ் : 11

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423

வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



வாழைப்பூ பாயசம்

தேவையானவை *: வாழைப்பூ : 1 சிறியது, மில்க்மெய்ட் 1/4 கப், சர்க்கரை 1/2 கப், பேரீச்சம்பழம் பொடியாக நறுக்கியது : 1/4 கப், பாதாம் பருப்பு : 6, திராட்சை : 10, முந்திரி : 10, பால் : 1/2 லிட்டர், நெய் : 2 ஸ்பூன், ஏலக்காய்த் தூள் சிறிதளவு.*

செய்முறை :

1. வாழைப்பூவைச் சுத்தம் செய்து பொடியாக நறுக்கவும்.
2. நறுக்கியதை வேகவைத்து மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும்.
3. அடிக் கனமான பாத்திரத்தில் நெய் விட்டு முந்திரியை வறுத்து எடுக்கவும். பின் அதில் அரைத்த விழுதைப் போட்டு நன்கு வதக்கியதும், அதில் பொடியாக நறுக்கிய பேரீச்சம்பழம், துருவிய பாதாம் பருப்புப் போடவும்.
4. அதில் பால்விட்டுக் கொதிக்கவிட்டு மில்க் மெய்ட், சர்க்கரை சேர்த்து நன்றாகக் கிளறி, ஒரு கொதி வந்தவுடன் அதில் ஏலப்பொடி, வறுத்த முந்திரி, திராட்சையைப் போட்டு இறக்கவும்.

சுவையான, சத்தான 'வாழைப்பூ பாயசம்' தயார்.

– ***ச. லெட்சுமி,*** *செங்கோட்டை.*

சிறுகதை



ஐ. கிருத்திகா

பிரதோஷம்

அன்று பிரதோஷம். நடுவணாங் கோவிலில் பிரதோஷம் சிறப்பாக நடக் கும்.

"நடுவணாங்கோவில் போயிட்டு வருவோமா...?"

பாட்டி வந்து காதில் கிசுகிசுத்தாள். கவிதை எழுதிக் கொண்டிருந்த வசந்தி பேனாவை மூடிவிட்டு நிமிர்ந்தாள்.

"நடுவணாங்கோவில்ல பிரதோஷம் பாக்கணும்னு ரொம்ப நாளா ஆசைடி. இப்பதான் போட் வசதியிருக்கே. போலாமா...?"

பாட்டி கண்கள் சுருக்கி ஒரு குழந்தை போல் கேட்டாள். பத்மா வரும் சத்தம் கேட்டதும் முகம் சுருங்க சட்டென விலகிப் போனாள். காரணம் தொன்று தொட்டு வரும் மாமியார் – மருமகள் கருத்து வேறுபாடு.

பாட்டி வாயைத் திறந்து அதிர்ந்து பேசுபவளல்ல. ஆனாலும் பத்மா விட மாட்டாள். விடாக்கண்டனாய்ச் சண்டை பிடிப்பாள். அவளும் அப்படி யொன்றும் சண்டைக்கோழியல்ல.



"இருபத்தஞ்சுலதான் இந்தக் காலப் பொண் கொழந்தைகளுக்கு வாழ்க்கையே தொடங்கறது. ஆனா எனக்கு அந்த வயசுல எல்லாமே முடிஞ்சிடுத்து. நகை, நட்டு எல்லாத்தையும் கழட்டி வீசிட்டேன். புருஷனில்லாத வாழ்க்கை கொடுமைடி..."

இருபது வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் பத்மாவின் மனதில் பாட்டியைப் பற்றிய கசப்புணர்வைத் தோற்றுவித்துவிட்டது.

அகிலா வயிற்றில் உண்டாகியிருந்த போது வளைகாப்பு, சீமந்தமெல்லாம் ஜமாய்த்துவிட வேண்டுமென்று பாட்டி சொல்ல, பத்மாவின் அப்பா பணமுடை யாக இருப்பதால் வீட்டோடு செய் கிறேனென்றிருக்கிறார். அதற்குப் பாட்டி ஒத்துகொள்ளாமல் போக, மாமியார் – மருமகள் உறவில் புகைச்சல் உண்டா யிற்று.

பாட்டி ஒன்றும் மனசாட்சி கெட்ட வளில்லை. கூடிய சீக்கிரமே தன் தவறு உறைக்க, பத்மாவிடம் மன்னிப்பு கேட்டு மன்றாடியிருக்கிறாள். ஆனால் பத்மா அசைந்து கொடுக்கவில்லை. அத்தோடு நில்லாமல் அகிலாவின் மனதிலும் பாட்டியைப் பற்றித் தவறான அபிப் பிராயத்தை உண்டாக்கிவிட்டாள்.

இரண்டாவது மகளான வசந்தி யிடம் பத்மாவின் பேச்சு எடுபட வில்லை. பாட்டிமேல் அவளுக்கு எப் போதுமே ஓர் அபரிமிதமான அன்பு உண்டு. அகிலா ஒட்டாமல் விலகி நிற்க, பாட்டி வசந்தியை அதிகமாகவே அர வணைத்துக் கொண்டாள்.

"அந்த நேரம் என் மனசுல பிசாசு புகுந்து ஆட்டி வச்சிடுத்துடி. அதனால தான் அப்படி நடந்துண்டேன். அதை ஒங்கம்மாகிட்ட எவ்வளவோ எடுத்துச் சொல்லிட்டேன். புரிஞ்சிக்க மாட்டேங் கறா..." என்று பாட்டி அடிக்கடி வசந்தி யிடம் விசனப்படுவாள்.

மாலை நான்கு மணி...

"போலாமாடி....?"

பாட்டி தலையைச் சுற்றியிருந்த புட வையிலிருந்து காதுகளை விடுவித்த படியே கேட்டாள். "ரெண்டு பேரும் எங்கே போறேள்...?"

பத்மாவின் குரல் வேகத்தடை போல் பாட்டியைத் தடுமாறச் செய்தது.

"கமலாலயம் நடுவணாங்கோவில்ல பிரதோஷம் பாக்கப் போறோம்மா..." வசந்தி முந்திக்கொண்டு சொன்னாள்.

"டிவி ரிப்பேர் பண்ண ஆள் வர் றேன்னு சொல்லியிருக்கான். நீங்க பாட் டுக்குப் போயிட்டா, அவன் வந்து பூட் டினக் கதவைப் பாத்துட்டுப் போவானா..."

"நீ வீட்லதானேம்மா இருப்பே...?"

"நான் அகிலா கல்யாணப் பத்திரிக்கை சம்மந்தமா பிரஸ்சுக்குப் போகணும். பேசாம ரெண்டு பேரும் வீட்ல இருங்கோ..."

அவளின் குரல் அதிர்ந்து ஒலித்தது. முகத்தில் ஒருவித குரூரத் திருப்தி. பாட்டி பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவள் பேக்கை மாட்டிக்கொண்டு பாட்டி யைக் கடந்து போனாள். வசந்தி தவிப் போடு பாட்டியைப் பார்த்தாள்.

பதினாறு வயதில் திருமணம், பதினெட்டில் குழந்தை, இருபத்தைந்தில் விதவை. தலையை மொட்டை அடித் துக்கொண்டு, காவிப் புடவைக்குள் தன்னைத் திணித்துக் கொண்ட பாட்டி, கிட்டத்தட்ட சன்யாச வாழ்க்கை வாழ்ந்து வருகிறாள்.

"இருபத்தஞ்சுலதான் இந்தக் காலப் பொண் கொழந்தைகளுக்கு வாழ்க் கையே தொடங்கறது. ஆனா எனக்கு அந்த வயசுல எல்லாமே முடிஞ்சிடுத்து. நகை, நட்டு எல்லாத்தையும் கழட்டி வீசிட்டேன். புருஷனில்லாத வாழ்க்கை கொடுமைடி..."

பாட்டி ஒருமுறை கமலாலயக் குளத்துப் படிக்கட்டில் அமர்ந்து கம்மிப்போன குரலில் சொன்னாள். கை தண்ணீரில் அளைந்தது. அடிக்கடி அப் படி குளத்துப் படிக்கட்டில் அமர்ந்து அளவளாவ அவளுக்கு ரொம்பப் பிடிக் கும். அவள் பிறந்து, வளர்ந்து வாழ்க் கைப்பட்டதெல்லாம் திருவாரூரில் தான். அவளது உயிர், ஆன்மா, சக்தி எல்லாம் கூண்டில் அடைபட்ட கிளி போல திருவாரூரில் அடைக்கலமாகிக் கிடந்தது. அதிலும் இந்தக் கமலாலயக் குளமும், தியாகராஜர் சந்நிதியும் அவளுக்கு வைரப் பொக்கிஷங்கள்.

"கமலாலயம்ங்கற பேரக் கேட் டாலே நீர்த்துப்போன உசிருக்கும் சக்தி வந்துடும்" என்பாள் நினைத்துக் கொண்டாற்போல்.

வசந்தியும், பாட்டியும் குளத்தை நிறையத் தடவை வலம் வந்திருக்கிறார் கள். சிறுவயதில் பாட்டியின் கைப் பிடித்து வசந்தி நடக்கும்போது, பாட்டி ஏராளமான கதைகள் சொல்லியிருக் கிறாள். எல்லாமே கோவில் பற்றிய கதைகள்தான். அவள் சொல்லும்போது தியாகராஜரின் பாத தரிசனம், அஜபா நடனம், பக்த காட்சி எல்லாம் நேரலை யாகக் கண்ணுக்கெதிரே விரியும்.

வசந்தி பெரியவளான பிறகு பாட்டி தடுமாறாமலிருக்க அவள் கை யைப் பற்றிக் கொள்வாள். இடை யிடையே கரைக்கோவில்களில் இரு வரும் அமர்ந்து இளைப்பாறுவார்கள். குளத்தின் நான்கு கரைகளைச் சுற்றித் தார்ரோடு. குளக்கரையில் ஆங்காங்கே சிறுசிறு கோவில்கள். நடுவில் ஒரு கோவில், அதுதான் நடுவணாங் கோவில். "சில்லுன்னு காத்து, பளிங்கு மாதிரி ஜலம், கண்ணுக்கெட்டற தூரத் துல கோவில். நடக்கறவாளுக்கு எக்ஸர் சைஸ், வணங்கறவாளுக்கு பக்தி. அரு மையான ஊர்டி..."

சொல்லும்போதே பாட்டியின் கண் கள் ஜொலிக்கும். ஒருமுறை குளத்துப் படிக்கட்டில் அமர்ந்திருந்தபோது,

"நீதான் நெறைய கவிதையெல்லாம் எழுதறியே. இந்தக் கொளத்தப்பத்தி ஒரு கவிதை சொல்லேன்" என்றாள் ஆவலாக. வசந்தி ஒரு நிமிடம் யோசித்துவிட்டுச் சொன்னாள்.

"எட்டும் தூரத்திலிருந்தும்
எட்டாக்கனி உனக்கு.
அத்தனை படிக்கல்லும்
ஆசனம் உனக்கு.
உன் ஏக்க சுவாசம் பட்டு
படிக்கல் சூடாக,
குளத்து நீர் ஆவியாகி,
ஒருபடி இறங்கிவிட்டது.
புரியறதா பாட்டி...?"

வசந்தி கேட்டபோது, "நான் ரெண்டாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கேன்டி. கவிதை நல்லாப் புரியறது" என்ற பாட்டி முகம் பொத்தி அழுதாள். அவள் வேதனை மனதைப் பிசைந்தது.

"கொளக்கரையில ஒக்காந்துண்டு பாட்டியும், பேத்தியும் அப்படி என்னதான் பேசுவேள்...?" என்று அப்பா ஒருமுறை கேட்டார்.

"வெட்டி அரட்டைதான், வேறென்ன... வயசானா ஓட்ட உண்டியலாட்டம் வாயும் லொடலொடங்க ஆரம்பிச்சுடுமாம். எங்க மன்னி சொல்லுவா. அது நெஜந்தான்னு இவாளப் பாத்தப்புறம் புரிஞ்சிண்டேன்."

பத்மா கிண்டலடித்தாள்.

"புருஷன் செத்தப்புறம் உசிரோட இருக்கப்படாதுடி. அந்தக் காலத்துல உடன்கட்டை ஏறுதல்ன்னு ஒரு பழக்கம் இருந்ததே. அது என் காலத்துலேயும் இருந்திருக்கப்படாதான்னு தோணறது..." அன்றிரவு பாட்டி அழுது கொண்டே சொன்னாள்.

"ஏன் பாட்டி இப்படியெல்லாம் பேசற..." என்ற வசந்திக்கும் கண்கள் கலங்கியது.

பாட்டி வீட்டு வாசலில் அமர்ந்து சாலையை வெறித்தாள். பெரிய கோவிலில் மணியடித்தது காதில் கேட்டுச் சிலிர்ப்புற வைத்தது. அப்படியே உட்கார்ந்த வாக்கிலே இரண்டு கைகளையும் உயர்த்தி கோபுரத்தைப் பார்த்துக் கும்பிடு போட்டாள்.

"சின்ன வயசுல பாவாடை தடுக்கறது பொருட்படுத்தாம கோவிலுக்கு ஓடுவேன். இப்பெல்லாம் நடக்கணும்னாலே யோசனையா இருக்கு. வயசாயிடுதோல்லியோ..."

சொன்னவள், மேலே கருடன் பறக்க பட்பட்டென்று கன்னத்தில் போட்டுக் கொண்டு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தாள்.

"தேர், தெப்பம்னா ஒரே குஷிதான். இப்பவும் மனசுல ஆசை இருக்கு. ஆனா ஒடம்புலதான் தெம்பில்ல" என்றவளுக்குச் சட்டெனக் குரல் கம்மிப் போனது.

"என்னாச்சு பாட்டி...?"

"ஆத்துல ஒன்னத் தவிர யாரும் என்னை மனுஷியா மதிக்கறதில்ல. ஒங்கப்பன்கூட என்னைக் கண்டுக்க மாட்டேங்கறான். இப்படி மத்தவா வெறுப்பைச் சம்பாதிச்சிண்டு எதுக்கு உசிரோட இருக்கணும்னு மனசு மருகறதுடி."

"என்ன பாட்டி இது... ஒனக்குத் தான் நான் இருக்கேனோல்லியோ... நீ என்னை ஒரு பொருட்டாவே நெனைக்கறதில்லையா...?"

"அசடு... ஒன்னாலதான்டி நான் இன்னமும் சுவாசிச்சிண்டிருக்கேன்."

பாட்டி பரிவுடன் வசந்தியின் கன்னங்களைத் தடவினாள். "சரி, எழுந்து உள்ள வா..." வசந்தி கூப்பிட்டாள்.

"நீ போடி. நான் சித்த ஒக்காந்துட்டு வர்றேன்" என்ற பாட்டி, பத்து நிமிடம் கழித்து அலறினாள். ஓடிப்போய்ப் பார்த்தபோது, கீழே விழுந்து கிடந்தாள். எழமுயன்றபோது புடவை தடுக்கிவிட்டிருக்கிறது. அதன்பின் பாட்டி எழவேயில்லை. எல்லாமே படுக்கையில்தான் என்றாகிப் போனது.

"வயசான காலத்துல ஓர் எடத்துல அடங்கி ஒக்காந்தோமான்னு இல்லாம அங்கேயும், இங்கேயும் உலாத்தினா கால் ஒடையாம என்ன செய்யும்."



பெரிய மனுஷத் தோரணையில் அகிலா கத்தினாள். கல்யாணச் சமயத்தில் இப்படி ஆகிவிட்டதே என்கிற எரிச்சல் அவளுக்கு. நாளாக, ஆக பாட்டி உடல் மெலிந்து, முகம் சிறுத்து ஆளே உருமாறிப் போய்விட்டிருந்தாள்.

அன்று மதிய உணவு வாயில் கொடுத்தபோது, பாட்டி வசந்தியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

"நீ நல்லாயிருப்பேடி கொழந்த... ஒனக்கு ஒரு குறையுமில்லாம அருமையான வாழ்க்கை அமையும்."

குரல் நடுங்கக் கூறினாள். மாலை காபி கொடுப்பதற்காக எழுப்பியபோது உடலில் அசைவில்லை. சரியாக நாலரைக்கு உடல் கூட்டைவிட்டு உயிர் பிரிந்து போயிருந்தது. அன்று பிரதோஷம்.

84-ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டுகள் வளர்த்து வந்தார். அது இறந்து போய்விட்டது. பூனையின் மீது அப்படி ஒரு பிரியம் அவருக்கு.

டெல்லி மார்க்கெட்டிலிருந்து எடுத்து வந்த பூனையை வீட்டில் வளர்த்து வருகிறார். அதன் மீது அவருக்குக் கொள்ளை ஆசை. அந்தப் பூனைக்கு 'மினு' என்று செல்லப் பெயர் வைத்திருக்கிறார். அவர் வீட்டுச் சுவர் முழுவதும் பூனையின் படங்கள். அவருக்கு எப்படிப் புத்தகங்கள்மீது பிரியமோ, அதுபோல இந்தப் பூனையின் மீதும் பிரியம். அந்தப் பூனைக்கு 16 வயது. அந்தப் பூனையைப் பார்க்கிறபொழுது தனது குழந்தைப் பருவம் நஸ்ரீன் மனதுக்குள் மலர்கிறது.

"நான் 16 வயது இளம் பெண்ணாக இருந்தபோதும் ஒரு பூனையை வளர்த்தேன். அதற்கும் 'மினு' என்றுதான் பெயர் வைத்தேன். ஸ்வீடனில் நான் வளர்த்த பூனை இறந்தபோது கண்ணீர் விட்டுக் கதறினேன். அந்தப் பூனை இல்லாமல் ஸ்வீடனில் வாழ முடியாது என்றுதான் ஸ்வீடனைவிட்டு வெளியேறினேன். அதேபோல கல்கத்தாவிலும் ஒரு பூனையை வளர்க்க நேர்ந்தது. ஒருவேளை இந்தியா எனக்கு அனுமதி தர மறுத்துவிட்டால், இந்தப் பூனையை எடுத்துக்கொண்டு நான் எங்கே செல்வது என்ற பயம்தான் என்னை அலைக்கழிக்கிறது. எனக்கு அனுமதி மறுப்பைவிட இதுதான் அதிகமான பயத்தை உண்டாக்குகிறது.

ஏனென்றால், பூனையை எடுத்துக் கொண்டு நான் விமானத்தில் பயணிக்க முடியாது. விட்டுவிட்டுத்தான் செல்ல வேண்டும். எப்போதெல்லாம் நான் விமானப் பயணத்தை மேற்கொண்டேனோ, அப்போதெல்லாம் எனது பூனையை நண்பர்களிடம் விட்டுச் செல்வேன். அப்படி நண்பர்கள் பராமரித்தாலும் அந்தப் பூனை சரியாகச் சாப்பிடாது. காரணம், நான் அதற்கு அருகில் இல்லை என்பதுதான். அந்த அருமை எனக்குத்தான் தெரியும்.

அந்தப் பூனை சந்தோஷமாக இருந்தால் நானும் சந்தோசமாக இருப்பேன். அந்தப் பூனை சாப்பிட்டால் நானும் சாப்பிடுவேன். ஆண்டுகள் உருண்டோடின. அந்தப் பூனை எனது சகோதரியைப் போல என்னோடு இருக்கிறது. அந்தப் பூனையின் சகோதரன் இறந்துவிட்டான், தாய் இறந்துவிட்டாள்.

இதேபோலத்தான் எனது அத்தை, பாட்டி, தாயார் இறந்துவிட்டார்கள். அதனால் என்ன? அவர்களுடைய மனித உரிமைக்காகவும் நான் தொடர்ந்து போராடி வருகிறேன்.

எப்போதும் இணையதளத்தில் எனது நேரத்தைக் கழித்து வருகிறேன். "ட்வீட்" செய்து பொழுது போக்கி வருகிறேன். அதே "ட்வீட்" மூலமாகத்தான் எனது விசாவையும் நான் நீட்டித்துக் கொள்கிறேன்."

இந்தப் படத்தில் உள்ள தனது நீலநிறப் புடவையை இணையதளத்தின் வழியாகவே வாங்கினார். அதை உடுத்திக் கொண்டதில் தஸ்லிமாவுக்கு அவ்வளவு ஆனந்தம்.

நாடு நாடாகக் கடத்தப்பட்ட தஸ்லிமாவுக்கு ஏதேனும் மன மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்தால், முன்பெல்லாம் தாய்நாட்டிற்குப் போக வேண்டுமென்ற பேராசை இருந்தது. இப்போது அதுவும் இல்லை.

தனது பெற்றோர்களை அவர் மன்னித்துவிட்டார். காரணம், அவருடைய பெற்றோர்கள் இவருக்கு



எதிர்ப்பாக இருந்தார்கள். அவர்கள் தஸ்லிமாவைச் சுதந்திரமான பெண்ணாக இருக்க வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டார்கள்.

நாடு கடத்தப்பட்ட தஸ்லிமாவுக்குத் தனிமை மிகக் கொடுமையாக இருந்து வந்துள்ளது. வெளிப்படையாகப் பேசக் கூடியவர் தஸ்லிமா.

"மெஜாரிட்டி மக்களோடு கருத்து மாறுபட்டால் போதும் நீங்கள் வேறு பட்டவராகிவிடுவீர்கள். எனது வேண்டுதல் எல்லாம் உண்மையான, சமய சமத்துவமுள்ள சமுதாயம்தான். எல்லாச் சமயத்தையும் சமமாக மதிக்க வேண்டும் என்பதுதான்."

"செக்யூலரிசம் என்பது ஒன்றை வெறுத்து, ஒன்றை விரும்புவது அல்ல. மனித உரிமைகளை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அந்தச் சமுதாயம் தான் அழகான சமுதாயம். அது எனது கனவு. அதற்காக நான் தனிமையில் தான் இருந்தாக வேண்டியுள்ளது. எங்கு போனாலும் இந்தத் தனிமை தொடர்கிறது. ஏனென்றால், சமூகத்தைப் பற்றி என்னைப் போல எண்ணுபவர்கள் வெகு சிலர்தான்.

எனது வெளிநாட்டு வாழ்க்கை 25 ஆண்டுகளைக் கடந்துவிட்டது. எனது சொந்த சுதந்திரத்தையே தியாகம் செய்துவிட்டேன். இன்னும் நான் செய்ய முடியாதவை எத்தனையோ இருக்கின்றன.

நான் டெல்லி மாநகரத்திற்குள் வெளியே போய்வர வேண்டுமானால், காவல்துறையிடம் அனுமதி பெற்றாக வேண்டும். இதுதான் இப்போது எனது நிலைமையாக உள்ளது.

நான் வசித்துக் கொண்டிருக்கும் எனது குடியிருப்பில் எப்போதும் செடி கொடிகளுக்கு மத்தியில்தான் வசித்துக் கொண்டிருக்கிறேன். பூக்கள், செடிகள் அனைத்தையும் மண் தொட்டிகளில் வைத்துப் பராமரிப்பதுதான் எனது பொழுதுபோக்கு. எப்போதும் செடிகளோடு செடியாக, பூக்களோடு பூவாக வசித்து வரும் எனக்குள் ஆனந்தம்



தஸ்லிமா நஸ்ரீன்

எப்போதும் பொங்கிக் கொண்டிருக்கிறது.

நான் எழுதுவேன், சாப்பிடுவேன். யாரைப்பற்றியும் புகார் செய்ய மாட்டேன். நான் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே நான் மரணித்து விட்டதாகப் பலர் எண்ணியதுண்டு. உண்மை அப்படி அல்ல. நான் உயிரோடுதான் இருக்கிறேன். ஆரோக்கியத்தோடு இருக்கிறேன். எழுதிக் கொண்டு இருக்கிறேன், வெளியிட்டுக் கொண்டு இருக்கிறேன். சந்தோஷமாக இருக்கிறேன், மரணிக்கவில்லை."

– ந.நி.



தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமையில் திருக்குறள் உரைநூல் வெளியீடு.

சென்னையில் 54–ஆவது ஆண்டு

‘வள்ளலார் - காந்தி விழா’

சென்னை இராமலிங்கர் பணி மன்றமும், ஏவி.எம். அறக்கட்டளையும் இணைந்து நடத்திய இந்த விழா, அக்டோபர் 1–ஆம் தேதி தொடங்கி 5–ஆம் தேதி வரை நடைபெற்றது.

தொடக்க விழாவில் இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் வரவேற்புரையாற்றினார். மாண்பமை நீதியரசர் திரு. இரா. சுரேஷ்குமார் தலைமையேற்றுச் சிறப்பித்தார். 2–ஆம் தேதி முதல் விழா பல சிறப்புகளுடன் நடந்தது. மூத்த வழக்குரைஞர் திரு. த. இராமலிங்கம் தலைமையில் கருத்தரங்கம் நடந்தது.

அருட்செல்வர் நினைவு தினம் 2–ஆம் தேதி மாலை 6 மணிக்கு மேற்கு வங்க முன்னாள் தலைமைச்



‘சுவடுகள் மறையாத பயணம்’ என்ற அருட்செல்வரின் வாழ்க்கைச் சம்பவ நூல் வெளியீடு.



முனைவர் கா. செல்லப்பன் தலைமையில்
கலீல் ஜிப்ரான் மொழிபெயர்ப்பு நூல் வெளியீடு.

செயலாளர் திரு. பி.எஸ். ராகவன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நடந்தது.

3–ஆம் தேதி கவிஞர் வ.வே.சு. தலைமையில் கவியரங்கம் நடந்தது. 6 மண்டலங்களில் நடைபெற்ற இராமலிங்கர் பணிமன்றப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா மாலையில் நடைபெற்றது.

தொடர்ந்து கவிஞர் சிற்பி பால சுப்பிரமணியம் வரவேற்புரை வழங்க, முனைவர் கா. செல்லப்பன் தலைமையில் 'இந்தியா அழைக்கிறது' மற்றும் 'கலீல் ஜிப்ரான் வாழ்க்கை வரலாறு' மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டன.

4–ஆம் தேதி சன்மார்க்கக் கருத்தரங்கம் 'பாரதியச் செம்மல்' இல. கணேசன் தலைமையில் நடந்தது. மாலை விழாவில் 'சுவடுகள் மறையாத பயணம்' என்ற அருட்செல்வர் வாழ்க்கைச் சம்பவத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

5–ஆம் தேதி சரவணப்பெருமாள் ஐயர் அவர்களின் திருக்குறள் நூல் வெளியிடப்பட்டது. தமிழவேள் சிவாலயம் திரு. ஜெ. மோகன் அவர்கள்



விழாக்குழுவினருடன் கலைநிகழ்ச்சிகளில்
கலந்து கொண்ட ஓ.பி.ஆர். கல்வி
நிறுவன மாணவ, மாணவியர்.



தவத்திரு ஊரன் அடிகளாரின்
'வள்ளலார் மறைந்தது எப்படி?'
நூல் வெளியீடு.

இதனை உருவாக்கிய சிறப்புக்குரியவ ராவார். முனைவர் அவ்வை நடராசன், முனைவர் இ. சுந்தர மூர்த்தி, தவத்திரு ஊரன் அடிகளார், தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் ஆகியோர் திருக்குறள் நூல் பற்றிச் சிறப்புரையாற்றினர்.

5–ஆம் தேதி மாலை நிறைவு விழா முனைவர் அவ்வை நடராசன் தலைமையில் நடந்தது. இந்நிகழ்ச்சியில் ஊரன் அடிகளார் எழுதிய 'வள்ளலார் மறைந்தது எப்படி?' எனும் நூல் வெளியிடப்பட்டது.

ஐந்து நாள் விழாவில் ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டது விழாவின் சிறப்பம்சமாகும். வடலூர் ஓ.பி.ஆர். கல்வி நிறுவனங்களின் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

நிறைவு விழாவில் இராமலிங்கர் பணிமன்றச் செயலர் திரு. சி. இரவீந்திரன் நன்றியுரையாற்றினார். இராமலிங்கர் பணிமன்றத் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்களும், அவர்தம் குடும்பத்தாரும் விழா நடைபெற்ற ஐந்து நாட்களும் கலந்து கொண்டது சிறப்புக்குரியது.

– ந.நி.



ஓ.பி.ஆர். கல்வி நிறுவனங்களின்
மாணவியர் நடத்திய
அற்புதமான கலை நிகழ்ச்சி.

அலைகடலே! அடியேனின் வணக்கம்

பிரதமர் நரேந்திர மோடி

அளப்பரிய, முடிவற்ற
ஒப்பில்லாத,
வர்ணனைகளைக் கடந்த,
நீலக்கடலே
உலகிற்கு உயிரளிக்கும் நீ
பொறுமையின் இலக்கணம்
ஆழத்தின் உறைவிடம்.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

வெளித்தோற்றத்திற்கு
கோபமாய், வீரத்துடன்
பேரிரைச்சலோடு எழும் அலைகள்
– உன் வலியா? வேதனையா?
துயரமா? எதன் வெளிப்பாடு?

இருந்தபோதிலும் உன்னை
கலக்கமின்றி, தடுமாற்றமின்றி
உறுதியுடன் நிற்கச் செய்கிறது
உன் ஆழம்.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

உன்னிடம் உள்ளது
எல்லையில்லாத வலிமை,
முடிவில்லாத சக்தி

ஆனாலும் பணிதலின் பெருமையை
நிமிடந்தோறும் நவில்கிறாய் – நீ

கரையைக் கடக்காமல்
கண்ணியத்தை இழக்காமல்.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

கல்வித் தந்தையாய்
ஞான குருவாய்

வாழ்க்கைப் பாடத்தை
போதிக்கிறாய் நீ
புகழுக்கு ஏங்காத,
புகலிடத்தை நாடாத
பலனை எதிர்நோக்காத
உன் பயணம் தரும்
பாடங்கள் ஏராளம்.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

நிற்காமல், சளைக்காமல்
வீசும் உன் பேரலைகள்
'முன்னேறுவதே வாழ்க்கை' என்ற
உபதேச மந்திரத்தை உணர்த்தும்

முடிவில்லாத பயணமே
முழுமையான உன் போதனை.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

விழும் அலைகளிலிருந்து
மீண்டும் எழும் அலைகள்
மறைந்து மீண்டும்
துவங்கும் உதயம்
பிறப்பு – இறப்பு
என்னும் தொடர் வட்டம்

உனக்குள் மடிந்து – பின்
உயிர்த்தெழும் அலைகள்

மறுபிறப்பின்
உணர்வூட்டம்

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

பழம்பெரும் உறவான
சூரியனால் புடமிட்ட
தன்னையழித்து,
விண்ணைத் தொட்டு
கதிரவனை முத்தமிட்டு
மழையாய்ப் பொழிந்து

நீர்நிலைகளாய், சோலைகளாய்
மகிழ்ச்சி மணம் பரப்பி
படைப்பை அலங்கரித்து –
எல்லோருக்கும் வாழ்வளிக்கும்
நீர் நீதான்.

அலைகடலே!
அடியேனின் வணக்கம்.

வாழ்வின் பேரழகு நீ –
விஷத்தை அடக்கிய
நீலகண்டன் போல் – நீயும்
எது வந்தாலும்
ஏற்றுக் கொள்கிறாய்

புது வாழ்வைப் பிறக்களித்து
சிறந்த வாழ்வின்
மறைபொருளைச் சொல்கிறாய்.

அலைகடலே
அடியேனின் வணக்கம்.





'ஓம் சக்தி' தீபாவளி மலர் - 2019 பத்திரிகைகளின் பாராட்டு!

"ஆன்மிகம், இலக்கியம், வரலாறு எனச் சிறந்த தொகுப் பாக மலர்ந்திருக்கிறது 'ஓம் சக்தி' தீபாவளி மலர். அப்பர் திருநாவுக் கரசரின் வரலாற்றை நிஜ நிகழ்வாக விவரிக்கிறது குடவாயில் பாலசுப்ரமணியனின் 'யாதும் சுவடுபடாமல்...' என்னும் கட்டுரை.

ராமகிருஷ்ண பரமஹம்சர் பற்றிய கவியோகி சுத்தானந்த பாரதியாரின் எழுத் தோவியம் பற்றிய பெ.சு. மணியின் கட்டுரை எழுத்தில் வடித்த அஞ்சலியாகும். பங்கிம் சந்திரரின் 'ஆனந்த மடம்' என்னும் தேசியப் புதினம் பற்றிய கட்டுரை, இந்தியப் பிரிவினை தொடர்பான வரலாற்றை விவரிக்கும் டி.எஸ். தியாகராசனின் 'கனவு நனவானது' கட்டுரை, பாரதப் பாரம்பரியத்தையும் தேசபக்தியையும் ஊட்டும் கல்வித் திட்டத்தை வலியுறுத்தி டாக்டர் நா. மகாலிங்கம் எழுதியுள்ள கட்டுரை அனைத்தும் கருத்துச் சுரங்கங்கள்.

மகாகவி பாரதி கையில் தடியுடன் இருக்கையில் அமர்ந்தபடி உள்ள இரண்டு படங்கள் எப்படி எடுக்கப்பட்டன எனக் கூறும் கிருங்கை சேதுபதியின் கட்டுரை பாரதி அன்பர்களுக்கு இன்ப விருந்து. இன்றைய இலக்கியச் சுவைக்கு எஸ். ராமகிருஷ்ணனின் 'வாழ்வின் தேவை' சிறுகதை நல்ல உதாரணமாகத் திகழ்கிறது."

"இந்த மலரின் முன்னுரையில், அசல் மலர்களின் வாசனை அள்ளி வீசாது, மாறாக ஆண்டு முழுவதும் கற்றுக்கொண்டு ஞானம் பெற உதவும் என்று அதன் ஆசிரியர் கூறி, சற்றுப் புதிய சிந்தனையை வைத்து இருக்கிறார்.

எடுத்த எடுப்பிலேயே 1947 ஆகஸ்டு, 15 சுதந்திரம் பெற்ற நாளில், நவகாளி யாத்திரையை மேற்கொண்ட காந்தியடிகள், அந்த நாள் பற்றி நிருபர்கள் கேட்டதற்கு, 'சொல்வதற்கு ஒன்றும் இல்லை' என்ற பதில் இன்றும், நாளையும் அர்த்தமுள்ளதாக வாசகர்கள் உணரலாம்.

அருட்செல்வர் மகாலிங்கம் கருத்தாக வந்த கட்டுரையில், 'சுதந்திரம் அடைந்த ஒரு தேசம் செய்ய வேண்டிய முதல் பணி, சுயமரியாதை உள்ள வரலாற்றை உருவாக்குவதுதான்' என்றும், 'இந்திய மயம்' என்று குறிப்பிட்டிருப்பது இன்று பேசப்படும் பொருளாக வந்திருக்கிறது.

ஒரு பத்திரிகையாளரின் கொலை, எம்.கே. தியாகராஜ பாகவதரின் வாழ்க்கையைப் படுகுழியில் தள்ளியது குறித்த ஆவணக் கட்டுரை, பொன்னீலன், மாத்தளை சோமு, கி.ரா. போன்ற சிறந்த படைப்பாளிகள் பலரது கருத்துக் கருவூலங்கள் உள்ள மலர். மலர், சிந்தனைக்கு விருந்தாக உள்ளது."

"ஆன்மிகப் பெரியோர்களின் அருள்வாக்குடன் தொடங்கும் ஓம் சக்தி தீபாவளி மலர், தெவிட்டாத இன்பம் தரும் தேனடை போன்ற படைப்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. பழனிபாரதி, ஈரோடு தமிழன்பன், முத்துலிங்கம், திருப்பூர் கிருஷ்ணன், வாமனன், சுகிசிவம், ரேவதி ராமச்சந்திரன் போன்ற பிரபலங்களின் எண்ணத்தில் உதித்த படைப்புகள் அனைத்தும் வண்ணமயமாய் மின்னுகின்றன.

தாய்மொழிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை சிற்பியின் கவிதை, பொட்டில் அறைந்தாற்போல எடுத்துக் கூறுகிறது என்றால், பள்ளிகளில் மாணவர்களிடம் தமிழறிவு மங்கி வரும் அவலத்தை 'ஐ யாம் ஏ தமிழ் டீச்சர்' கவிதை போகிற போக்கில் சொல்லிச் செல்கிறது.

சந்திரயான் – 2 திட்டத்தை விளக்கி இருக்கும் விஞ்ஞானி நெல்லை சு. முத்துவின் கட்டுரை, இஸ்ரோ அரங் கில் இருந்து அதைப் பார்த்து லயித்த பிரமிப்பை ஊட்டுகிறது. வியட்நாம் சைகோனில் அமைந்துள்ள 3 இந்துக் கோவில்களின் சிறப்பும், உதவியின் மேன்மையை எடுத்துரைக்கும் ராஜேஷ்குமாரின் 'பேசும் காகிதங்கள்' சிறுகதையும் நூலுக்கு அழகைச் சேர்த்திருக்கின்றன."

"With the country celebrating the 150th birth anniversary of Mahatma Gandhi, the Father of the Nation occupies a chunk of the printed space, in terms of articles, photographs and drawings (Ma.Se.in Om Sakthi)"


LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options
BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with
every purchase
*Free delivery with in
city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
*For purchase above RS.8000/-
condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
micromax
nothing like anything
HAVELLS
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
Crompton Greaves
USHA
BPL
EMERGENCY LIGHT
Preethi
INDUCTION
COOK TOP
EUREKA FORBES
Your friend for life
CASCADE
VENUS
WATER HEATER
D by sr printers 9843110277
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.11.2019

Regd.No.CB/016/2018-20
OM SAKTHI - DECEMBER - 2019